www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 91

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 14 சனிக்கிழமை (25/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## ஜெனிவா சென்ற இலங்கைக் குழுவுக்குள் பிளவு

கொழும்பு, பெப்.25

சர்வதேசத்தின் அழுத்தங்களுக் குப் பதிலடி கொடுப்போம் என ஜெனிவா விரைந்த அமைச்சர்கள், அதிகாரிகள் தற்போது தமக்குள்ளே ஏற் பட்ட கருத்து முரண்பாடு காரணமாக இரு குழுக்களாகப் பிரிந்து முட்டி மோதிக்கொள்கின்றனர் என்று ஐக் கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. அமைச்சர்களின் தராதரமற்ற இந்தச் செயலானது சர்வதேச மட்டத்தில் நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் வெளிக்கிளம்புகின்ற இலங் கைக்கு எதிரான பிரேரணைக்குப் பிளவுபட்டுள்ள அமைச்சர்கள் குழு வால் பதில் கூற முடியுமா என ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வியெழுப்பியுள் ளார்.

எதிர்க்கட்சித் தலை 23

# இலங்கை அரசை கைவிட்டது டில்லி

### கொழும்புக்கு ஆதரவு திரட்டித்தர மறுப்பு

கொழும்பு, பெப்ரவரி 25

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை யில் தனக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையைத் தோற் கடிக்க உதவுமாறு இலங்கை அரசு இராஜ தந்திர மட்டத்தில் இந் தியாவிடம் விடுத்த வேண்டுகோளை புது டில்லி நிராகரித்துள் ளது என நம்பகரமாகத் தெரியவருகிறது.

ஜெனிவா மாநாடு நெருங்கிவரும் நிலை யில், அவசரமாகக் கொழும்பிலிருந்து புதுடில்லிக்குச் சென்ற உயர்மட்ட இராஜதந் திரிகள் குழுவொன்று, அந்நாட்டின் உயர்மட் டத் தூதுக்குழுவிடம் விடுத்தவேண்டுகோளை சாதகமான முறையில் பரிசீலிப்பதற்கு இந் தியா மறுத்துவிட்டது என்று அறியமுடிகின் றது.

ஜெனிவாவில் இலங் கைக்கு எதிரான பிரே ரணையை ஆதரிப்ப தற்கு பலம்பொருந்திய நாடுகள் சில தீர்மானத் துள்ளமையை அடுத்து 23

## இறுதி உயிரிழப்புகள் 10,000

### அரசின் கணிப்பீடுகளில் தகவல்

கொழும்பு, பெப்ரவரி 25

வன்னியில் இறுதிக்கட்டப் போரில் 10,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் இருந்து தெரியவந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் தேசிய சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தினால் ஆசிரியர்களைக் கொண்டு வடக் கில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி வெளியிடப் பட்ட அறிக்கையில் இருந்தே இந்த விவரம் வெளியாகி உள்ளது.

இந்தக் கணக்கெடுப்பின்படி 7,400 பேர் போரில் நேர டியாகக் கொல்லப்பட்டனர் என்பது உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கணக்கெடுப்பில் ''வேறு'' என்று குறிப்பிடப்பட்ட காரணத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையே இது. மேலும் 2009ஆம் ஆண்டு முழுவதும் 2,600 பேர் காணாமல் போயிருக்கிறார்கள் என்றும் அந்த கணக் கெடுப்புக் காட்டுகிறது.

இவர்களில் எவரும் நோயாலோ, இயற்கையாகவோ, விபத்துக்களாலோ, தற்கொலையாலோ இறக்கவில்லை என்பதை அந்தக் கணக்கெடுப்பு உறுதிப்படுத்துகிறது. இருப்பினும் இவர்கள் அனைவரும் 2009ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுக்குள் உயிரிழந்துள்ளனர். எனவே இவர்கள் போரில் நேரடியாகக் கொல்லப்பட்டவர்கள் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

உயிரிழந்தவர்களில் பெரும் எண்ணிக்கையானவர் கள் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே என்று இந்தக் கணக்கெடுப்புக் காட்டுகிறது.

அரசின் இந்த அறிக்கையில் உயிரிழந்தவர்களில் விடு தலைப் புலிகள் இயக்கப் போராளிகளும் உள்ளடக்கப் பட்டுள்ளனரா என்ற விளக்கம் தரப்படவில்லை. அதே போன்று இவர்கள் யாரால் கொல்லப்பட்டார்கள் என்றும் தெரியவரவில்லை.

''ஒரு பொதுமகன்கூடப் போரில் கொல்லப்படவில்லை'' கோஷத்தில் இருந்து சிலர் கொல்லப்பட்டிருக் கலாம் என்று அரசு கூறியதை இந்தக் 23



எரிபொருள், அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற் றின் விலை உயர்வைக் கண்டித்துக் காரைநகர் பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று மாட்டு வண்டியில் சபைக்குச் சென்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் உறுப்பினரும் உபதலைவருமான ச.துர்க்கேஸ் வரன், ஐ.தே.க. உறுப்பினரான க.பாலச்சந்திரன் ஆகி யோர் மாட்டு வண்டியில் பயணிக்கின்றனர்.

## அமெரிக்காவுக்கு ஆதரவு அலை

கொழும்பு, பெப்.25

ஜெனிவாவில் எதிர் வரும் 27 ஆம் திகதி தொடங்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேர வைக் கூட்டத்தொடரில் கொண்டு வரப்படவுள்ள இலங் கைக்கு எதிரான பிரேரணை யைப் பிரிட்டன், கனடா, நோர்வே, கமரூன் ஆகிய நாடுக ளும் ஆத ரிக்கப்போவதாக அறிவித்துள் ளன.

இதனால், ஜெனிவாவில் அமெரிக்காவுக்கு அமோக ஆத ரவு அலை வீசு கிறது. 23

## உருப்படியான செயல்திட்டம் இலங்கையிடம் இல்லை

**அமெரிக்கா கண்டனம்**

வாஷிங்ரன், பெப். 25

கற்றுக்கொண்ட பாடங் கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானபோது, நல்லிணக் கத்தை ஏற்படுத்துதல் மற் றும் பொறுப்புக்கூறல் விவ காரத்தில் இலங்கை அரசு தன்னுடைய செயல்திட்டம் என்ன என்பதை விவரமாக அறி விக்கும் என்று அமெரிக்கா நம்பியிருந்தது. ஆயினும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரை களை எப்படி நடைமுறைப் படுத்தப்போகிறது என்பது குறித்த எந்தவொரு உறுதி யான திட்டத்தையும் இலங்கை அரசிடம் இன்றுவரை காண முடியவில்லை. இதனாலேயே நல்லிணக்கத்துக்கான முக் கியமான நடவடிக்கைகளை எடுக்கக்கோரும் தீர்மானம் ஒன்றை ஜெனி வாவில் 24

## போரை வென்றுள்ள இலங்கை அமைதியை வெல்லவேண்டும்

### சொல்ஹெய்ம் கருத்து

ஒஸ்லோ,பெப்.25

இலங்கை அரசு போரில் வெற்றி பெற்றிருக்கின் றது. இருந்த போதிலும் அங்குசமாதானத்தை ஏற் படுத்த வேண்டிய தேவை உள்ளது. இலங்கைத் தீவில் தமிழர்களும் சிங்களவர் களும் எவ்வாறு சமாதான மாக வாழ முடியும் என்ப தற்கான நீண்ட காலத் திட்டம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்க் கின்றது என நோர்வே யின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் சொல் 23

## ஐரோப்பிய ஒன்றியமும் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.25

எதிர்வரும் 27 ஆம் திகதி ஜெனிவாவில் நடை பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங் கைக்கு எதிரான பிரே ரணை சமர்ப்பிக்கப்படு [illegible] சில நாள் களே உள்ள நிலையில், இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்து ரைகளை விரைவாக நடை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று ஐரோப்பிய ஒன் றியம் வலியு றுத்தியுள்ளது. 23

## சவேந்திராவின் நீக்கம் சரியானது



ஐக்கிய நாடு களின் அமைதி காப்புப் படை களுக்கான ஆலோசனைக் குழுவில் இருந்து இலங்கை யின் பிரதி நிரந் தர வதிவிடப் 23

### ஷிராந்திக்கும் அழைப்பு

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றுக்கு எதி ரான தமது போராட்டத்தில் முதல் பெண்மணியான ஷிராந்தி ராஜபக்ஷவை இணையுமாறு பெண்கள் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. இப்பெண்கள் அமைப்பானது நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்க, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா, காணா மல் போயுள்ள ஊடகவியலா ளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட ஆகியோருடன் இன்னும் பல பெண்கள் இணைந்து உருவாக் கப்பட்டுள்ளது.

### கடத்தப்பட்ட சிறுமி மீட்பு

புத்தளம் முந்தல் பகுதியில் நேற்றுமுன்தினம் கடத்தப் பட்ட மூன்றரை வயதுச் சிறு மியை பொலிஸார் நேற்று மீட்டனர். சிறுமியின் தாயிடம் இருந்து 15 லட்சம் ரூபா பணத் தைக் கடத்தல்காரர்கள் பெற வந்தபோது பொலிஸார் அவர் களை மடக்கினர். சிறுமியின் அண்ணன் முறை உறவினர் ஒரு வரும் பெண் ஒருவருமே கடத் தலில் ஈடுபட்டவர்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர். சிறுமியின் தந்தை விடயத்தைக் கேள்விப்பட்டு இத்தாலியில் இருந்து அவசரமாக நாடு திரும்பியிருந்தார்.

### இலங்கைப் பெண் ஆஸியில் கொலை

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் மனைவியைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைச் சேர்ந்த 50 வய தான நபர் ஒருவரைப் பொலி ஸார் கைது செய்துள்ளனர். பேர்த் நகரின் சுற்றுப்புறத்தில் உள்ள வில்லிற்றன் பகுதியில் உள்ள வீதியில் இவர்கள் வசித்த வீட்டில் இருந்து 46 வயதான பெண்ணின் சடலம் நேற்றுமுன் தினம் பிற்பகல் 1.30 மணியள வில் மீட்கப்பட்டது. கணவன் மனைவிக்கு இடையில் ஏற் பட்ட கருத்து முரண்பாட்டை அடுத்தே இந்தக்கொலை இடம் பெற்றதாக கூறப்படுகிறது.

### பாணின் விலையும் அதிகரித்தது

பாணின் விலை நேற்று நள் ளிரவு முதல் ஐந்து ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. எரிபொருள் விலை ஏற்றத்தைத் தொடர்ந்து பாணின் விலையை அதிகரிப் பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என ஏற்கனவே அகில இலங்கை பேக்கரி உரி மையாளர் சங்கம் தெரிவித்திரு ந்தது. இதுவரை 50 ரூபாவாக விற்ற பாண் இன்று முதல் 55 ரூபாவாக விற்கப்படும்.

### பால்மா விலை அதிகரிக்கும்

பால்மா இறக்குமதியாளர்கள் பால்மாவின் விலையை அதி கரிப்பது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபைக்கு விடுத்த கோரிக்கையை ஆராய்ந்து வருவதாக நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார். 450 கிராம் பால்மாவின் விலையை 15 ரூபா வினால் அதிகரிப்பதற்குக் கோ ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேரணை வேண்டாம்; கால அவகாசம் தாருங்கள் நவநீதம்பிள்ளையிடம் கெஞ்சியது இலங்கைக்குழு

## ஜெனிவாவில் 70 வெளிநாட்டுத் தூதர்களுக்கு விருந்தளித்து மன்றாடினர் அமைச்சர்கள்

> “குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தவறின் சர்வதேசத்தின் எந்தவொரு நடவடிக்கைக்கும் தாம் இணங்குவர் என்றும் உறுதியளித்துள்ளது.”

கொழும்பு, பெப்.25

நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் தருமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ள இலங்கை அமைச்சர்கள் குழாம், குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தவறின் சர்வதேசத்தின் எந்தவொரு நடவடிக்கைக்கும் தாம் இணங்குவர் என்றும் உறுதியளித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொள்ள ஜெனிவா சென்றுள்ள இலங்கை அமைச்சர்கள் குழாம் நேற்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரொருவர் ஜெனிவாவிலிருந்து பிரத்தியேகமாக உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை நேற்று முதல்கட்டமாக சந்தித்துப் பேச்சு நடத்தினோம். சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இப்பேச்சில் அரசின் நல்லிணக்க செயற்பாடுகள், தமிழர் விவகாரம் உட்பட இலங்கையின் தற்போதைய சமகால அரசியல் விவகாரங்கள் குறித்துப் பேசினோம்.

இதன்போது, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் கால அவகாசம் கோரினோம். அத்துடன், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சிபாரிசுகளை அமுல்படுத்த தவறின் சர்வதேச சமூகம் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாம் இணங்கத் தயார் என்றும் உறுதியாகக் கூறினோம்.

இதற்குப் பதிலளித்த ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, உங்களது கோரிக்கையை உரிய இடத்துக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுப்பேன் என்றும், எனினும் என்னால் இது குறித்து உறுதிமொழி எதனையும் வழங்க முடியாது என்றும் திட்டவட்டமாக எம்மிடம் கூறினார்.

இந்தச் சந்திப்பையடுத்து, நாம் ஜெனிவாவிலுள்ள சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு தூதுவர்களைச் சந்தித்தும் இலங்கை விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்தினோம்.

இச்சந்திப்புகளில் அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, ஜி.எல்.பிரீஸ், டக்ளஸ் தேவானந்தா, ரவூப்ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கலந்துகொண்டனர் என்று மேற்படி அமைச்சர் தெரிவித்தார்.

### டிராக்டரில் சூடு அடித்தவர் சில்லில் நசியுண்டு சாவு

தென்மராட்சி, பெப்.25

மிருசுவில், விடத்தற்பளை பகுதியில் வயலில் சூடு அடித்துக் கொண்டிருந்த சமயம் டிராக்டரின் சாரதி கீழே விழுந்து சில்லுக்குள் நசியுண்டு மரணமானார். காப்பாற்றச் சென்ற ஒருவரும் காயமடைந்தார்.

நேற்றுமாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கிராம அலுவலரான கந்தையா நடராசமூர்த்தி (வயது-65) என்பவரே மரணமானார்.

சுழன்று கொண்டிருந்த டிராக்டரை நிறுத்தச் சென்ற ஒருவர் கீழே கிடந்த தகரம் காலில் பலமாக வெட்டியதில் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சூடு அடித்துக் கொண்டிருந்த நடராசமூர்த்தி மயக்கமடைந்து சரிந்து விழுந்தார் என்றும் அவ்வேளை சில்லுக்குள் சிக்கிய அவர் அந்த இடத்திலேயே மரணமானார் என்றும் அங்கு பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர். (ஓ-10-9)



ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்ற முயற்சி எடுத்துவருவதைக் கண்டித்து குருநாகல் மாவட்ட முஸ்லிம் அமைப்புக்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்க ஜனாதிபதியின் உருவப் பொம்மையையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டுக் கொளுத்தினர். (உ-323)

# ஜெனிவா குகைக்குள் இலங்கை ஒருபோதும் மண்டியிடக்கூடாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

> சிங்கத்தின் நாமத்தைப் பெற்ற இலங்கை, ஜெனிவா குகைக்குள் சிங்கம் போன்று வீரத்துடன் செயற்பட வேண்டுமே தவிர கோழைத்தனத்தில் மண்டியிடக்கூடாது.

கொழும்பு, பெப்.25

மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படவுள்ளதாகக் கூறப்படும் தீர்மானத்தைப் பாதுகாப்புச் சபைக்கு அனுப்பி, அதனூடாக இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு இழுக்கும் முயற்சியில் மேற்குலகம் இறங்கியுள்ளதால், அரசு தனது இராஜதந்திர நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டும் - என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அரசுக்கு மந்திராலோசனை வழங்கியுள்ளது.

சிங்கத்தின் நாமத்தைப் பெற்ற இலங்கை, ஜெனிவா குகைக்குள் சிங்கம் போன்று வீரத்துடன் செயற்பட வேண்டுமே தவிர கோழைத்தனத்தில் மண்டியிடக்கூடாது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஜெனிவா தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்கப்போவதாக அமெரிக்கா வெளிப்படையாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஒட்டுமொத்த சிங்கள மக்களும் அரசுடன் இருக்கின்றனர் என்ற துணிகரமான நம்பிக்கையுடன் ஜெனிவாவில் எத்தகைய சவால்கள் வந்தாலும் அரசு துணிகரமாக முகங்கொடுக்க வேண்டும்.

சிங்கத்தின் நாமத்தைப் பெற்ற நாம் வீரத்துடன் செயற்படவேண்டுமே தவிர மண்டியிடக்கூடாது.

இலங்கைக்கு எதிராக செயற்படுவதையே மேற்குலகம் இன்று வெளிநாட்டுக் கொள்கையாகக் கடைப்பிடித்து வருகின்றது. அதற்கு எதிராக அரசு இராஜதந்திர மட்டத்தில் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு சதி முயற்சிகளைத் தோற்கடிக்க வேண்டும்.

ஜெனிவாவில் தீர்மானமொன்றை நிறைவேற்றி, அதனை பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்து, அதனூடாக இலங்கையை யுத்தக் குற்றவியல் நீதிமன்றத்திற்கு இழுப்பதற்கே மேற்குலகம் முயற்சிக்கின்றது. இதற்கு இடமளிக்கக்கூடாது; தொடர்ந்து போராடவேண்டும்; நாம் போராடுவோம்.

இதுதொடர்பாக நாடளாவிய ரீதியில் மக்களுக்கு நாம் தெளிவுபடுத்தி வருகின்றோம். எமது நடவடிக்கை தொடரும் - என சூளுரைத்தார் குணதாச அமரசேகர. (சி)

# சிறுமி மீது பாலியல் இம்சை: தந்தைக்கு நேற்றுப் பிணை

யாழ்ப்பாணம், பெப்.25

8 வயதுச் சிறுமியை பாலியல் இம்சைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஒரு வருட காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிறுமியின் தந்தைக்கு யாழ். நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியது.

விளக்கமறியல் காலத்தில் சந்தேகநபருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பெண் ஒருவரே அவரைப் பிணை எடுத்துள்ளார். எனினும் பிணைக்கு கையெழுத்திட பொருத்தமான நபர்கள் உடன் கிடைக்காததால் சந்தேக நபர் தொடர்ந்தும் சிறையிலேயே உள்ளார்.

சந்தேகநபர் விளக்கமறியலில் இருந்த காலப்பகுதியில் அவரது முதல் மனைவி இன்னொருவருடன் ஓடிச் சென்று திருமணம் செய்துவிட்டார்.

பாதிக்கப்பட்ட 8 வயதுச் சிறுமி சிறுவர் நம்பிக்கை இல்லம் ஒன்றில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறார்.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிணை வழங்கப்பட்டது.

கடந்த வருடம் மார்ச் மாதம் கோப்பாயில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகவே சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். சந்தேக நபர் ஏற்கனவே செய்த குற்றத்துக்காக பலவருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார்.

சிறைத்தண்டனையை நிறைவு செய்து கோப்பாயில் உள்ள தனது வீட்டுக்குச் சென்ற அவர், தனது 8 வயதுச் சிறுமியை பாலியல் இம்சைக்கு உள்ளாக்கினார். முறைப்பாடு கிடைக்கப்பெற்றதையடுத்து பொலிஸார் அவரைக் கைது செய்து மன்றில் முற்படுத்தினர். (உ-10-4)

### கைப்பேசியில் 'அந்தப்படம்' சிக்கினார் அச்சுவேலி வாசி

ஆபாசப்படம் வைத்திருந்தார் என்று கூறப்படும் அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவர் வல்வெட்டித்துறை பொலிஸாரின் திடீர் சோதனையின் போது சிக்கிக் கொண்டார்.

தொண்டமானாறு பகுதியில் வீதிக்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இரும்பு கடத்துவதாகச் சந்தேகித்து குறித்த சந்தேக நபரைச் சோதனை செய்துள்ளனர். அப்போது பொலிஸார் இவரின் கைத்தொலைபேசியைப் பரிசீலித்த போது அதில் ஆபாசப் படங்கள் இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார் என்று வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் அ.க.நடராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஓ-15)

### வீதியில் இடையூறு பறந்தது ரூ.20 ஆயிரம்

யாழ்ப்பாணம், பெப்.25

மதுபோதையில் நின்ற இளைஞர்கள் வீதியால் சென்றவர்களுக்கு இடையூறு விளைவித்ததனால் அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குருநகரிலுள்ள விளையாட்டுக்கழகம் ஒன்றில் நின்ற எட்டுப் பேரே நேற்றுமுன்தினம் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டு இரவு 8 மணியளவில் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர். விசாரணையின்போது சந்தேக நபர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்த ஒவ்வொருவருக்கும் ரூபா 2 ஆயிரத்து 500 வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ஓ-4)

# போக்குவரத்து மீறல், சூழல் அசுத்தம்; 23 பேருக்கு அபராதம் ரூ.33,500

யாழ்ப்பாணம், பெப்.25

போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை மற்றும் சூழலை அசுத்தம் செய்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 23 பேருக்கு யாழ். நீதிமன்றம் 33ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்டவர்களே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். சந்தேக நபர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இந்த அபராதத் தொகை விதிக்கப்பட்டது.

உரிய ஆவணங்கள் இன்றி, தலைக்கவசம் இன்றி வாகனம் செலுத்தியமை, கைத்தொலைபேசியில் உரையாடியபடி வாகனம் செலுத்தியமை, ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்தியமை மற்றும் கல், மண் என்பவற்றை வீதிகளில் கொட்டி போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமை, வீட்டுக் கழிவு நீரை வீதிக்குச் செல்லவிட்டமை. நடைபாதை வியாபாரம் செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (ஓ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எதிர்வினை எவ்வாறு அமையும்?

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டுக்கான நாள்கள் நெருங்க நெருங்க, இலங்கை விவகாரம் சர்வதேச அரங்கில் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. அவற்றில் ஆகப் பிந்தியது, ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான சிறப்பு ஆலோசணைக் குழுவில் இருந்து நீக்கப்பட்டமை.

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரும் நாடுகளே சவேந்திர சில்வாவின் நியமனத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தன. சவேந்திர சில்வா அதிரடியாக நீக்கப்பட்டமை இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்த நாடுகளுக்கு கிடைத்த முதலாவது வெற்றி எனலாம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்காற்றியவர் சவேந்திர சில்வா. புலிகளின் பலம்வாய்ந்த கோட்டைகளான மன்னார், பூநகரி, கிளிநொச்சி, முல்லைத்தீவின் நந்திக் கடல் வரை புலிகளுடன் போரிட்ட 58ஆவது படையணியின் தளபதியாக விளங்கியவர் அவர்.

ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான சிறப்பு ஆலோசனைக் குழுவுக்கு அவர் ஆசிய நாடுகள் சார்பாக நியமிக்கப்பட்ட வேளை, போர்க்குற்றம் சாட்டப்பட்டவரை எவ்வாறு ஐ.நாவின் முக்கிய பதவி ஒன்றுக்கு நியமிக்க முடியும் என்று கேள்வி எழுப்பப்பட்டது.

சவேந்திர சில்வாவின் நியமனத்துக்குத் தாம் பொறுப்பு அல்ல என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் கைவிரித்துவிட்டிருந்த நிலையிலேயே, இந்தப் பதவிநீக்கம் இடம்பெற்றுள்ளது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற சிறப்பு ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் சவேந்திர சில்வா கலந்துகொண்ட போதும், அவருடன் எவரும் பேசவில்லை. ஆவணம் எதுவும் அவரிடம் கையளிக்கப்படவுமில்லை. அவமானத்துடனேயே அவர் வெளியேறினார்.

ஜெனிவா மாநாட்டில், கொண்டுவரப்படவுள்ள தனக்கு எதிரான பிரேரணையைத் தோற்கடிப்பதற்காக, கடந்த பல வாரங்களாக முழு அளவிலான ராஜதந்திர நடவடிக்கைகளில் இலங்கை ஈடுபட்டுவந்தது. சவேந்திர சில்வாவின் நீக்கம் இலங்கைக்கு அதிர்ச்சி அளித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றுவதில் அமெரிக்கா முழுமூச்சுடன் செயற்பட்டு வருகிறது.

ஜெனிவா மாநாடு ஆரம்பமாகும் நாளை மறுதினம், 27ஆம் திகதியன்று கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்த அரசு ஏற்பாடு செய்வதால், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேறுவதைத் தடுக்க முடியாது என்று அது உணர்ந்துள்ளதாகக் கருதலாம்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்குப் பதில் அளிக்கும் வகையில், இலங்கையினால் தயாரிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஜெனிவா மாநாட்டில் சமர்ப்பிப்பதில்லை என்று இலங்கை எடுத்த முடிவு இலங்கையின் பலவீனத்தின் வெளிப்பாடு என்கின்றனர் அரசியல் அவதானிகள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜெனிவா மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டால், அதனை அமுல் செய்யும்படி மாநாடு தீர்மானம் நிறைவேற்றும். அதற்கான காலக்கெடுவையும் விதிக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கும் உறுதிமொழிகள் போன்று ஜெனிவா மாநாட்டில் வெறும் உறுதிமொழிகளை வழங்கிச் சுழிக்க முடியாது. உறுதிமொழி வழங்கினால் குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேற்றியே தீரவேண்டும்.

பொதுமக்களுக்கு மரணம், காயம் ஏற்படுத்தப்பட்டமை, சரணடைந்த பின்னர் காணாமற்போனமை ஆகியவை குறித்து இராணுவத்தின் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், சனல் - 4 தொலைக்காட்சித் தொடர், நாடு முழுக்க காணாமற்போனோர் ஆகியவை குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் -

அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து, இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கல் மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும் என்றும் -

காணி பற்றிய கொள்கை மூலம் ஒரு மாகாணத்தின் மக்கட்தொகையியலை மாற்றி அமைக்க முடியாது என்றும் - நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துமா?

காலக்கெடு முடிந்த அடுத்தநாளே சர்வதேசம் வந்து கதவைத் தட்டும். காலக்கெடு விதித்தாலும், விதிக்காவிட்டாலும் அரசு மேற்குறிப்பிட்ட சிபார்சுகளை எந்தக் கட்டத்திலும் நிறைவேற்றப் போவதில்லை. ஜனாதிபதி விரும்பினாலும் அமைச்சரவையில் உள்ள பேரினவாதிகள் தடுத்துவிடுவார்கள்.

அதனைப் புரிந்துகொண்டே, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விவாதிக்கப்படாமலேயே அதன் சிபார்சுகளை அமுல் செய்யக் கோரும் பிரேரணை ஜெனிவா மாநாட்டுக்கு வரப்போகிறது.

ஜெனிவா மாநாடு ஆரம்பமாக உள்ள வேளையில், சவேந்திர சில்வா ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிறப்பு ஆலோசனைக்குழுவில் இருந்து நீக்கப்பட்டமை ஜெனிவா மாநாட்டில் இலங்கை எதிர்நோக்கவுள்ள நெருக்கடிகளைக் கோடி காட்டுகிறது.

நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கான எதிர்வினை, எவ்வாறு அமையும் என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். வேறு எதனைச் சொல்ல...?

# வடக்கு ஆசிரியர் இடமாற்றம் மார்ச் மாதத்தில் நடைபெறுமா?

### பட்டியல் இதுவரை வெளியாகவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.25

வடமாகாணத்தில் ஒத்திவைக்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றங்கள் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வருமா என்ற சந்தேகம் ஆசிரியர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

வடமாகாண ஆளுநர் தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

தேசிய ரீதியாக ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் ஜனவரி முதலாம் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் யாப்பு விதியாகும். எனினும் வட மாகாணத்தில் மட்டும் விதி விலக்காக, ஆசிரியர் இடமாற்றங்கள் மார்ச் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

அவ்வாறு மார்ச் மாதத்தில் ஆசிரியர் இடமாற்றத்தை நடைமுறைப் படுத்துவதாயின் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களது விவரங்கள் வட மாகாண சபை இணையத்தளமூடாக வெளிப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இது வரை ஆசிரியர்கள் விவரப் பட்டியல் வெளியிடப்படவில்லை. இதனால் மார்ச் முதலாம் திகதியிலும் ஆசிரியர் இடமாற்றங்கள் நடைமுறைப் படுத்தப்படாமல் ஒத்திவைக்கப்படுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

தீவகம் மற்றும் வன்னிப் பகுதியில் மிக நீண்ட காலமாக சேவையாற்றி வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களே இந்தச் சந்தேகத்தை வெளியிட்டுள்ளனர்.

அரசியல் தலையீடுகள் எதுவுமின்றி இந்த ஆசிரியர் இடமாற்றல்கள் மார்ச் மாதத்தில் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-3)

# இடமாற்றம் பெற்ற ஆசிரியை மீண்டும் பழைய பாடசாலைக்கு

### ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,பெப்.25

நீண்ட காலமாக ஒரே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களை வேறுபாடசாலைகளுக்கு உள்வாரியாக இடமாற்றம் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியை ஒருவரை யாழ். கல்வி வலயத்தில் மீண்டும் பழைய பாடசாலைக்கு இடமாற்றம் செய்திருப்பது யாழ்.மாவட்ட ஆசிரியர் இடமாற்ற வேலைத்திட்டத்தில் குளறுபடியை ஏற்படுத்தியிருப்பதோடு வடக்கு மாகாண ஆளுநர், ஆசிரியர் தொழிற்சங்கத்துக்கு வழங்கிய வாக்குறுதியும் மீறப்பட்டுள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கம் கண் டனம் தெரிவித்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாகவடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் யோசேப் ஸ்ராலின் தெரிவித்தாவது:-

"யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நீண்ட காலம் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களை உள்வாரியாக குறித்த கல்விக் கோட்டம் வலயத்துக்குள்ளே இடமாற்றம் செய்வது என்ற வகையில் 7 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள் 2010 ஆம் ஆண்டு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

''இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களைக் குறித்த பாடசாலைகளுக்கு மீண்டும் இடமாற்றம் செய்யக்கூடாது என்பது கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்கப்படும்'' என ஆசிரியர் தொழிற்சங்களுடனான சந்திப்பின் போது ஆளுநர் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

இவற்றை மீறும் வகையில் யாழ். கல்வி வலயத்தில் கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள மகளிர் கல்லூரியில் 15 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து கடமையாற்றி உள்வாரியாக இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியை ஒருவரைக் கடந்த வாரம் மீண்டும் அதே கல்லூரிக்குத் திருப்பி அழைத் துள்ளமை ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஆசிரியர்களையும் உளத்தாக்கத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். பொருத்தமான நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை எதிர்பார்த்துள்ளோம்.'' என்றார்.

(த-11)

# கடந்த ஆண்டு 2,350 பேர் வாகன விபத்துக்களில் மரணம்

கொழும்பு,பெப்.25

கடந்த ஆண்டில் வாகன விபத்துக்கள் காரணமாக 2 ஆயிரத்து 350 பேர் உயிரிழந்துள்ளதாக வாகன விபத்துக்கள் தொடர்பான நாடாளுமன்ற செயற்குழுவின் தலைவரான சிரேஷ்ட அமைச்சர் பீ.தயாரத்ன தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டு காலத்துக்குள் வாகன விபத்துக்களால் 20 ஆயிரம் பேர் வரையில் மரணமடைந்துள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் மாத்திரம் வாகன விபத்துக்கள் காரணமாக 112 பேர் மரணமடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் வாகன விபத்துக்கள் காரணமாக நாளொன்றில் ஆறு முதல் ஏழு பேர் வரை மரணிப்பதாகவும், கடந்த ஆண்டில் போக்குவரத்துத் தொகுதியில் ஐந்து லட்சம் வாகனங்கள் இணைந்து கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-22)

# பட்டதாரி ஆசிரியர் சங்கம் மார்ச் 8 இல் உண்ணாவிரதம்

### சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி

கொழும்பு,பெப்.25

பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் மார்ச் 08 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் பத்தரமுல்லையிலுள்ள கல்வியமைச்சின் முன்றலில் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வதற்கு அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் நீண்டகாலமாக நிலவி வருகின்ற போதும் அதற்கான தீர்வொன்றை வழங்க கல்வியமைச் [illegible] எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த உண்ணவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ஈ.எம்.ஜே.எஸ். சேரம் தெரிவித்தார்.

கல்வியமைச்சின் செயலாளருடன், இது தொடர்பாகப் பல தடவைகளாக மேற்கொள்ளப்பட்டுள்ள பேச்சுக்களின் போது பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் நீக்கப்படுமென அவர் உறுதியளித்ததாக சங்கச் செயலாளர் சேரம் மேலும் கூறினார்.

இதற்கமைய கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி இந்தச் சிக்கலுக்குத் தீர்வு வழங்கப்படுமென கல்வியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டதாக அவர் தெரிவித்தார். (த-22)

# நிகழ்வுகள் இன்று

### துணி வழங்கல்

அரியாலை சமூக அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இலவச துணி வழங்கும் நிகழ்வு முற்பகல் 10மணிக்கு அரியாலை கிழக்கு பூம்புகார் கடைக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

(த-14)

### மீலாதுண் நபி விழா

முல்லைத்தீவு மாவட்ட பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில் மீலாதுன் நபி இஸ்ரா அல்லாஹ் விழா இன்று தண்ணீரூற்று மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(த-14)

### இறுவட்டு வெளியீடு

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் ஏற்பாட்டில் மாவை வேலாயுதன் இசை இறுவட்டு வெளியீட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

(த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்களில் பாட்டுப்பாடி பிச்சை எடுக்கின்றனர் பட்டதாரிகள் நிலைபற்றி நாடாளுமன்றில் கருத்து

அரச சேவையில் பட்டதாரிகளைப் பயிலுனர்களாக இணைத்துக் கொள்வதற்கான பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்ட தினத்துக்கு முன்னரே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் 40 ஆயிரம் பட்டதாரிகள் தொழிலின்றி இருக்கும் போது அரசியல்வாதிகளின் பரிந்துரைப் பட்டியலின்படி இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை வன்மையாகக் கண்டிப்பதாக ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

சபாநாயகரின் அனுமதியுடன் அனுரகுமார திஸாநாயக்க சபையின் கவனயீர்ப்பு விசேட கூற்று ஒன்றை முன்வைத்தார். கடந்த 2012 பெப்ரவரி 16 ஆம் திகதி பத்திரிகைகளில் அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான அரசாங்க அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இந்த அறிவித்தலின் படி பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளும் பட்டதாரிகள் தமது விண்ணப்பங்களை 2012 மார்ச் 30 ஆம் திகதிக்கு முன் தத்தமது மாவட்ட பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதாவது விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதி மார்ச் 30 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் பத்திரிகைகளில் விளம்பரம் செய்த திகதிக்கு முன்னரே சில மாவட்டச் செயலகங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு அன்றைய தினமே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நியமனங்கள் அரசியல் வாதிகளின் பரிந்துரைப் பட்டியலின் படியே வழங்கப்பட்டுள்ளன. இது அரசசேவைக்கு ஆள் சேர்ப்பதற்கான அடிப்படை விதிமுறைகளையும், நடைமுறைகளையும் மீறும் செயலாகும்.

விண்ணப்பங்கள் கோரப்பட்டால் போட்டிப் பரீட்சைகளின் பின் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்ட பின்னரே தகுதியானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவது தான் விதிமுறை. ஆனால் இங்கு அவை எல்லாம் மீறப்பட்டுள்ளன.

### 40 ஆயிரம் பட்டதாரிகள் தற்போது நடுத்தெருவில்

இப்போது வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட நாடெங்கிலும் 40 ஆயிரம் பட்டதாரிகள் தொழில் வாய்ப்பின்றி நடுத்தெருவில் நிற்கின்றனர். ஜனாதிபதி ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத் திட்டத்தின் பின் மேலும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் என்று கூறுகிறார். ஆனால் இன்று வரையிலும் எதுவும் இடம்பெறவில்லை.

### பஸ்களில் பாட்டுப்பாடி பணம் பெறும் பட்டதாரிகள்

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பட்டம் பெற்று வெளியேறிய பட்டதாரிகள் இன்று பொருத்தமான தொழில் கிடைக்காததால் பஸ்களில் பாட்டுப்பாடி பிச்சையாகப் பணம் சேர்த்து வாழ்க்கையை நடத்தும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். முன்பு 40 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளாக இருந்த பட்டியல் வருடாவருடம் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளின் வருகை மூலம் மேலும் பல ஆயிரங்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

### மக்கள் சபைக்கு செயலாளர்கள் நேர்முகப் பரீட்சைக்கு 14 ஆயிரம் பட்டதாரிகள்

நாடெங்கிலும் பிரதேச சபைகளை ஒன்றிணைத்து (மகாசபா) மக்கள் சபைகளை அமைக்கவிருப்பதாகவும் அவற்றுக்கு செயலாளர்களாகவும் இணைப்பாளர்களாகவும் சேர்த்துக் கொள்வதற்கென 14 ஆயிரத்து 400 பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சைகளும் நடத்தப்பட்டன. அவர்கள் எதிர்பார்த்து ஏமாந்த நிலையில் இருக்கின்றனர்.

ஆனால் அரசியல் தலையீட்டின் பரிந்துரைகளுடன் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இது பட்டதாரிகளுக்குச் செய்யப்படும் பெரிய துரோகம். தொழில் வாய்ப்பின்றி இருக்கும் பட்டதாரிகள் அனைவருக்கும் நியமனம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிய அனுரகுமார திஸாநாயக்க,

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதில் பொதுக் கொள்கை, பொதுத் திட்டம் ஒன்று இல்லையா?




போட்டிப் பரீட்சை நடத்தப் படாமல் எத்தனை பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பத்திரிகை விளம்பரங்களின்படி மார்ச் 30 ஆம் திகதி வரை விண்ணப்பம் செய்யும் பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்படுமா?

இந்தக் கேள்விகளுக்கு அரசு பதில் அளிக்க வேண்டும் என்று அனுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்தார்.

### அமைச்சரின் பதிலால் சபையில் கூச்சல்

இந்தக் கேள்விகளுக்கு விடையளித்துப் பேசினார் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன.

எங்களுடைய அரசில் 2005 ஆம் ஆண்டில் 45 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பின்னர் வருடாவருடம் பல்வேறு கட்டங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரச அலுவலகங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் மட்டுமின்றி தனியார் துறையிலும் நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன என்று கூறிய அமைச்சர் 'கள்ளத்தனமாக' எவருக்கும் நியமனங்கள் வழங்கப்படவில்லை. அதேவேளை பல்வேறு கட்டங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் தகுதியானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பத்திரிகை விளம்பரங்களின்படி மார்ச் 30 ஆம் திகதிவரை விண்ணப்பம் செய்பவர்களுக்கும் போட்டிப் பரீட்சைகளின் பின் நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார் அமைச்சர் ஜோன் செனவிரத்ன.

### முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைத்த அமைச்சர்

அமைச்சரின் இந்தப் பதிலால் சபையில் சர்ச்சை ஏற்பட்டது. அனுரகுமார திஸாநாயக்கவும் தயாசிறி ஜயசேகரவும் இதனை கடுமையாக ஆட்சேபித்தனர்.

அமைச்சர் உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கொடுத்து சபையை தவறான வழியில் திசை திருப்புகின்றார். அனைத்து விடயங்களிலும் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன என்றும் பொய்யான தகவல்களை வழங்கும் அமைச்சர் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் கோரினர். இதனால் இருதரப்பினருக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. சபையில் அமைதி ஏற்பட சில நிமிடங்கள் பிடித்தன.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒன்றரை மணிக்குப் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

### மரண தண்டனைகள் நிறைவேற்றப்படாதது ஏன்?

நேற்று வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான அஜித் பெரேரா மரண தண்டனைகள் தொடர்பாக ஒரு கேள்வியை எழுப்பினார்.

*2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்கள் எத்தனை பேர்?

*மரண தண்டனை வழங்கப்படும் வகையில் அவர்கள் புரிந்த குற்றங்கள் என்ன?

*மரண தண்டனை விதிக்கப்பட்டும் அவை நிறைவேற்றப்படாமல் கைதிகள் தொடர்ந்து சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது ஏன்?

*மரண தண்டனை விதிக்கப்பட்ட சிலருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்போது அரசு கடைப்பிடிக்கும் கொள்கை என்ன?

என்று அஜித் பெரேரா புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். பெரேரா சபையில் இல்லாததால் விடை சபா பீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

### மரண தண்டனை விதிக்கப்பட்டோர் 361 பேர்

மேற்குறிப்பிட்ட காலம் வரை 361 பேருக்கு மரண தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதியின் ஆணை கிடைக்காததால் மரணதண்டனைகள் நிறைவேற்றப்படவில்லை. 256 ஆண்களும், 5 பெண்களும் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர். கொலைக் குற்றங்களுக்காக 348 பேருக்கும், போதைப் பொருள் பரிமாற்றம் தொடர்பாக 13 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின்படி பொது மன்னிப்பு வழங்குவது ஜனாதிபதியே என அந்த விடையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சவேந்திராவுக்கு கல்தா

ஐக்கிய நாடுகள் சபையில் அமைதி காக்கும் படைகளுக்கான ஆலோசனைக் குழுவில் அண்மையில் நியமனம் பெற்ற முன்னாள் 58 ஆம் பிரிகேட்டின் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அந்த உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பத்திரிகைச் செய்தி ஒன்று குறிப்பிட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக இலங்கை அரசு மேற்கொள்ளப்போகும் பதில் நடவடிக்கை என்ன என்று ஐ.தே.க. உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் கண்காணித்து வருகின்றது. உரிய நடவடிக்கை ராஜதந்திர அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இவ்வாறு பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா பதில் அளித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை வழமை போல் காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அனுதாபப் பிரேரணைகள் இடம் பெற்றன.

நேற்றைய தினம் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரூபசேன கருணாதிலக்க மற்றும் ஈ.பி.டி.பி. உறுப்பினரான எஸ்.சிவதாசன் ஆகியோர் மீதான அனுதாப உரைகள் நிகழ்த்தப்பட்டன.

(ஒ-02)

## ஜெனிவா பிரேரணைக்கு எதிரான அரசின் போராட்டத்திற்கு மக்கள் அணிதிரள்வரா?

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிப்பதற்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தீர்மானித்துள்ளன. இந்த நிலையில், அதற்கெதிராக நாடளாவியரீதியில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ள இலங்கை அரசு, அதில் பங்குகொள்ளுமாறு நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது. இதுதொடர்பாக உள்நாட்டு அரசியல் பிரமுகர்களின் கருத்துகளை நாம் கேட்டோம்.

### மடத்தனமான செயல்

ஜெனிவா மாநாட்டுக்கு எதிராக உள்நாட்டில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது மடத்தனமான செயல். அரசு இவ்வாறான காரியங்களை விடுத்து, ஜெனிவா மாநாட்டிலுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு இராஜதந்திர மட்டத்திலான நகர்வுகளையே முன்னெடுக்கவேண்டும். ஜெனிவாவுக்கு எதிராக உள்நாட்டில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதால் எதுவித பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை என்பதை நாம் மக்களுக்குக் கூறிக்கொள்ளவேண்டும். அரசு குறுக்குவழியில் செயற்பாடுகளை முன்னெடுக்காது, இராஜதந்திர மட்டத்தில் சவால்களை எதிர்கொண்டு நாட்டைக் காக்கவேண்டும் - எனக் கூறினார் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க எம்.பி.

### மக்களைத் திசைதிருப்ப முயற்சி

உள்நாட்டில் அரசுக்கெதிராகத் தொடர்ச்சியாக வெடிக்கும் ஆர்ப்பாட்டங்களை திசைதிருப்பி அதனை தங்களுக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்வதற்கே அரசு முயற்சிக்கின்றது. மனித உரிமைகள் ஆணையகத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் என இதனை யார் சொன்னது? தேசப்பற்றாளர்கள் எனத் தங்களுக்குத் தாங்களே பட்டம் வழங்கிக்கொண்டவர்கள் சோடித்துள்ள புதுக் கதையே இது. ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகப் போராடுபவர்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து ஏன் உள்நாட்டில் ரூபாவின் பெறுமதியை இறக்கி, பொருள்கள் சேவைகளின் விலையை அதிகரிக்கச் செய்தனர்? ஜெனிவாவில் மேற்குலகம் இலங்கைக்கு எதிராக செயற்படுவதை நாம் எதிர்க்கின்றோம். மேற்குலகத்தின் கோரிக்கைகளை நிராகரிக்கின்றோம். ஆனால், மேற்குலகம் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கு வழிசமைத்துக் கொடுத்துள்ள அரசுக்கு எதிராக மக்கள் போராடவேண்டும். எரிபொருள்களின் விலையேற்றம், வாழ்க்கைச்சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் வீதியில் இறங்கி போராடியவண்ணமுள்ளனர். எனவே, அதனைக் கட்டுப்படுத்தி நாட்டு மக்களை தமது பக்கம் இழுக்கவே அரசு தேசப்பற்றுடன் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வோம் என மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. நாம் மக்களுக்கு கூறுவது யாதெனில், ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் போராடும் அதேவேளை, இந்த அரசுக்கு எதிராகவும் போராடவேண்டும் - எனக் கூறினார் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

### தமிழர்கள் தரம் தாழ்ந்து விடவில்லை

இந்த நாட்டின் மீது தமிழ் மக்களும் அதீத பற்றைக் கொண்டுள்ளனர். அரசுக்கு ஆதரவு வழங்கித்தான் தேசப்பற்றை வெளிப்படுத்தவேண்டும் என்றளவுக்கு தமிழர்கள் தரம் தாழ்ந்துவிடவில்லை. ஆளுகின்ற அரசை ஆதரித்தால்தான் தேசப் பற்று என்பதைக் காண்பிப்பதற்கு அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் முயற்சிக்கின்றனர். இது அவர்களின் தேவையாக இருக்கலாம். அரசுக்கு ஆதரவளித்துத்தான் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தவேண்டும் என்ற தேவைப்பாடு தமிழ்மக்களுக்குக் கிடையாது. இலங்கை அரசாலேயே உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஜெனிவாவில் சமர்ப்பித்து, அதன் சிபாரிசுகளை உள்நாட்டில் நடைமுறைப்படுத்துமாறு நான் அரசிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளேன். இது பான் கீ-மூனின் அறிக்கை அல்ல என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும். அரசால் உருவாக்கப்பட்ட அறிக்கையே இது. சம்பிக்க, விமல் போன்றோர் நாட்டை தீவிரவாதப் படுகுழிக்குள் தள்ளுவதற்கு முயற்சிக்கின்றனர் - எனக் கூறினார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

### எந்த இலட்சணத்தில் மக்களை அழைப்பர்?

நாட்டு மக்களுக்கு அழைப்பா? யார்தான் இந்த அரசுக்கு ஆதரவாகச் செயற்படுவர்? சாராயப் போத்தலுக்கும், புரியாணிப் பார்சலுக்கும் சோரம் போகின்றவர்களையே அரசு மக்களாகக் கருதுகின்றது. அப்படியானால், அவர்களைத்தான் அரசு ஆர்ப்பாட்டத்துக்கு அழைக்க வேண்டும். ஏற்கனவே அமைச்சர் விமல் வீரவன்ஸ உண்ணாவிரத நாடகமொன்றை அரங்கேற்றித் தேசப்பற்றாளராகத் தன்னை சித்திரித்துக்கொண்டார். அந்தப் போலி நாடகத்தின் இரண்டாவது பாகமே இது. மக்கள் தங்களது உரிமைகளுக்காகப் போராடும்போது, ஜனநாயக விரோத செயற்பாடுகளைக் கையாண்டு, அதனை முடக்கும் அரசு, எந்த இலட்சணத்தில் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. தெருக்கடைக்காரர்கள், சண்டித்தனமான அமைச்சர்களின் அடியாட்கள் உட்பட அரசுக்குப் புகழ்பாடி வால் பிடிப்பவர்களே இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளப்போகின்றனர் - எனக் கூறினார் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய.

### ராஜதந்திர போராட்டம் அவசியம்

மக்கள் போராட்டங்களையும், இராஜதந்திர நடவடிக்கைகளையும் சமபலமாக முன்னெடுத்தால், எமக்கு வெற்றிப் பாதையை நோக்கி நகரக்கூடியதாகவிருக்கும். ஐரோப்பிய நாடுகளும் இனி இல்லை என்றளவுக்கு மனித உரிமைகளை மீறிச் செயற்பட்டுள்ளன. அவ்வாறான நாடுகளே இன்று எமது நாட்டு மனித உரிமைகள் விவகாரத்தை தூக்கிப்பிடித்து ஆடுகின்றன. எமது நாட்டில் இருதரப்பினருமே மனித உரிமைகளை மீறிச் செயற்பட்டுள்ளனர். அதற்கு நாம் உள்நாட்டில் நடவடிக்கை எடுப்போம். கள்வன் நீதிபதியாக முடியுமா? எனவே, எமது நாட்டு மனித உரிமைகள் பற்றி பேசுவதற்கு ஐரோப்பாவிற்கு அருகதை கிடையாது. சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த தமிழ்மக்களின் கண்ணீரைத் துடைத்தெறியும் வகையில் அவர்களுக்கு விரைவில் விடிவு கிட்ட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் - என்றார் அமைச்சர் ரெஜினோல்ட் குரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் சிவில் நடவடிக்கை வடக்கில் இனியும் தொடரும்

## மகாஜனாவில் கோத்தபாய உரை

போரில் ஈடுபட்ட படைவீரர்கள் வடக்கில் மேற்கொண்டு வரும் சிவில் சமூக நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ள ஊக்குவிப்பு செய்யப்படும். பல வழிகளில் மக்களுக்கான உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும்.

இவ்வாறு .பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் தேசமான்ய கே.பாலேந்திராவின் நிதியுதவியில் 24 மில்லியன் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தை திறந்து வைத்த பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

இன்று இந்த மகாஜனக் கல்லூரியின் கட்டடத்தை திறந்து வைப்பதில் பெருமையடைகின்றேன். கே.பாலேந்திரா என்னை தொடர்பு கொண்டு தான் நிதி உதவி செய்யவுள்ளதாகவும் ஒன்று வடக்கிலும் மற்றையது தெற்கிலும் அந்த நிதி உதவி பயன்படும் வகையில் நிர்மாணங்களை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தியிருந்தார்.

அத்துடன் வடக்கில் மகாஜக் கல்லூரியைத் தெரிவு செய்ததும் அவர் தான். இதேபோன்று தெற்கில் பாதுகாப்பு அமைச்சின் கல்லூரிக்கு அவர் நிதி உதவி வழங்கியுள்ளார். இந்தக் கட்டடம் மாணவர்களுக்கு அமைத்துக் கொடுத்ததற்கு கல்லூரியில் உயர்ந்த நிலையை மாணவர்கள் அடைய வேண்டும்.

வட பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தொடர்ச்சியாக உதவிகள் மேற்கொள்ளப்படும்.

போர்க் காலத்தில் இந்தப் பாடசாலை வேறிடத்தில் இயங்கினாலும் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்தக் கட்டடத்தின் பெறும் 24 மில்லியனாகி இதற்காக இராணுவத்தினர் தமது மனித வலுவைச் செலவிட்டுள்ளனர். இராணுவத்தினர் இதற்காக பட்ட கஷ்டங்கள் எனக்குத் தெரியும்.

வடக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் சிவில் சமூகப் பணிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப் படும்.- என்றார்.

இந்த நிகழ்வில் கோத்தபாய ராஜபக்ஷ அவரது மனைவி உட்பட விருந்தினர்கள் தமிழ்ப் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்பட்டுப் பின்னர் கோயில் பூசை வழிபாடுகளின் பின்னர் கண்டிய நடனத்துடன் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ம-5)

# குற்றச்செய்திகள்

யாழ்ப்பாணம், பெப்.25

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற இரண்டு பேருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

ஊர்காவற்றுறையில் இவ்வாறு சென்ற இருவரையும் பொலிஸார் கைது செய்து நீதிவான் ஆர்.எஸ்.எம்.மகேந்திரராஜா முன்பாக நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தினார். இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதனை அடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள் கோண்டாவில் மற்றும் புளியங்கூடலைச் சேர்ந்தவர்களாவர். (ம-4)

* * *

ஊர்காவற்றுறையில் சட்டவிரோத மதுவிற்பனையில் ஈடுபட்டவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று புதன்கிழமை பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்தது. (ம-4)

* * *

யாழ்ப்பாணம், பெப்.25

கொக்குவில் பகுதியில் மூன்று வீடுகளுக்குள் புகுந்து பத்தரைப் பவுண் நகை மற்றும் இருபதாயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிய சுன்னாகத்தைச் சேர்ந்த திருட்டுச் சந்தேக நபரை யாழ்.பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

அவர்களை அடுத்த மாதம் இரண்டாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மா. கணேசராஜா உத்தர விட்டார்.

கொக்குவில் சீனியர் லேன் மற்றும் இராஜகாரியலேன் ஆகிய பகுதிளிலுள்ள மூன்று வீடுகளினுள் கூரை பிரித்து உள்நுழைந்த திருடன் நகையையும் பணத்தையும் திருடியிருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

* * *

சாவகச்சேரி, பெப்.25

சாவகச்சேரிப் பகுதியில் இரண்டு வீடுகளில் தங்க நகை, மடிக் கணினி மற்றும் பணம் ஆகியவை திருடிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறும் இவருடன் கைது செய்யப்பட்ட நகை வியாபாரியைப் பிணையில் செல்லவும் சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீடொன்றில் மடிக்கணினி மற்றும் பணம் திருடியதாகவும் அத்துடன் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள வீடொன்றில் ஐந்து பவுண் தங்க நகைகளை திருடியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுட இருவருக்கு எதிராகப் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிவான் திருட்டுடன் தொடர்புடைய நபரை மார்ச் ஆறாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் இவரிடம் தங்க நகைகளைக் கொள்வனவு செய்த நகை வியாபாரியை பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார். (ம-9)

* * *

சாவகச்சேரி, பெப்.25

மதுபோதையில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 37 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணையில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை அனுமதிப் பத்திரமின்றி மணல் வாகனத்தில் ஏற்றி வந்தமைக்காக 30 ஆயிரம் ரூபாவும் மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக 7 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதித்தார்.

மணலை அரசுடமையாக்குமாறு உத்தரவிட்ட பதில் நீதிவான் வாகன உரிமையாளரிடம் நிபந்தனையுடன் வாகனத்தைக் கையளிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-9)

### வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ். குடாநாட்டில் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் தற்போது அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் ஆயிரத்தி 109 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனை விட கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் டிசெம்பர் வரையான காலப் பகுதியில் 542 ஹெக்ரெயர் நிலப் பரப்பில் வெங்காயச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த ஆண்டு ஜனவரியில் ஆகக் கூடுதலான நிலப்பரப்பில் விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வருட இறுதிப் பகுதியில் கூட குடாநாட்டில் வெங்காயச் செய்கையில் குறைந்தளவு விவசாயிகளே ஈடுபட்டுள்ளனர்.

இதனால்தான் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் வெங்காயத்தின் விளைவும் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்த வெங்காய விலை அதிகரிப்பை அடுத்து இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் அதிகளவில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது. இந்த வெங்காய இறக்குமதியால் அதன் விலையில் தளம்பல் ஏற்பட்டுக் காணப்படுகிறது.

தற்போது வெங் காயச் செய்கை குடாநாட்டில் அதிகளவில் மேற்கொள்ளப்படுவதால் அதன் விலையில் சரிவு காணப்பட்டுள்ளது. சந்தைகளில் வெங்காயம் ஒருகிலோ 25 ரூபா தொடக்கம் 35 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. (ம-17)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நவீன வசதிகளுடன் பிரேத அறை

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நவீன வசதிகள் கொண்ட பிரேத அறைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மேற்கொண்டு வருகிறார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கிழக்குப் பக்கமாக வைத்தியசாலையின் பிரேத அறை அமைந்துள்ள பகுதிக்கு அருகில் புதிய பிரேத அறை அமைக்கப்படவுள்ளது.

கட்டடம் அமையவுள்ள இடத்தை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரும் பொறியியலாளரும் நேற்றுமுன்தினம் வருகைதந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு யுத்த வேளையில் வைத்தியசாலை கட்டடங்களுடன் பிரேத அறையும் சேதமடைந்து பின்னர் புனரமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. பிரதேச மக்கள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க நவீன வசதிகள் கொண்ட பிரேத அறை அமைக்கப்படவுள்ளது.

யுத்த வேளையில் முழுமையாகச் சேதமடைந்த வைத்தியசாலைக் கட்டடங்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள், மாகாணப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ் வரனின் முயற்சியினால் சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டன.

வைத்தியசாலை வளாகத்தில் நிர்வாக அலகு, குழந்தைகள் விடுதி, ஆண், பெண் விடுதிகள், பிரசவ விடுதி, வைத்தியர்கள்விடுதி உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# குருநகர் மாடிக் கட்டடம் புனரமைப்புக்காக மதிப்பீடு

யாழ்ப்பாணம்,பெப்.25

குருநகர் 5 மாடிக் கட்டடத்தின் திருத்த வேலைகள் தொடர்பான மதிப் பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இந்தப் பணிகள் இடம் பெற்றன என்று மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

வீடமைப்பு நிர்வாகத் துறை அமைச்சரின் பணிப்புக்கு அமையக் கொழும்பிலிருந்து வருகைதந்த உதவிப் பொதுமுகாமையாளர், பொறியியலாளர்கள் குறித்த திருத்த வேலைகளுக்கான மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளனர்.

1985 ஆம் ஆண்டு இந்த 5 மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. 27 வருடகாலமாக திருத்த வேலைகள் எவையும் இடம்பெறவில்லை.

யாழ்.மாநகரசபையால் மலசலகூடம் புனரமைப்பு மட்டும் இடம்பெற்றது.

இந்த நிலையில் இந்தக் கட்டடங்கள் பெரும் சேதமடைந்த நிலையில் உள்ளன.

அத்தோடு கடற்கரைப் பக்கம் உள்ளதால் ஜன்னல், இரும்புக் கதவுகள் என்பன சேதமடைந்தும் காணப்படுகின்றன.

5 மாடிக் கட்டடத் தொகுதியில் 160 வீடுகள் உள்ளடங்குகின்றன. இந்தக் கட்டடத்துக்கான வேலைகளின் மதிப்பீடுகளின்படி புனரமைப்புப் பணிகள் இடம்பெறலாம் என்று கூறப்பட்டது. (ம-13)

# அவலப்படும் பார்வையாளர்கள்

யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருப்போரைப் பார்வையிடச் செல்லும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் அங்குள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் பெரும் சிரமங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பார்வையாளர் நேரத்தில் வாசல் கதவின் ஒரு பகுதியைத் திறந்துவிடுவதனால் அந்தக் கதவின் ஊடாக ஒருவர் பின் ஒருவராக உட்செல்ல வேண்டியுள்ளது.

கதவு திறப்பதற்கு முன்னர் அந்தப் பகுதிக்கு வந்து சேரும் நூற்றுக்கணக்கானோர் காத்திருந்து சிறைச்சாலைக்குச் செல்வது போல ஒவ்வொருவராக உட்செல்ல அனுமதிக்கின்றனர்.

கதவு திறந்து விடப்படும் வேளையில் குவியும் மக்கள் மின்சார நிலைய வீதியை மறித்து நிற்கின்றனர். இதனால் வீதிப் போக்குவரத்து அந்த நேரத்தில் தடைப்படுகிறது.

இதேவேளை பார்வையாளர் நேரம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வைத்தியசாலையின் பிரதான வாயில்கள் மூடப்படுவதால் அங்கு கிளினிக்குகளுக்குச் செல்வோரும் பின் கதவு ஊடாகவே வெளியேசெல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது.

பார்வையாளர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்ட பின்னர், சுமார் 30 நிமிடங்கள் வரை காத்திருந்தே உள்ளே நிற்பவர்கள் வெளியே வர வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் கேட்கின்றனர். (ம-9)

### சிறுவர்களுக்கு புகைபொருள் விற்றதால் அபராதம்

சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்த 14 வர்த்தகர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

இந்த வர்த்தகர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை நேற்று விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை அனைத்து வர்த்தகர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘யாழ்’ புகைப்படக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார் கோத்தபாய





யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்.மாவட்டப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் சிவில் நிர்வாக அலுவலகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக் கப்பட்ட 'யாழ்.' புகைப்படக் கண்காட்சியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று உத்தியோகபூர்மாக நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகியுள்ள இந்தக் கண்காட்சி தொடர்ந்து மூன்று நாள்கள் இடம்பெறவுள்ளது.

இராணுவப் புகைப்பட வல்லுநர்களால் எடுக்கப்பட்ட சுமார் 400 இற்கும் அதிகமான புகைப்படங்கள் இங்கு காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

**குடாநாட்டின் அபிவிருத்தி, சிறப்புமிக்க தொன்மைகள், வணக்க ஸ்தலங் கள், மக்களின் உழைப்பு, உணவு உள்ளிட்ட விடயங்கள் புகைப்படங்களாகக் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.**

குடாநாட்டின் அபிவிருத்தி, சிறப்புமிக்க தொன்மைகள், வணக்க ஸ்தலங்கள், மக்களின் உழைப்பு, உணவு உள்ளிட்ட விடயங்கள் புகைப்படங்களாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, கொழும்பு மாநகர சபையின் எதிர்கட்சித் தலைவர் மலிந்த மொறகொட, விமானப்படைத் தளபதி வைஸ் அட்மிரல் றொசான் குணதிலக ஆகியோர் இரண்டு ஹெலிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கினர். இவர்களை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி வரவேற்று நிகழ்விடத்துக்கு அழைத்து சென்றார்.

விருந்தினர்கள் மங்கல வாத்தியஇசையுடன்அழைத்து வரப்பட்டனர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து நாடா வெட்டிக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்.

இதனைத் தொடர்ந்து நேற்றுப் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் கண்காட்சியை பார்வையிட்டனர். (த-3)

## நிஷாவால் சேதமான மயானக் கொட்டகை

### கரையான் பிட்டி மயானத்தில் அவலம்

சண்டிலிப்பாய், பெப்.25

கரையான்பிட்டி இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருந்த கொட்டகை கடந்த நிஷாப் புயலால்சேதமடைந்தபோதும் இதுவரை மீளமைக்கப்படவில்லை.

இதனால் மழை காலங்களில் சடலங்களைத் தகனம் செய்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலை குறித்து மயான அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ். சுப்பிரமணியம் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் நிர்வாகத்திடம் பல தடவை அறிவித்த போதும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் காக்கைதீவுக்குச் செல்லும் வீதியில் கரையான்பிட்டி இந்து மயானம் அமைந்துள்ளது.

ஆனைக்கோட்டை, நவாலி, காக்கைதீவு, சாவல்கட்டு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் இந்த மயானத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மழை காலங்களில் சடலங்களைத் தகனம் செய்வதற்கு வசதியாகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டிருந்தன. மக்கள் எந்த நேரத்திலும் சிரமமின்றிச் சடலங்களைத் தகனம் செய்து வந்தனர். இந்தக் கொட்டகை கடந்த சில வருடங்களுக்கு முன்பு வீசிய நிஷாப் புயலால் சேதமடைந்து கூரையில் லாத நிலையில் நான்கு தூண்களுடன் மட்டும் காட்சியளிக்கின்றது.

இதனால் சடலங்களைத் தகனம் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

கூரையில்லாமல் சேதமடைந்த நிலையிலுள்ள கொட்டகையை மக்களின் நலன்கருதி புனரமைத்துத் தருமாறு அபிவிருத்திச் சங்கத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-115)

## ‘காப்பெற்’றாகிறது பண்ணை வீதி

யாழ்ப்பாணம், பெப்.25

பண்ணை பிரதான வீதியை அகலித்துக் காப்பெற் வீதியாக மாற்றியமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

பண்ணைச் சந்தியில் இருந்து அரியாலி சந்தி வரைக்குமான பகுதியே இவ்வாறு முதற்கட்டமாக அகலிப்புச் செய்யப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ளது.

போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்திருக்கும் இந்த வீதியின் புனரமைப்பு பணிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வங்கியின் பிரதிநிதிகள் அண்மையில் பண்ணை வீதியைப் பார்வை யிட்டதும் வீதியின் அகலிப்பு மற்றும் புனரமைப்பு குறித்தும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

இந்த வீதியை முதற்கட்டமாக அராலிச் சந்தி வரைக்கும் அகலித்து இரு வழி போக்குவரத்துப் பாதையாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரு வழிப் போக்குவரத்துப் பாதையாகப் பண்ணை பிரதான வீதியை மாற்றியமைப்பதன் மூலம் இந்தப் பகுதியில் வீதி விபத்துக்களையும் தடுக்க முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ம-17)

## மானிப்பாய் நகரப் பகுதிகள் துப்புரவு அற்ற நிலையில்

சண்டிலிப்பாய், பெப்.25

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் நகரில் பிரதான வீதி உட்பட சகல வீதிகளும் குப்பை கூழமாகக் காட்சியளிக்கின்றன.இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள பொதுமக்கள், சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துள்ளனர்.

**வீதி யோரங்கள் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகை யில் குப்பை கூழங்களாகக் காட்சியளிக்கின்றன. கடந்த சில மாதங்களுக்கு முன்பு பிரதேச சபையில் கடமை யாற்றும் தொழிலாளர்களால் வீதிகள் கூட்டித் துப்புரவு செய்யப்பட்டு வந்தன. தற் பொழுது துப்புரவு செய்யும் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.**

மானிப்பாய் நகர் மற்றும் பகுதிகள் பண்டத்தரிப்பு நகர் மற்றும் பகுதிகள் உள்ளடக்கிய வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் நகர் சகல துறைகளிலும் முன்னணி வகிக்கின்றது.

பிரபல்யமான கல்லூரிகள், வங்கிகள், வைத்திய சாலை, பொதுச் சந்தை, பிரதேச சபையின் அலுவலகம், எரிபொருள் நிலையம், ஆலயங்கள் உட்பட நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்கள் இந்தப் பிரதேசத்தில் உள்ளன.

மக்களும் இந்தப் பகுதிகளில் நெருக்கமாக வாழ்ந்து வருகிறார்கள். மக்கள் நடமாட்டமும் வாகனப் போக்குவரத்தும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் வீதி யோரங்கள் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் குப்பை கூழங்களாகக் காட்சியளிக்கின்றன. கடந்த சில மாதங்களுக்கு முன்பு பிரதேச சபையில் கடமை யாற்றும் தொழிலாளர்களால் வீதிகள் கூட்டித் துப்புரவு செய்யப்பட்டு வந்தன. தற்பொழுது துப்புரவு செய்யும் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இது குறித்து பிரதேச சபை உறுப்பினர் ஒருவரிடம் வினவிய போது தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-115)

## காரைநகர் பிரதேச சபைக்கு மாட்டுவண்டிலில் சென்ற உறுப்பினர்கள்

காரைநகர் பிரதேச சபை யின் மாதாந்தக் கூட்டத்துக்கு பிரதேச சபை உறுப்பினர் நேற்று மாட்டு வண்டிலில் சென்றனர். சபையின் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டாக இவ்வாறு சென்றனர்.

சபையின் மாதாந்தக் கூட்டம் சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது பிரதேச சபையின் உப தலைவர் ச.துர்க்கேஸ்வரன், ஐ.தே.க. உறுப்பினர் க.பாலச்சந்திரன் ஆகியோரே இவ்வாறு மாட்டு வண்டியில் சென்றனர்.

எரிபொருள் விலையேற்றமானது அப்பாவி மக் களைப் பெரிதும் பாதித்துள்ள நிலையில் இதனைக் கண்டித்து அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண் டனர்.

இதேவேளை, எரி பொருள் விலையேற்றத் தைக் கண்டித்துச் சபையில் கண்டனத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றினர். இந்தத் தீர்மானத்தின் பிரதியை பெற்றோலிய வளத்துறை அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ம-17)

## நகரில் நேற்று பாதுகாப்பு கெடுபிடி

யாழ்ப்பாணம், பெப்.25

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் யாழ். வருகையை முன்னிட்டு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்றுப் பலப்படுத்தப்பட்டிருந்தன.

நகரின் சத்திரச் சந்தியில் இருந்து முற்றவெளிவரையான பகுதி எங்கும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பகுதிகளில் வீதியோரங்களில் வாகனங்கள் நிறுவத்துவதற்கும் பொலிஸார் அனுமதிவழங்கவில்லை,

குறித்த வீதியால் பயணிகளின் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

கே.கே.எஸ். வீதியில் தபாலகச் சுற்றுவட்ட வீதியில் இருந்து முற்றவெளி செல்லும்பகுதிக்கான போக்குவரத்தையும் பொலிஸார் திடீரெனத் தடை செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## 25.5 ஹெக்ரெயர் நிலத்தில் காலபோக உருளைக் கிழங்கு

### 75 வீதமான அறுவடை நிறைவு

யாழ்ப்பாணம், பெப்.25

குடாநாட்டில் இம்முறை 25.5 ஹெக்ரெயர் நிலப் பரப்பில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்ட நிலையில் 75 வீதமான அறுவடை நிறைவு பெற்றுள்ளது என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்ட சிவப்பு நிற விதை உருளைக்கிழங்கே இந்தமுறை காலபோகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த வகை உருளைக் கிழங்கில் இருந்து விவசாயிகள் பெரும் நன்மை அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்குக்குத் தெற்கில் அதிக வரவேற்பு உள்ளதாகவும் கூறப்பட்டது.

பெருமளவான உருளைக்கிழங்குகள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும் வருகின்றன.

தம்புள்ள மரக்கறி சந்தைக்கும் கூடுதலான உருளைக்கிழங்குகள் கொண்டு செல்லப்படுகின்றன.

உள்ளூர் உருளைக் கிழங்குக்கான அறுவடை விழா ஒன்று சிறுப்பிட்டி மேற்கில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்களுக்கு வேண்டும் உரிமை, சலுகை

## கூட்டறிக்கையில் உள்ளவாறு

நுவரெலியா,பெப்.25

கூட்டு ஒப்பந்தத்துக்கு அமைய தோட்டத் தொழிலாளர்களுக்கு அனைத்து உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். தோட்ட நிர்வாகங்கள் இதனைத் தவறும் பட்சத்தில் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

**தோட்டத் தொழிலாளர்களின் வேலைப்பழுவை தன்னிச்சையாக அதிகரிக்கவோ , அவர்களுக்கு கிடைக்கக் கூடிய வரப்பிரசாதங்களுக்கு அநீதிகள் விளைவிக்கவோ தோட்ட நிர்வாகங்களுக்கு எவ்விதத்திலும் அனுமதி இல்லை .**

தோட்டத் தொழிலாளர்களின் வேலைப்பழுவைத் தன்னிச்சையாக அதிகரிக்கவோ, அவர்களுக்கு கிடைக்கக் கூடிய வரப்பிரசாதங்களுக்கு அநீதிகள் விளைவிக்கவோ தோட்ட நிர்வாகங்களுக்கு எவ்விதத்திலும் அனுமதி இல்லை .

ஒரு நாளில் பறிக்கப்படும் கொழுந்தின் அளவை தோட்டத் தலைவர்கள், தலைவிகள் தீர்மானிக்கும்போது அதிகரிக்கவோ அல்லது சம்பளத்தைக் குறைக்கவோ நிர்வாகங்களுக்கு எவ்விதத்திலும் உரிமை இல்லை.

எவ்வாறாயினும் இதுவரையில் இந்தத் தோட்டங்களில் பெற்ற கொழுந்துக்கான பணம் உரியவர்களுக்கு உடன் வழங்கப்பட வேண்டும். 2011ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக 23 கம்பனிகளும் இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தோட்டங்களில் கொழுந்து பறிப்பது தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து தோட்டப் பிரிவுகளில் உள்ள தோட்டத் தலைவர்கள், தலைவிகள், தோட்டக் குழுக்கள், தோட்ட அதிகாரிகள் ஆகியோர் சமரச பேச்சுக்கள் மூலம் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் இதனை நிர்வாகங்கள் சரிவரக் கடைப்பிடிப்பதில்லை. இவ்வாறான நிலைமைகளை இ.தொ.கா. பலமுறை எடுத்துக்கூறி வந்திருக்கின்றது. கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு அனைத்துச் சலுகைகளையும் வழங்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தொழிலாளர்களின் வேலைக்கு நிர்வாகங்கள் வைத்தன 'வேட்டு'

## யோகராஜன் எம்.பி. முறைப்பாடு

பொகவந்தலாவை,பெப்.25

பொகவந்தலாவை, பிளாண்டேஷன் கம்பனிக்குச் சொந்தமான சுமார் 11 தோட்டங்களில் நேற்று முன்தினம் முதல் தோட்ட நிர்வாகம் 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்குவதை நிறுத்தியுள்ளது. இந்தச் செயலானது பெருந்தோட்டத்துறையில் விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஹற்றன் உதவித் தொழில் ஆணையாளர் சந்திரதிலகவிடம் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன் தெரிவித்ததாவது:

தொழிலாளர்களின் நலனில் அக்கறையுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்த போராட்டத்தின் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும். தொழிலாளர்களின் நலவுரிமைகளையும் வேலை செய்யும் உரிமையையும் கம்பனிகள் மறுத்திருப்பது மனித உரிமையை மீறும் செயலாகும். தொழிலாளர்களின் இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு ஏற்படாத பட்சத்தில் பெருந்தோட்டத் துறையில் தொழிலாளர்களின் போராட்டங்கள் எங்கும் பரவும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

10 ஆயிரம் தொழிலாளர்களின் நாளாந்த உழைப்பின் சம்பளத்தை வழங்க மறுப்பது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. சுகபோகங்களை அனுபவிக்கும் கம்பனிகளும், தோட்ட நிர்வாகமும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பற்றிச் சிந்திக்காமல், சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்வதை அனுமதிக்க முடியாது. இன்றைய சூழ்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் அமைதியாகவும், சாத்வீகத்துடனும் தமது போராட்டங்களை முன்னெடுப்பது அவசியமாகும். வன்முறை, வாதப்பிரதிவாதங்கள், மோதல்களால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது - என்றார். (ச)

# அம்பாறையில் நெல்லின் விலை அதிகரிப்பு

அம்பாறை,பெப்,25

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பமாகி துரிதமாக நடைபெற்றுவரும் நிலையில், நெல்லின் விலை உயர்வடைந்துள்ளது.

இந்தப்பெரும்போக நெல் அறுவடை ஆரம்பித்தபோது 65 கிலோ கொண்ட ஒரு மூடைநெல் 1200 ரூபாவுக்கு விற்பனையாகிய போதிலும் தற்சமயம் ஒரு மூடை நெல் 1500 ரூபாவுக்கு விலை உயர்ந்துள்ளது.

அரசு உத்தரவாத விலையில் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதிலும், தனியார் வர்த்தகர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைக் கொள்வனவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அரிசி விலையும் இந்த மாவட்டத்தில் அதிகரிக்கும் நிலைமை காணப்படுகின்றது. (ச-30)



அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் இடமாற்றப்பட்டமையைக் கண்டித்தும், மீண்டும் தமது பழைய அதிபரை நியமிக்கக் கோரியும் கல்லூரியின் மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை கல்லூரயின் முன்னாலுள்ள பிரதான வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (21)

# போலி அனுமதிப்பத்திரம்: பஸ் சாரதி கைது

அம்பாறை,பெப்.25

அம்பாறை, மத்தியமுகாம் பிரதேசத்தில் போலியான சாரதி அனுமதிப்பத்திரத்துடன் தனியார் போக்குவரத்து பஸ்வண்டியை செலுத்திய மண்டூரை சேர்ந்த சாரதி ஒருவரை 14 நாள்கள் விளக்க மறியலில்வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி கடந்த புதன்கிழமை உத்தரவிட்டார்.

கல்முனை நகருக்கும் மத்தியமுகாம் 13ஆம்கொலனிப் பிரதேசத்துக்கும் இடையில் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் பஸ்வண்டியை கடந்த செவ்வாய்க்கிழமை சவளக்கடை வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் வீதியில் வைத்து சோதனையிட்டனர்.

இதன்போது சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரத்தில் சந்தேகம் கொண்டு விசாரித்தபோது அது போலியானது என்று கண்டுபிடிக்கப்பட்டது. சிறிய ரக வாகனம் மட்டும் செலுத்தக்கூடியதான அனுமதிப் பத்திரத்தில், கனரக வாகனம் உட்பட அனைத்து வாகனமும் செலுத்தக்கூடியதாக ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சவளக்கடைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இலங்கை மீனவர்கள் நாளை நாடு திரும்புவர்

இந்தியக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 25 பேர் அவர்களது படகுகளுடன் நாளை நாடு திரும்பவுள்ளனர்.

இந்தியச் சிறைகளில் இருந்து நாடு திரும்பும் இறுதித் தொகுதி இலங்கை மீனவர்கள் இவர்களே- என்று மீன்பிடி மற்றும்நீரியல்வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மீனவர்கள் 25 பேரும் இந்திய கடலோர காவல் படையினரால் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். கடந்த பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி மேற்படி மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருடர்கள் நடமாட்டம்; மக்களுக்கு எச்சரிக்கை

மூதூர், பெப். 25

திருகோணமலை நகரில் திருடர்கள் நடமாடுவதால் பொதுமக்களை அவதானமாக இருக்கும்படி திருகோணமலை பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதுதொடர்பாக திருகோணமலை தலைமை பொலிஸ் நிலையம் சார்பாக துண்டுப்பிரசுர அறிவித்தல்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இந்தபிரசுரத்தில் தெரிவிக்கப்படுவதாவது:

**திருடர்கள் வர்த்தக நிலையங்கள், வீடுகள் ஆகியவற்றில் சொந்தக்காரர்கள் இல்லாத நேரங்களில் உட்புகுந்து பெறுமதியான பொருள்களைக் திருடுகின்றனர்.**

திருகோணமலை நகரத்திலும் அதைச் சூழ்ந்த பகுதிகளிலும் தற்போது கூட்டாகச் சேர்ந்து திருடர்கள் நடமாடி வர்த்தக நிலையங்கள், வீடுகள் ஆகியவற்றில் சொந்தக்காரர்கள் இல்லாத நேரங்களில் உட்புகுந்து பெறுமதியான பொருள்களைத் திருடுகின்றனர். அத்துடன், பாதுகாப்பின்றி நிறுத்தப்பட்டிருக்கும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றையும் திருடி வருகின்றனர்.

சந்தேகநபர்கள் பற்றியோ, சந்தேகமான பொருள்கள் பற்றியோ தகவல் அறிந்தால் உடனடியாக 026 - 2222222, 026 - 2222227 ஆகிய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அதுபற்றி அறிவித்து உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் என்று திருகோணமலை தலைமைப் பொலிஸ் நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

# ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,பெப்.25

மட்டக்களப்பு, வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டு திறக்கப்படவிருந்த சரஸ்வதி சிலை அங்கிருந்து அகற்றப்பட்டமைக்கு எதிராக நேற்று வெள்ளிக்கிழமை ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆசிரியர்களையும், அதிபரையும் சிலர் மிரட்டியதால் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட முடியாதுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மனு ஒன்றினை மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி பவளகாந்தனிடம் ஆசிரியர்கள் கையளித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், குருவை மதி, அதிபரை அவமதியாதே, கல்வித் தெய்வத்தை அவமதியாதே, மாணவரின் குறிக்கோள் கல்வி மட்டுமே, யாழ்ப்பாணம், திருகோணமலை மெதடிஸ்த பாடசாலைகளிலும் கல்வித் தெய்வத்தின் சிலை உண்டு போன்ற கோசங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட முடியா மனோ நிலை உள்ளதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற் றுத்தரும் வரை தாம் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ச-21)

# ஓட்டோ சாரதிகளுக்கு நடவடிக்கை

கண்டி,பெப்.25

ஹற்றன் பிரதேசத்தில் மதுபோதையில் ஓட்டோ செலுத்துகின்ற சாரதிகளைக் கைதுசெய்யும் நடவடிக்கையை ஹற்றன் பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர்.

ஹற்றன் பிரதேசத்தில் இரவில் சாரதிகள் மது போதையில் ஓட்டோவை செலுத்துவதாகவும், இதனால் பயணிகள் சிரமங்களுக்குள்ளாகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மது போதையில் ஓட்டோவை செலுத்துகின்றபோது விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே மதுபோதையில் ஓட்டோவைச் செலுத்துகின்ற சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கதிரித்தம்பி கண்ணதாசன்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், ''அமுதசுரபி'', வில்சன் வீதி, இரணைமடு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி கண்ணதாசன் (ஆசிரியர்) கடந்த 22.02.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், பொன்னையா - கதிரே (காந்தி - உரிமையாளர், வனஜா கபே, பளை) காலஞ்சென்ற சிவயோகமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஸ்ணவனஜாவின் (ஆசிரியை) அன்புக் கணவரும் அட்ஷயா, அருணிகா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், க.காளிதாசப்புலவர், காலஞ்சென்ற த. புஸ்பவதி மற்றும் க. ரஞ்சிதமலர், தெ. அருந்தவமலர் (ஆசிரியை), கா. திராவிடமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஸ்ணகுமார் (பிரான்ஸ்), கிருஸ்ணலதா (லண்டன்), கஜேந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் 2ஆம் கட்டை, முரசுமோட்டை இராசரத்தினம் - யோகேஸ்வரி (யோகம் ரீச்சர்) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக கோரக்கன்கட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கிருஸ்ணவனஜா (மனைவி)

## இன்றைய ஆட்டம்

லூசின்மகுர் பவுண்டேசன் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று காலை 9 மணிக்கு அல்மதீனா வி.க. எதிர் சூப்பர் ஸ்ரார் வி.க. காலை 10 மணிக்கு அம்பன் வி.க. எதிர் சூடுவெந்தபுலவு அல் இக்பால் வி.க. மதியம் 1.30 மணி எருக்கலம்பிட்டி ஏ அணி எதிர் கோல்டன் பிரதர்ஸ் வி.க. பி.ப. 3 மணிக்கு படை வி.க எதிர் நியூபைட் வி.க.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் கிட்டினு நாகம்மா

பிறப்பு: 24★04★1928 இறப்பு: 26★01★2012

திதி: 25★02★2012

அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனை இன்று (25.02.2012) சனிக்கிழமை மு.பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரது பிரார்த்தனை நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் கோயிலடி,
உரும்பிராய் வடக்கு

குடும்பத்தினர்.



## பதவி வெற்றிடம்

பதவி : சாரதி
நிறுவனம் : சேவாலங்கா மன்றம், யாழ் மாவட்டக் காரியாலயம்
சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.

தேவையான தகைமைகள்:

* இடைநிலை கல்வித் தகைமையுடன் தகுந்த சாரதி அனுமதிப்பத்திரம்
* வயதெல்லை- 50 வருடங்களுக்கு உட்பட
* 2 வருட சாரதியாக முன் அனுபவம்ாாா
* யாழ் மாவட்டத்திற்கு அப்பால் கொழும்பு போன்ற இடங்களுக்குச் சென்றுவருபவராக இருத்தல் வேண்டும்.
* மது/புகைத்தல் பழக்கங்கள் அற்றவராக இருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 03.03.2012 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
மாவட்ட மனிதவள/நிர்வாக உத்தியோகத்தர்,
சேவாலங்கா மன்றம்,
54/2, பலாலி வீதி, கோண்டாவில்.
2012.02.24
மின்னஞ்சல் : Jaffna.hr@sewalanka.org

(C\8310) (6,7,10)


# மரண அறிவித்தல்



## வேதாரணியம் கனகையா

கற்சிலைமடு, பண்டாரவன்னியைப் பிறப்பிடமாகவும், சின்னக்கோயில் தெரு, கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வேதாரணியம் கனகையா கடந்த 22.02.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதாரணியம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் நல்லம்மா, வேதாரணியம், வேலாயுதம், கந்தசாமி, குமுதினி ஆகியோரின் அன்பு தந்தையும், ஜெயராசா, மாருதிதேவி, வளர்மதி, ஜெயரஜனி, ஜெகநாதன் (ஈசன், வியாபாரி, திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, [illegible]
மருமக்கள்.

சின்னக்கோயில் தெரு,
கட்டைப்பிராய்,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



## திருமதி இராஜகோபால் மனோன்மணி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரைநகர், புதுறோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜகோபால் மனோன்மணி நேற்று (24.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் இராஜகோபாலின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் அபிராமிபிள்ளையின் பெறாமகளும் இராஜேஸ்வரி, சறோஜினி (Teacher, Good Rest Convent - Nuwara Eliya), இராஜேஸ்வரன் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரபாலன், பொன்னம்பலம், தமிழ்ச் செல்வி ஆகியோரின் அன்பு மாமியும், ரஞசன், ரமீதன், அஞ்சலா, சுருதி, சுவேதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இராசரட்ணம், இராசம்மா, இரத்தினசிங் கம், இரத்தினசபாபதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராஜேஸ்வரன் (மகன்)
குடும்பத்தினர்.

புது றோட்,
காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் 55 பேர் சாவு

## தொடரும் குண்டுத் தாக்குதல்கள்



கடந்த வருடம் டிசெம்பரில் அமெரிக்கப் படையினர் வெளியேறியது முதல் ஈராக்கில் வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன. பொதுமக்களை இலக்குவைத்து நடத்தப்படும் தொடர்ச்சியான தாக்குதல்கள் ஈராக் அரசுக்குத் தலையிடியை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

ஈராக்கில் அலையலையாகத் தொடர்ந்த தாக்குதல்களில் 55பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 100 பேர் வரை காயமடைந்துள்ளார்கள். குண்டுத் தாக்குதல்களும், துப்பாக்கிச் சூடுகளும் பல இடங்களில் நடந்துள்ளன.

இந்த வன்செயல்களில் முக்கியமாக ஷியாக்கள் வாழும் பகுதிகள் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பொலிஸாரும், சோதனைச் சாவடிகளும் தாக்கப்பட்டுள்ளன.

பாக்தாத்தில் மத்திய கர்ரடா மாவட்டத்தில், அடுத்தடுத்து இடம்பெற்ற இரு குண்டுவெடிப்புக்களில் 9 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தலைநகருக்கு வெளியே பகுபாவில் இருவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் தாக்குதல்களுக்கு எந்தக் குழுவும் உரிமை கோரவில்லை. கடந்த டிசெம்பரில் அமெரிக்கப் படையினர் வெளியேறியது முதல் ஈராக்கில் வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன.

மொசூல், கிர்க்குக், சலாஹுதீன் ஆகிய இடங்களிலும் தாக்குதல்கள் நடந்திருக்கின்றன.

# ஈரான் நாட்டின் இரும்புப் பெண்கள்!



ஈரான் நாட்டின் இரகசிய ஆயுதங்கள் என்கிற தலைப்பில் இணையத் தளம் ஒன்றில் வெளியாகி உள்ள செய்தி இது.

ஈரான் நாட்டுப் பெண்கள் மிகவும் கடினமான போர் வித்தைகளைப் பயின்று வருகின்றனர்.

இவர்களைத் தான் அமெரிக்கா ஈரானின் இரகசிய ஆயுதங்கள் என்று நினைத்துப் பயப்படுகின்றதோ தெரியவில்லை.

## சாவு எண்ணிக்கை 101ஆக உயர்வு

டமஸ்கஸ்,பெப்.25

பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி, சிரிய அரசபடைகள் நடத்திய கண்மூடித்தனமான ஏவுகணைத் தாக்குதல்களால் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 101ஆக அதிகரித்துள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை முதல் தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. நேற்று வெள்ளிக்கிழமை வரை 101 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக கிளர்ச்சிப் படையினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, சிரியா வில் ஐ.நா உடனடியாகத் தலையிட்டு மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐ.நா வின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார். (ங)



பிரிட்டிஷ் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். அண்மைக் காலமாக லண்டனிலும்அதனை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் சட்டவிரோதச் செயல்களும் சிறியளவிலான கலவரங்களும் தோன்றத் தொடங்கியதையடுத்துப் பொலிஸார் இத்தகைய விசேட சோதனை நடவடிக்கையில் குதித்துள்ளனர். எனினும் இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்பதால், எதிர்ப்புகளும் கிளம்பியுள்ளன.

# ரீவியில் பெற்றோர் 'சேஷ்டை' பார்த்த சிறுமி அதிர்ச்சி

15 வயதுச்சிறுமியொருத்தி தனது பெற்றோரின் பாலியல்காட்சியைத் தொலைக் காட்சியொன்றில் பார்த்து அதிர்ச்சியடைந்த சம்பவம் ஜேர்மனியில் இடம்பெற்றுள்ளது.

பல்வேறு பாலியல் நடவடிக்கைகள் இடம்பெறும் கிளப் ஒன்றில் மேற்படி தம்பதியினர் இருந்தபோது, பதிவுசெய்யப்பட்ட காட்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியுள்ளது. இத்தகைய கிளப்களில் இடம்பெறும் நடவடிக்கைகள் தொடர்பான விவரணப்படமொன்று தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியபோதே அதில் தமது தந்தையையும் தாயையும் பார்த்து அந்தச் சிறுமி அதிர்ச்சியடைந்தாள்.

மேற்படி சிறுமியின் தாயும் தந்தையும் தமது முக அடையாளங்கள் மறைக்கப்படும் என்ற நம்பிக்கையில் படம்பிடிக்கப்படுவதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஆனால்,மேற்படி தொலைக் காட்சி நிறுவனம் இந்தத் தம்பதியினரின் முகங்களை மறைப்பதற்கு மறந்துவிட்டதாக ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதையடுத்து அந்தத் தம்பதியினர் நஷ்ட ஈடு கோரித் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடுத்தனர்.

எனினும் நஷ்டஈடு கோரிக்கையில் இந்தத் தம்பதியர் வெற்றி பெறுவதற்கு, சிறுமியை விசாரிக்க வேண்டியிருக்கும் எனவும், அது முறையானது எனத் தான் கருதவில்லை எனவும் கூறி அந்தக்கோரிக்கையை நீதிபதி நிராகரித்தார்.

எனினும் அந்தக் காட்சியில் தோன்றியதற்காகக் குறித்த தம்பதியருக்கு சிறிய கொடுப் பனவொன்றையும் வழக்குச் செலவுத் தொகையையும் வழங்குமாறு குறித்த நிறுவனத்திற்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## தலைமுடியால் சாதனை



*சீனாவைச் சேர்ந்த 43 வயதுப் பெண் ஒருவர் தனது தலைமுடியினால் 2 வாகனங்களைக் கட்டி இழுத்து ஆண்களுக்கு இணையான சாதனையைப் படைத்திருக்கிறார்.*

*ஸியூ ஹுஜின் என்ற பெயருடைய அந்தப் பெண் தனது தலை முடியில் கட்டி 4 தொன் எடை கொண்ட 2 வாகனத்தை வெற்றிகரமாக இழுத்துள்ளார்.*

*மேலும் இவர் அடுத்த கட்டமாக 3 வாகனங்களை இழுக்கப் போவதாகச் சபதம் செய்கிறார்.*

*இந்த சாதனை பற்றி அவர் தெரிவித்ததாவது;*

*முதலில் பைகளில் தண்ணீரை நிரப்பி வைத்துத் தலை முடியில் கட்டித் தூக்கிப் பார்த்தேன். பின் சக ஊழியர்கள் கொடுத்த ஒத்துழைப்புடன் வாகனத்தை இழுக்க, பயிற்சி எடுத்து இப்போது இந்தச் சாதனையை நிகழ்த்தி இருக்கிறேன் என்றார்.*

*மேலும் இந்த முயற்சியால் சில முடிகளை இழக்க நேரிடுகிறது. என்றாலும் வெற்றி கிடைத்ததும் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.*

# அல்-ஷபாப் 'அவுட்'

## சோமாலியாவின் எதிர்காலத்துக்கான மாநாட்டில்




மொகதிஷ்,பெப்.25

சோமாலியாவின் எதிர்காலம் குறித்து ஆராயும் ஒரு மாநாடு லண்டனில் ஆரம்பமாகியுள்ளது. ஆனால் இந்த மாநாட்டில் அங்கு செயற்படும் முக்கிய இஸ்லாமிய இயக்கமான அல் ஷபாப்க்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை.

அந்த நாட்டின் மத்திய மற்றும் தென் பகுதியின் பெரும்பாலான நிலப்பரப்பு அல் ஷபாப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. தொடர்ந்து கடும் தாக்குதலுக்கு உள்ளாகி வரும் அல் ஷபாப்பினர், நாட்டின் தலை நகர் மொகதிஷுவிலிருந்து விரட்டப்பட்டுள்ளனர்.

அல் ஷபாப் அமைப்பின் மீதான தாக்குதலும், அதனால் அதற்கு ஏற்பட்ட பின்னடைவும், லண்டன் மாநாட்டுக்கு ஒரு முக்கிய காரணம். இந்தத் தாக்குதல்கள் சோமாலியாவின் எதிர்காலம் குறித்து பேசுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

பல வின் [illegible] எனக் கூறப்படுகின்றபோதிலும் மற்ற கெரில்லா இயக்கங்களைப்போலவே தாக்குதல் நடத்தும் வல்லமை அந்த இயக்கத்துக்கு இன்னமும் உள்ளது. அதன் மீதான தாக்குதலை, கூடுதல் வல்லமை கொண்ட படைகள் நடத்திவரும்வேளையில், அல் ஷபாபினர் மக்களிடையே கலந்துவிடக் கூடும்.

கார் குண்டுகளையும், தற்கொலைக் குண்டுதாரிகளையும் குறிப்பிடத்தகுந்த விளைவுகளை ஏற்படுத்த அல் ஷபாப் இன்னமும் பயன்படுத்தி வருகிறது.

அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் இருக்கும் மக்களை இரும்புக் கரம் கொண்டு கட்டுப்படுத்தவும் தமது இயக்கத்தை விரிவுபடுத்த வலிந்து ஆள்சேர்ப்பு செய்யவும் அல் ஷபாப்பின் கொள்கை அனுமதிக்கிறது.

இவ்வாறான சூழலில் சோமாலியத் தலைவர்கள் லண்டனில் தங்களது சர்வதேச நண்பர்களைச் சந்தித்துப் பேசும்போது, அங்கு உண்மையான ஒரு முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்றால், அல் ஷபாபை எப்படிச் சமாளிப்பது என்பது முக்கியமாக விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இல்லாவிட்டால் நிலைமை மோசமாகக்கூடும்.

## யூரோவால் பின்னடைவு

யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் நாடுகள் இந்த ஆண்டில் பொருளாதார பின்னடைவை நோக்கிச் செல்லும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அண்மைய காலங்களில் நிதிச் சந்தைகள் ஸ்திரமாகி வருவதாக சமிஞ்சைகள் வரும் நிலையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தக் கருத்து வந்துள்ளது.

இந்த ஆண்டு யூரோ நாடுகளின் பொருளாதாரம் 0.3 சதவீதம் சுருங்கும் என தாங்கள் எதிர்பார்ப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்டக் குழுவான ஐரோப்பிய ஆணையம் கூறியுள்ளது.

யூரோ நாடுகளின் பொருளாதார வீழ்ச்சி என்பது சிறிய அளவிலானது என்று கூறியுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் ஒலி ரெயின், அவை ஸ்திரமடைவதற்கான அறிகுறிகள் தெரிவதாகவும் கூறியுள்ளார். இதேவேளை டொலரின் பெறுமதி அதிகரித்து வருவதும் யூரோவின் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாக்கப்பட்டது பொலிஸ் நிலையம்

பெஷாவர், பெப்.25

பாகிஸ்தானில் வடமேற்கு நகரான பெஷாவரில் தீவிரவாதிகளின் தாக்குதல் ஒன்று நடைபெற்றுள்ளது.

நகரின் மத்தியில் அமைந்திருக்கும் பொலிஸ் நிலையமே இந்தத் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றது.

இதன்போது மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர் என்றும் ஏழுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



அதிக அடிப்படைவாதிகளைக் கொண்டிருக்கும் இந்த நகர் தலிபான்களின் கோட்டையாக இருந்து வருகின்றது. இந்த வாரத்தின் தொடக்கப் பகுதியில் கூட இதுபோன்ற ஒரு தாக்குதல் சம்பவம் இடம் பெற்றிருந்தது. பஸ் நிலையம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 12 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 30 பேர் காயமடைந்தும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பட்டினி போட்டு நாய்களை கொன்றதால் மகன் சிறையில்

லண்டன், பெப்.25


பிரிட்டனில் நாய்களைப் பட்டினி போட்டுச்சித்திரவதை செய்த தாய், மகனுக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பிரிட்டனின் வெஸ்ட் யார்க்ஷைர் பராட் போர்ட் பகுதியில் வசிப்பவர் ஜூலி. வயது 50. இவருடைய மகன் ஜெமி டெய்லர் (31). இவருக்கு வேலை இல்லை. இவர்கள் 2 நாய் களை வீட்டில் வளர்த்து வந் தனர். நாய்களுக்குச் சரியான உணவு அளிக்காமல் சித்திரவதை செய்துள்ளனர். தண்ணீர் கூடக் கொடுக்காமல் இருந்துள்ளனர். இதனால் 2 நாய்களும் பசியில் எலும்பும் தோலுமாக மாறிவிட்டன. இதுகுறித்து தகவல் அறிந்து நாய்களை மீட்க விலங்குகள் வதை தடுப்புத்துறை அதிகாரிகள், ஜூலி வீட்டுக்கு விரைந்து சென்றனர். ஆனால், அவர்களை உள்ளே விட ஜூலி மறுத்துவிட்டார். கடைசியில் வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து அதிகாரிகள் சோதனையிட்டனர். அங்கு 2 நாய்கள் செத்துக்கிடந்தன. இதையடுத்து விலங்குகள் சித்திரவதைக் குற்றத்துக்காக ஜூலி, ஜெமி இருவருக்கும் நீதிமன்றம் தலா 16 வாரங்கள் சிறைத் தண்டனை விதித்தது. அத்துடன், செல்லப் பிராணிகளை வளர்க்க இருவருக்கும் தடை விதிக்கப்பட்டது.

## ஆண்களுக்காக நாவல் எழுதும் ரவ்லிங்

லண்டன், பெப்.25

குழந்தைகளுக்காக மந்திர, தந்திரக் கதைகளை எழுதி உலகப் புகழ்பெற்ற ஜே.கே. ரவ்லிங், முதல் முறையாக ஆண்களுக்கான நாவலை எழுதியுள்ளார். பிரிட்டனைச் சேர்ந்த நாவலாசிரியர் ஜே. கே. ரவ்லிங். உலக வரலாற்றில் இவருடைய நாவல்கள் அதிக பிரதிகள் விற்று சாதனை படைத்தன. இதன் மூலம் கோடீஸ்வரர் ஆனார். இப்போது பிரிட்டன் கோடீஸ்வரர்கள் பட்டியலில் 15ஆவது இடத்தைப் பெற்றுள்ளார் ரவ்லிங். குழந்தைகள் கதைகளை மட்டுமே எழுதி வந்த ரவ்லிங், முதல் முறையாக ஆண்களுக்கான நாவல் எழுதியுள்ளார். இந்த நாவல் மிகவும் வித்தியாசமானதாக இருக்கும். இந்த புத்தகத்தின் தலைப்பு மற்றும் பிற விவரங்கள், உலகம் முழுவதும் நாவல் வெளியாகும் திகதி போன்றவற்றை விரைவில் அறிவிப்போம் என்று புத்தக வெளியீட்டாளர்கள் லிட்டில் மற்றும் பிரவுன் ஆகியோர் நேற்றுத் தெரிவித்தனர்.

## பத்திரிகையைத் தின்னும் கர்ப்பிணிப் பெண்



பிரிட்டனைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் பத்திரிகைகளை உணவாக உட்கொள்ளும் விநோத பழக்கத்திற்குத் தான் உட்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.

ஆன் குரன் என்ற 35 வயது பெண், செய்தித் தாள் மட்டுமே மிகவும் சுவையான உணவாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

அவர், அவசர 'சிற்றுண்டியாக' பயன்படுத்திக்கொள்வதற்காக செய்தித்தாள்களிலிருந்து கிழிக்கப்பட்ட துண்டுகளைத் தனது கைபையில் வைத்துக்கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

"நான் வீட்டு வரவேற்பறையில் அமர்ந்து பத்திரிகைகளில் உள்ள பக்கங்களைக் கிழிக்க ஆரம்பித்து விடுவேன். அனைவரும் வேடிக்கையாக பார்த்துக்கொண்டு இருப்பர். இப்பத்திரிகைத் துண்டுகளை நான் சொப்பிங் செய்யும்போது உட்கொள்வேன்" என அவர் கூறியுள்ளார்.

செய்தித் தாள்கள் மாத்திரம் அதுவும் குறிப்பிட்ட சில சுவைகொண்ட கடதாசிகள் மாத்திரமே தனக்கு உண்பதற்கு விருப்பமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

## தண்ணீருடன் இன்னொரு கோள்

பூமியில் இருந்து 20 லட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு புதிய கோளை விஞ்ஞானிகள் ஏற்கனவே கண்டுபிடித்திருந்தனர். அதற்கு ஜி.ஜே.1214-பி என்று பெயரிட்டிருந்தனர். அந்த கோளை விஞ்ஞானிகள் முழுமையாக ஆய்வு செய்தனர். அப்போது அங்கு தண்ணீர் இருப்பதற்கான அறிகுறிகள் தெரிந்தன.

இதனால் அங்கு உயிரினங்கள் வாழ்வதற்கு வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். அந்தக் கோளில் வெப்பநிலை 200 டிகிரி வரை இருப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள். புதிய கோள் பூமியை விட 2.7 மடங்கு பெரிதாக உள்ளது. அதே நேரத்தில் பூமியை விட 8 மடங்கு எடை அதிகமாக இருக்கிறது.

# நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

தோற்றம் 15 - 12 - 1979



மறைவு 26 - 01 - 2012

## செல்வி தர்மரூபி கனகரட்ணம்

கடந்த 26.01.2012 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் செல்வி தர்மரூபி கனகரட்ணத்தின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (25.02.2012) சனிக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறும். தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு வீட்டுக்கிருத்தியம் அமரரின் இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளிலும் நாளை (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி கூறுகின்றோம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்ப விளக்கு எமை விட்டு பிரிந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உள்ளூர், வெளியூரில் இருந்து தொ.பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதிக் கிரியை நிகழ்வுகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கனகரத்தினம் (தந்தை)
கிரிதரன் (அண்ணன்)

கந்தையாவாத்தியார் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி தேவராஜமலர்



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி தேவராஜமலர் (மலர்ரீச்சர்) 20.02.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் - வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சீனி - வைரவிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்)யின் அன்பு மனைவியும், மதி, வாசுகி ஆகியோரின் அன்புத் தாயும், பாஸ்கரன், ஜெயராஜாவின் பாசமிகு மாமியும், சிந்துஜா, வர்ஷிகாமேரி, விக்டர்தேவராஜ் ஆகியோரின் ஆசை அம்மம்மாவும், தவமலர், முரளிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்னேஸ்வரன், அருந்ததி ஆகியோரின் மைத்துனியும், கண்ணன், அஜி, றீகன், சாலினி ஆகியோரின் பெரியதாயும், கோபிகா, கோகிலன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான ராசம்மா, சின்னத்துரை, ராசா, கனகரத்தினம் மற்றும் பொன்னுத்துரை, நாகம்மா, அன்னம்மா, புனிதவதி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் சித்தன்கேணி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிந்துபவனம்",
சிவன்கோயில் வீதி, சித்தன்கேணி.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. முன்றிலில் தமிழர்கள் அணிதிரள வேண்டும்

## நடிகர் சத்தியராஜ் அழைப்பு



**அனைவரினது கவனமும் நம் பக்கம் திரும்பும்போது தான் தமிழர்களின் இலட்சியம் வெற்றிபெறும்**

சென்னை,பெப்.25

ஜெனீவாவில் ஆரம்பமாகும் மனித உரிமை மாநாட்டின்போது தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு குரல் எழுப்பவேண்டும் என்று தமிழ் உணர்வாளர் நடிகர் சத்தியராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசுக்கு எதிரான ஆத ரவை அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் தெரிவித்துள்ள இந்த வேளையில் அதற்கு வலுச் சேர்க்கின்ற வகையில் தமிழர்களாகிய நாம் எமது எழுச்சியைக் காட்டவேண்டியது அவசியமாகின்றது. அந்த எழுச்சியே அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் ஓர் உத்வேகத்தைக் கொடுக்கும்.

அந்த எழுச்சியை நாம் காட்ட வேண்டுமானால் நமக்குள் இருக்கும் பேதங்களை, எமக்குள் இருக்கும் கிளைகள் எல்லாவற்றையும் மறந்து ஒரு குடையின் கீழ் தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் எனும் ஒற்றை வார்த்தைக்காக எல்லா பேதங்களையும் மறந்து நாம் பெரியளவில் ஒன்று கூடவேண்டும்.

அந்தக் கூட்டத்தைப் பார்க்கும் போதுதான் உலக நாடுகளின் கவனம் நம் பக்கம் திரும்பும். எனவே எல்லோருடைய கவனத்தையும் எம் பக்கம் திருப்ப வேண்டும் என்றால் எமது ஒற்றுமையும், ஒன்றுகூடும் கூட்டத்தின் அளவுமே அதனை ஏற்படுத்தும்.

அனைவரினது கவனமும் நம் பக்கம் திரும்பும் போது தான் தமிழர்களின் இலட்சியம் வெற்றிபெறும் - என்றார். (வ)

# அணுசக்தி தேவை பிரதமர் கருத்து

டில்லி, பெப்.25

இந்தியாவுக்கு அணு சக்தி தேவை என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். ஜப்பானின் ஃபுகுஷிமா அணு உலை விபத்துக்குப் பின்பும் இந்தியா அணு சக்தியை விரும்புகிறதா என்ற கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

இதுகுறித்து 'சயன்ஸ்' இதழுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்ததாவது:

இந்தியாவுக்கு அணு சக்தி தேவைப்படுகிறது. இந்தியாவில் உள்ள புத்திஜீவிகள் அணுசக்தியை ஆதரிக்கின்றனர். இப்போது அணு சக்தித் திட்டங்களை நிறைவேற்றுவது கடினமான ஒன்றாகிவிட்டது. அமெரிக்காவிலிருந்து இயங்கும் தொண்டு நிறுவனங்கள் இந்தியாவின் எரிசக்தித் தேவையை உணர்ந்து கொள்ளாததே இதற்குக் காரணமாகும் - என்றார் அவர். (வ)

# லண்டனில் மேயர் தேர்தல் இந்தியப் பெண் போட்டி



பிரிட்டனில் எதிர்வரும் மே மாதம் நடைபெற உள்ள மேயர் தேர்தலில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சியோபான் பெனிடா என்ற பெண் போட்டியிடுகிறார்.

எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி, மேயர் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டி யிட, 9 பேர் தமது பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

வேட்பாளர்களின் பட்டியல், மார்ச் மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட உள்ளது. பல்வேறு கட்சி சார்பில் வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் களமிறங்க உள்ள நிலையில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சியோபான் பெனிடா (வயது 40), சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்.

பிரிட்டன் தந்தைக்கும், இந்தியத் தாய்க்கும் பிறந்த சியோபான், கடந்த 1996 ஆம் ஆண்டு, சிவில் சமூக அதிகாரியாகப் பணியில் சேர்ந்தார்.

பிரிட்டன் பிரதமர்கள் ஜோன் மேஜர், ரோனி பிளேர், கோர்டன் பிரவுன் ஆகியோரிடம் அமைச்சுச் செயலராகப் பணியாற்றியுள்ளார். தற்போது இந்த பதவியை ராஜினாமாச் செய்து விட்டு, தேர்தலில் போட்டியிட ஆயத்தமாகி வருகிறார். (வ)

# இத்தாலியர்கள் மனுவை ஏற்றது கேரள நீதிமன்றம்

தமிழக மீனவர் மீதான கொலைவழக்குத் தொடர்பில் தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை ரத்து செய்யக்கோரி இத்தாலிய கடற்படை யினரின் மனுவை, கேரள நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

கேரள கடல்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை அநியாயமாகச் சுட்டுக்கொன்ற இத்தாலியக் கடற்படையைச் சேர்ந்த இருவரை கேரள பொலிஸார் கொல்லம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தினர்.

இத்தாலிய கடற்படையினர் சார்பில், கேரளா பொலிஸார் தங்கள் மீது பதிவு செய்துள்ள வழக்கை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அவர்கள் மனுவில், துப்பாக்கிச் சூடு இருநாட்டு எல்லையில் நடந்த பிரச்சினை என்பதால், இந்தச் சம்பவத்துக்கு இந்திய சட்டப்படி நடவடிக்கை எடுப்பது தவறு என்று குறிப்பிட்டிருந்தனர்.

இதையடுத்து அவர்களது மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி, இதுகுறித்து அடுத்த வாரத்துக்குள் பதில் அளிக்குமாறு மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.



முதல்வர் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 64 லட்சம் மரக்கன்றுகள் நடும் விழா ஆரம்பமாகியது. இதனை சென்னை தலைமைச் செயலகம் எதிரே மாநகராட்சி பூங்காவில் ஆலமரக்கன்றை முதல்வர் ஜெயலலிதா நடுகிறார். (வ)

# மேலும் ஒரு வங்கிக் கொள்ளை

மேற்குவங்க மாநிலத்தில் உள்ள கிராம வங்கியில், 42லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அவுரா மாவட்டப் பகுதியில் நேற்றுக் காலை, வங்கியை திறக்க ஊழியர்கள் சென்ற போது வங்கியின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. பொலிஸார் உள்ளே சென்று பார்த்த போது, 42 லட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இதுகுறித்து அந்தப் பகுதி பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

# குழந்தையின் தலைக்கு வெளியே 8 கிலோ கட்டி



டில்லி, பெப்.25

பீகாரைச் சேர்ந்த 4 மாத குழந்தையின் தலையின் வெளிப்புறத்தில் வளர்ந்திருந்த 8 கிலோ கட்டியை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி எய்ம்ஸ் டாக்டர்கள் சாதனை செய்துள்ளனர்.

பீகாரின் ஷிவான் மாவட்டத்தைச் சேர்ந்த சுஷ்மா பாண்டேயின் 4 மாதக் குழந்தையின் தலைக்குப் பின்னர் தலையை விடவும் பல மடங்கு பெரிதான கட்டி வளர்ந்திருந்தது. இதனால் குழந்தை தலையை அசைக்க முடியாமலும், சரியான உணவு உட்கொள்ள முடியாமலும் தவித்தது.

பீகாரில் இந்தக்குழந்தையைப் பரிசோதித்த வைத்தியர்கள் அதற்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்றும், இதற்காக முழுமையான-வசதி டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில்தான் உள்ளது என்றும் கூறி அவர்களை அனுப்பி வைத்தனர். இதன்படி, கடந்த ஜனவரி 18 ஆம் திகதி குழந்தையை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார், சுஷ்மா பாண்டே. நரம்பியல் துறை தலைவர் டாக்டர் ஏ.கே.மஹா பத்ரா இக்குழந்தையைப் பரிசோதித்தார்.

குழந்தையின் தலையின் பின்புறத்தில் எலும்பு இல்லாத நிலையில், மூளையில் இருந்து வடியும் தண்ணீர் கட்டியாக வெளியே உருவாகி இருப்பது தெரியவந்தது. முதலில் எலுமிச்சம் பழம் அளவில் இருந்த கட்டி தற்போது 8 கிலோ அளவுக்கு வளர்ந்திருப்பது தெரியவந்தது. குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்தால், 10 சதவீதம் அளவுக்கு மட்டுமே உயிருக்கு பாதிப்பு இருப்பதாகவும், அதனால் தாராளமாக அதைச் செய்யலாம் என்றும் வைத்தியர் மஹாபத்ரா தெரிவித்தார். இதையேற்று, குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்ய குழந்தையின் தாய் சுஷ்மா பாண்டே ஒப்புக் கொண்டார். இதன்படி, குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்து கட்டி அகற்றப்பட்டது. கட்டி எடுப்பதற்கு முன்பு 11 கிலோவாக இருந்த குழந்தையின் எடை தற்போது 3 கிலோவாக குறைந்துள்ளது. (வ)

# வைரக் கற்களைக் கடத்தியவர் கைது

சென்னை,பெப்.25

சென்னை விமான நிலையத்தில் 3 கோடி மதிப்புள்ள வைரக்கற்களைக் கடத்தி வந்தவர் கைது செய்யப்பட்டார்.

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த லால்வாணி என்பவர் விமானம் மூலம் சென்னைக்கு 3 கோடி ரூபாய் மதிப்புள்ள வைரக்கற்களைக் கடத்தி வந்தார்.

சுங்கத்துறையினரின் பரிசோதனையின் போது, இவர் கைதுசெய்யப்பட்டார்.

இதுகுறித்து லால்வாணியிடம், சுங்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களை வழங்கவும்

## தமிழக அரசுக்கு கோரிக்கை

சென்னை,பெப்.25

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் அதற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு சென்னை மேல் நீதிமன்றம் தமிழக அரசுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் தமிழக மீனவர்களைப் பாதுகாக்க மத்திய அரசு தவறிவிட்டதாகக் குற்றம் சுமத்தி, தாக்கல் செய்யப்பட்ட மனுவின் விசாரணையின் போது நீதிபதி [illegible]

குறித்த வழக்கில் தீர்ப்பை வழங்குவதற்கு இந்த விவரங்கள் அவசியம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

தமிழக மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று நீதிமன்றம் முன்னதாக உத்தரவு பிறப்பித்திருந்தது. எனினும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனையடுத்தே நீதிமன்றத்தை அவமதித்த குற்றச் சாட்டின் பேரில் ஸ்டாலின் என்பவரால் மீண்டுமொருமுறை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1974ஆம் ஆண்டின் கச்சதீவு உடன்படிக்கையின்படி, தமிழக மீனவர்கள் தமது [illegible] தேசங்களில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படவேண்டும் என்று மனுதாரர் கோரியுள்ளார். (வ)

# வருமான வரி விவரத்தை வெளியிட மறுத்த சோனியா



சென்னை,பெப்.25

வருமான வரி செலுத்திய விவரங்களை வருமான வரித்துறை தவிர 3ஆவது நபருக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

டில்லி வருமான வரி உதவி ஆணையருக்கு சென்னையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் வி.கோபால கிருஷ்ணன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு மனு அனுப்பி இருந்தார்.

அந்த மனுவில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் 2000-2001 மற்றும் 2010-2011ஆம் ஆண்டுக்கான வருமான வரிக் கணக்குத் தாக்கல் செய்த விவரங்களை தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 11இன் கீழ் தெரிவிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதையடுத்து சோனியாவுக்கு வருமான வரித்துறை அலுவலகத்திலிருந்து கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்துக்கு சோனியா அனுப்பியுள்ள பதிலில் தெரிவித்ததாவது:

எனது சொத்துக் கணக்கு, வருமான வரி செலுத்திய விவரங்கள் தனிப்பட்ட விடயம். பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள நான் அதை தேவையில்லாத 3ஆவது நபருக்கு பரிமாற முடியாது.

அது எனது தனிப்பட்ட பாதுகாப்பு விவகாரத்தில் தலையிடுவதாகும். தனிநபர் வருமான வரித்துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் ரகசியமானவை. பாதுகாக்கப்பட வேண்டியவை.

1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டம் 138 ஆவது பிரிவின் கீழ் வேறு எவருக்கும் தெரிவிக்க வேண்டியதில்லை - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைப் போட்டி

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி பி.ப.1.மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் வே. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருத்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தனும், சிறப்பு விருந்தினர்களாக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.முத்துலிங்கம், யாழ். பல் கலைக்கழக உடற் கல்வி விரிவுரையாளர் எம். இளம்பிறை ஆகி யோரும் கலந்து கொள்வர். (வ)

* * *

யாழ்.வல்வை சிவகுரு வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வல்வெட்டித்துறை தீருவில் இளைஞர் விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் அ.சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக ஓய்வுபெற்ற விரிவுரையாளரும் பாடசாலை மாணவருமான எஸ். இராஜேந்திரனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.செல்வக்குமரனும் கலந்துகொள்வர். (வ-16)

* * *

யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் இ.கோகுலராகவன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக யாழ்.வலய,பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. எஸ். சற்குணராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் மற்றும் அச்சுவேலி இராணுவத்தளபதி மேஜர் ஜி. ஏ. எல். பீட்ஸ்ரீ ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர். (ந)

* * *

அளவெட்டி, பெப்.25

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயம் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசாவும், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் அளவெட்டி கிளை முகாமையாளர் சி. சிவகுமாரும் கலந்து கொள்வர். (வ-36)

* * *


கட்டைவேலி ஞானாசாரியார் கல் லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.ஸ்ரீராமச் சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி.நந்தகுமாரும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கமும் கலந்துகொள்வர்.(வ-8)

## பயிற்சி நெறி

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தித் பேரவையினர் மூன்றாவது அணியினருக்கான மனைப் பொருளியல் பயிற்சி நெறியை அடுத்த மாத முற்பகுதியில் நடத்தவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறியில் பங்கு பற்றிப் பயிற்சி பெற விரும்புவோரை பளை முல்லையடியில் உள்ள பேரவை அலுவலகத்தில் உரிய படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறு பேரவையினர் அறிவித்துள்ளனர். (வ-9)




உசன் கந்தசுவாமி ஆலய மஹா உன்னத பாஞ்ஜன்ய சகித 108 சங்காபிசேக ஸ்கந்த ஹோமப் பெருவிழா நாளை ஞாயிறு ஆலய பிரதம குரு 'அருள் வாக்குச் சித்தர்' குகவீதி இரத்தின கேதீஸ்வர சுவாமி தலைமையில் காலை 7மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் ''ஸ்கந்த கானங்கள்'' என்ற இறுவட்டு வெளியீடும் இடம்பெற வுள்ளது. இந்த நிகழ்வுகளைwww.usanjajaffna.com என்ற இணையத் தளத்தில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(வ-131)

* * *

யாழ்ப்பாணம், பெப்.25

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்தின் மாசி மக இலட்சார்ச்சனை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை மாசி மகப் பெருவிழா இடம்பெறும்.

இலட்சார்ச்சனை கிரியா காலத்தில் சந்திப்பூசை, சங்கற்பம், நியாஸம்,தீபராதனை, அர்ச்சனை, ஹோமம் , உச்சி காலப்பூசை, சாயரட்சைப் பூசை, சங்கற்பம் பூசை போன்றன இடம்பெறும்.

மாசி மகப்பெருவிழாவில் உஷாக் காலப் பூசை, மாசி மகத் தீர்த்தம், காலை சந்திப்பூசை, கும்ப பூசை, திரவியாபிஷேகம், அபிசேகம் போன்றன இடம் பெறும்.

(வ-14)

* * *

கைதடி கற்பக விநாயகர் ஆலய மகாகும்பாபிசேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிதொடக்கம் முற்பகல் 10.15 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

(வ)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.01.2011 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 2012.03.24. (சனிக்கிழமை) முற்பகல் 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| காங்கேசன்துறை | மானிப்பாய் |
| யாழ். பிரதான வீதி | மல்லாகம் |
| ஊர்காவற்றுறை | உரும்பிராய் |
| நெல்லியடி | புத்தூர் |
| அச்சுவேலி | பண்டத்தரிப்பு |
| சங்கானை | கோப்பாய் |
| சுன்னாகம் | கொடிகாமம் |
| சாவகச்சேரி | உடுப்பிட்டி |
| வல்வெட்டித்துறை | திருநெல்வேலி |
| யாழ். பல்கலைக்கழகம் | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9495) (2-6-7) 2012.02.23



### விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், குருவிகள், புதியவகைக் கூடுகள், நாய்க்குட்டிகள்,புதியஇனங்களில் பூக்கன்றுகள் மற்றும் பல இன கோழிக்குஞ்சுகள் அனைத்தும் ஒரே இடத்தில் விற்பனைக்கு உண்டு.

யாழ் அக்கவரியம்
941, K.K.S றோட், யாழ்ப்பாணம்

### விற்பனைக்கு

500 முட்டைக்கோழி விற்பனைக்கு உண்டு. (பாம் கோழி)
தொடர்பு: 0776094232

### விற்பனைக்கு

வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப்பாவனைக்கு மேற்ற திண்டுக்கல் இரும்புப்பெட்டகங்கள் (IronSafe) வேண்டிய அளவுகளில் விற்பனைக்கிருக்கின்றன. சகல விதமான பழுதடைந்த இரும்புப் பெட்டகங்களும் (IronSafe) சிறந்த முறையில் திருத்தியமைத்துக் கொடுக்கப்படும்.

இல. 13, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 0779698942

### மலிவு விற்பனை

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள் 19,5000/= JAFFNA SONY Waga Flat 21" - 25" TV கள் 13,500/= பைனியர் அம் 10,000/= றேடியோ - கசெற் - CD - 3,500/=

சோனி ரேட் சென்ரர்
(கொமர்ஷல் வங்கி முன்பாக),
56, K.K.S வீதி, சுன்னாகம்.
தொடர்பு : 077 0440570
077 1393670
(14987)(6-7-8)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள யமகா நியூஸ்மேட் (புதியமொடல்) GS xxxx மற்றும் பெற்றோல் மீற்றர் சாளி GG xxxx விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 4242327
071 8565479

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

### MOORTHY GUEST HOUSE

மூர்த்தி கெஸ்ற் கவுஸ்
250 ஆசனங்களுடன் குளிரூட்டப்பட்ட மண்டபம்
62/20 Stanly Road Jaffna (2nd Floor)
T.P:- 021 221 9399
A/C ,Non A/C Rooms, hall



### மணமக்கள் தேவை

*. 1970 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல், 15 கிரக பாவம் உடைய, கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகன் வந்துள்ளார். படித்த, அழகான மணமகள் தேவை,
*. 1978 இல் பிறந்த, 4 இல் செவ்வாய், 40 கிரகபாவம், கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.
*. 1975 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 31½ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்றுவந்துள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.
*. 1979 இல் பிறந்த 12 இல் செவ்வாய், 43 கிரகபாவமுடைய அவுஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
*. 1980 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 115 பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு கனடாவில் மணமகள் தேவை.
*. 1973 இல் பிறந்த, செவ்வாய் பாவம் இல்லாமல் 25 கிரகபாவம் உடைய சுவிஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகாக மணமகள் தேவை.
*. 1982 இல் பிறந்த, 12 இல் செவ்வாய், 10½ பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு ஊரில் படித்த மணமகன் தேவை.
*. 1985 இல் பிறந்த, 7இல் செவ்வாய், 53 கிரக பாவமுடைய மாஸ்ரர் பட்டம் முடித்த லண்டன் பிரஜா வுரிமை பெற்ற மணமகளுக்கு படித்த, லண்டன் மணமகன் தேவை.

(14989)(6-7-8) T.P : 077 6070862

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944 | நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944 | சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085 |

(14752) (45-6)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 18 ★ 09 ★ 1929



மறைவு 08 ★ 03 ★ 2011

### அமரர் சிவசம்பு தனபாலசிங்கம்

(தொலைத் தொடர்பு ஓய்வு பெற்ற ஊழியர்)

அன்புக்கும் பாசத்துக்கும் பண்புக்கும்
உறைவிடமாய் வாழ்ந்த எம் குலவிளக்கே
எமை விட்டு எங்கு சென்றீர்? - தேடுகின்றோம்
ஆண்டொன்று போனாலும் இந்த அண்டம்
உள்ளவரை வாழும் உங்கள் நினைவுகள்.

புதைபொருள் ஆராய்ச்சி நிலையம் அருகில்,
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(14911)(45-7-6)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### மாங்கம் மாணிக்கம்

மண் 03★10★1936

விண் 16★02★2002

திதி :- மாசி பூர்வபட்ச சதுர்த்தி

எல்லாம் வல்ல வேதவன விநாயகனே
நல்ல பிறவி கொடுத்தருளப்பா என
எந்நாளும் தொழுது வணங்கி நிற்கும்

அன்புக் கணவர் மாணிக்கம்

நி.மு:-இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரி.
த.மு:- இருபாலை வீதி, கோண்டாவில்.

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 05 ★ 01 ★ 1933

உதிர்வு 28 ★ 02 ★ 2009

திருமதி
### இரத்தினசிங்கம் இரத்தினாம்பாள்

(திதி : 25.02.2012)

மூன்றாண்டுகள் சென்றாலும்
அம்மா உங்கள் பிரிவை மறக்க முடியாது
தினமும் மனக்கண்முன் நின்று
எம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்

அன்பு இல்லம்,
ஓடை ஒழுங்கை, சவனாய்,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.
(C9483)(6-7-8)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹோட்டல் நிர்வாகத்திடம் நட்டஈடு கோர தீர்மானம்

கொழும்பு,பெப்.25
ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆஸ்திரேலிய ஹோட்டல் நிர்வாகத்திடம் நட்டஈடு கோரத் தீர்மானித்துள்ளார்.

ஆஸ்திரேலிய ஹோட்டல் ஒன்றிலிருந்து கீழே விழுந்த அமைச்சர் காயமடைந்து, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவரின் இரண்டு கால்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அதற்காக நட்ட ஈடு கோரப் போவதாக அவர் தெரிவித்தார்.

மருத்துவ செலவுகளை காப்புறுதி நிறுவனமொன்று பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

ஒரு காலில் மேலும் ஓர் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

# எல்லை மீறி வந்த போதும் நாங்கள் தாக்கியதே இல்லை

## இலங்கைக்கான இந்தியத் தூதர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.25
இந்திய மீனவர்கள் எல்லை மீறி வந்தாலும் இலங்கைக் கடற்படையினரால் அவர்கள் மீது ஒரு போதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவில்லை என்று இலங்கைக்கான இந்தியத் தூதர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.

குஜராத் கைத்தொழில் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

**இலங்கைக்கு தற்போது அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருவதால் இந்தியர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும்.**

இந்திய மீனவர்கள் மீது நாங்கள் ஒருபோதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவில்லை. அவர்கள் மீன்பிடி நடவடிக்கைக்காக சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிய வேளைகளில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் கடற்கொள்ளையர்களென நினைத்து தவறுதலாக தென்கரையோரத்தில் நின்ற இந்திய மீனவர்கள் மீது இத்தாலிய வணிகக் கப்பல் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு மீனவர்கள் மரணமடைந்துள்ளனர்.

சிறந்த வாய்ப்புக்களை கொண்டமைந்த இலங்கையில் சுற்றுலாத் துறையை விருத்தி செய்ய முடியும். இலங்கைக்கு தற்போது அதிகள வில் சுற்றுலாப் பயணிகள் வருவதால் இந்தியர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும்.

இலங்கையில் அமைக்கப்பட்டுவரும் 500 மெகாவாட் அனல் மின்நிலையமானது தேசிய அனல்மின் கூட்டுத்தாபனத்துக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். மாலைதீவில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடியை இந்திய அரசு எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும் அவதானித்த அதே வேளை, உள்விவகாரங்களில் தலையீடாமலும் இருந்துள்ளது- என்றார். (ச)

## ஐந்து பெண்களை மணந்த 'மன்மதன்'

**2011 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்கும் 2012 ஜனவரி மாதத்துக்கும் இடையிலேயே ஐவரையும் திருமணம் செய்துள்ளதாக பொலிஸார் கூறினர்.**

கொழும்பு,பெப்.25
தொழிலதிபராகத் தன்னை அடையாளம்காட்டிக்கொண்டு, ஐந்து பெண்களை திருமணம் செய்தாகக் கூறப்படும் 28 வயது 'மன்மதன்' ஒருவரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இளைஞன் எட்டு மாத காலத்துக்குள் ஐந்து பெண்களைத் திருமணம் செய்துள்ளார். சந்தேக நபரிடமிருந்து இரண்டு திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் 4 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்கும் 2012 ஜனவரி மாதத்துக்கும் இடையிலேயே ஐவரையும் திருமணம் செய்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இதேவேளை, திருமணம் செய்த பெண்களுள் இரண்டு முஸ்லிம் யுவதிகளும் உள்ளடங்குகின்றனர். அவர்களை முஸ்லிம் இளைஞரைப் போல் நடித்து திருமணம் செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்களை ஏமாற்றி திருமணங்களை செய்வதற்கு முன்னர் இரண்டரை வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தவர் இந்த இளைஞர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பொன்சேகாவை காப்பாற்றத் தயார்

### அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

கொழும்பு,பெப்.25
முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால், அவரைப் பாதுகாக்கத் தயார் என்று மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.


சரத் பொன்சேகா வேறு ஓர் குற்றச் செயலுக்காக சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றார் என்று அவர் தெரிவித்தார்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வழக்குத் தொடரப்பட்டால் அரசு பொன்சேகாவைப் பாதுகாக்கும் என்று அவர் தெரிவித்தார்.

**நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் நோக்கில் சர்வதேச சமூகம் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றது**

நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் நோக்கில் சர்வதேச சமூகம் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றது என்று அவர் தெரிவித்தார்.

இந்த சூழ்ச்சித் திட்டங்களுக்கு அரசு இடமளிக்காது என்று அவர் தெரிவித்தார். (ச)



ஐக்கிய தேசியக்கட்சியின் அநீதிக்கு எதிரான தேசிய இயக்கத்தினால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இணையத்தளமொன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டார்.

# பலமிக்க மாகாணம் கிழக்கு அதற்கு தேவையில்லை இணைவு

### மட்டு.பாடசாலை நிகழ்வில் பஸில்



மட்டக்களப்பு,பெப்.25
கிழக்கு மாகாணம் எந்த ஒரு மாகாணத்துடனும் இணைப்பை ஏற்படுத்தத் தேவையில்லை. இலங்கையின் பலம் வாய்ந்த ஒரு மாகாணமாக இருக்க முடியும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம், வகுப்பறைக் கட்டடம் அடங்கிய மூன்று மாடிக் கட்டடம் ஆகியவற்றை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பாடசாலை 192 வருட காலம் பழைமையான வரலாறுகளைக் கொண்டுள்ளது. தற்பொழுது மூன்று ஆய்வுகூடங்களும் ஐந்து புதிய வகுப்பறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

192வருட கால வரலாறு என்பது பாடசாலைக்கு மட்டுமல்ல எந்தவொரு நிறுவனத்துக்கும் சிறப்பான ஒரு விடயமாகும்.

அந்தவகையில் இந்தப் பாடசாலையின் அதிபர் அவரது சிறந்த பணிக்காக தேசிய ரீதியில் பல விருதுகளைப் பெற்றிருக்கின்றார். மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கு மாகாணத்தின் இதயமாக இருக்கின்றது.

இலங்கையின் மூன்றில் ஒரு பங்கு நதிகள் கிழக்கு மாகாணத்தில் தான் இருக்கின்றன. இலங்கையின் 25 சதவீதத்துக்கும் மேலான நெல் உற்பத்தி இங்கு காணப்படுகின்றது. ஆகவே கிழக்கு மாகாணம் இலங்கையின் பலம் வாய்ந்த ஒரு மாகாணமாக இருக்க முடியும்.

இந்த நாட்டினதும் மாகாணத்தினதும் எதிர்காலத்திற்கு தேவையாக இருப்பது இந்தப் பாடசாலையைப் போன்ற பாடசாலைகளும் படித்த சமூகமுமே - என்றார்.

# இராட்சத திருக்கை



மட்டக்களப்பு,பெப்.25
சுமார் ஆயிரம் கிலோவுக்கு அதிகமான எடையுடைய திருக்கை மீன் ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை சாய்ந்தமருது பிரதேச ஆழ்கடல் மீன்பிடியாளர்களால் பிடிக்கப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் பிடிக்கப்பட்ட மிகவும் பெரிய- இராட்சத திருக்கை மீன் இதுவாகும். அண்மைக்காலமாக வங்காள விரிகுடா கடல் பிரதேசத்தில் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும்போது வழக்கத்துக்கு மாறாக அடிக்கடி இராட்சத மீன்களைக் காணக்கூடியதாக உள்ளது என்று மீனவர் ஒருவர் கூறினார்.


இந்த மீன் 90ஆயிரம் ரூபாவுக்கு கடற்கரையில் வைத்தே விலை போய் விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு,பெப்.25
எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்குள் தேசிய ரீதியில் தேங்காய் உற்பத்தியை அபிவிருத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்குள் தேங்காய் உற்பத்தியை 3ஆயிரத்து 650 மில்லியன்கள் வரையில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கமைய லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு லட்சம் மில்லியன் தென்னை நாற்றுக்களைப் பயிரிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## J.A. கிறிஸ்ரி பொணிபஸ்

(இளைப்பாறிய கடற்படை அதிகாரி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 23, மவுண்கார்மேல் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட J.A. கிறிஸ்ரி பொணிபஸ் 22.02.2012 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டோமினிக் பொணிபஸ் (மொணிக் பப்பா) - மில்றெட் பொணிபஸ் தம் பதியரின் அன்பு மூத்த மகனும், கார்க் கார இரத்தினம் - பேபி தம்பதியரின் மரு மகனும், றீற்றாவின் அன்புக் கணவ ரும், காலஞ்சென்றவர்களான சணா, லிற றன், டண்ஸ்ரன், வின்ஸ்ரன், அமல்ரன் மற்றும் மெல்சன், யூலன், லெயிற்றன், அவுட்டன், மடோனா ஆகியோரின் சகோ தரனும், போல் (த சாரிகா லேணர்ஸ்), ஜெயம், தங்கா, ராணி (கனடா), ஜொய்சி (பிரான்ஸ்), மாலா (கனடா), ராஜன், நிமால் (பிரான்ஸ்), செறாட் (பிரான்ஸ்), றீற்றர் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.02.2012) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்துக்கு எடுத்துச் சென்று திருப் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, இலங் கைக் கடற்படை அதிகாரிகளின் அணி வகுப்புடன் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.23, மவுண்கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- கனடா - 0014167481437
- 00141666505984
- 0014166612573
பிரான்ஸ் - 0033164190357
- 0033148570648

(10551)(2-7-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# அமெரிக்கா, பிரிட்டனுடன் இணைகிறது நோர்வேயும்

## இலங்கைப் போரில் பொதுமக்கள்கொல்லப்பட்டது குறித்து விசாரணைக்கு கோரும் நாடுகளுடன்

இலங்கையில் இடம்பெற்ற போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடத்தக் கோரும் நாடுகளுடன் நோர்வேயும் இணைந்துள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு பொறுப்புக் கூறுவதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை ஆதரிக்கப் போவதாக நோர்வேயும் அறிவித்துள்ளது.

நோர்வேயில் இருந்து வெளியாகும் அப்ரென்போஸ்ரன் நாளேட்டுக்கு அந்த நாட்டின் அமைச்சரும், இலங்கைக்கான சமாதான முயற்சிகளில் நடு நிலையாளராகப் பங்கேற்ற வருமான எரிக் சொல்ஹெய்ம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். அதற்கு உள்ளது என்றும் சொல்ஹெய்ம் மேலும் கூறியுள்ளார்.

**நோர்வே நாட்டின் அமைச்சரும், இலங்கைக்கான சமாதான முயற்சிகளில் நடு நிலையாளராகப் பங்கேற்றவருமான எரிக்சொல்ஹெய்ம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.**

இலங்கை அரசு போரை வென்று விட்டது, ஆனால் அமைதியை வெல்ல வேண்டிய தேவை அதற்கு உள்ளது என்றும் சொல் ஹெய்ம் மேலும் கூறியுள்ளார். (ந)

## தொழில் திணைக்கள கட்டுமானப் பணி ஜூலையில் நிறைவு

பண்ணையில் அமைக்கப் பட்டுவரும் தொழில் திணைக்களத்தின் மாடிக் கட்டடத்திற்கான முதல் மாடிக்குரிய கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஜூலை மாதத்தில் நிறைவடையும் என்று வடமாகாணப் பிரதி தொழில் ஆணையாளர் கே. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மூன்று மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டு வரும் இந்தக் கட்டடத்தில் முதல் மாடித் தொகுதி எதிர்வரும் ஜூலை மாதத்தில் நிறைவடையும். இந்த முதல் மாடிக் கட்டடம் ஓகஸ்ட் மாதத்தில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படும். இந்த முதல் மாடித் தொகுதியில் வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகம் ஓகஸ்ட் மாதத்தில் இருந்து செயற்படவுள்ளது.

மற்றைய இரண்டு மாடியிலும் யாழ். மாவட்ட தொழில் திணைக்களம், மாவட்டத் தொழிற்சாலைப் பரிசோதகர், பொறியியலாளர் அலுவலகம் போன்றவை செயற்படும். (ந-17)

## இறுதித் திகதி அறிவிப்பு

2009 ஆம் ஆண்டு வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது கைவிடப்பட்டுள்ள வாகனங்களை உரிமையாளர்கள் உரிமை கோருவதற்கான இறுதித் திகதியாக அடுத்த மாதம் 31 அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிமைகோருவதற்கான இந்த அறிவித்தலை முல்லைத் தீவு அரச அதிபர் எஸ். பத்திநாதன் அறிவித்துள்ளார். (ந)

## கறுப்புப் பணத்தை ஏற்கக் கூடாது சுவிஸ் அரசு தீர்மானம்

இனிவரும் காலங்களில் பிற நாட்டு மக்கள், சுவிஸ் வங்கிகளில் பணம் செலுத்தும்போது, அவர்களது வருமானவரி கட்டுப்பாடுகள் குறித்து நன்கு விசாரிக்க வேண்டும் என்றும், வருமானவரி கணக்கு காட்டாமல் வரும் கறுப்பு பணத்தை இனி ஏற்கக் கூடாது என்றும் சுவிற்சர்லாந்து நாட்டின் கொள்கைகளைத் தயாரிக்கும் உயர்மட்ட அமைப்பு முடிவெடுத்துள்ளது.

ரகசியங்களைப் பாதுகாக்கும் சக்திவாய்ந்த வங்கிகளில் சுவிஸ் வங்கி முதலிடம் பெற்றுள்ளதாலும், இந்த வங்கியில் வரி குறித்த தகவல்கள் ஏதும் கேட்கப் படுவதில்லை என்பதாலும் பிற நாடுகளின் மிகப்பெரிய பணக்காரர்களை இது ஈர்த்துள்ளது.

மேலும், சில தினங்களுக்கு முன் உளவுத்துறை அதிகாரி ஒருவர் சுவிஸ் வங்கியில் இந்திய முதலீட்டாளர்கள் பதுக்கி வைத்திருக்கும் பணத்தின் மதிப்பை எண்ணிக்கையில் கூறியிருந்தார். இந்தத் தகவல் ஆதாரமற்றவை என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (ந)

## மதுவரி உத்தியோகத்தர்களுக்கு விசேட பயிற்சி

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள மதுவரி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான 4 நாள் பயிற்சிப் பட்டறை, யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது. வடமாகாண உதவி ஆணையாளர்கிறிஸ்டியோசப்பினால், பொது நிர்வாக முகாமைத்துவப் பயிற்சியும், நீதித்துறை முகாமைத்துவ பயிற்சியும், மதுவரி சட்ட முறை கட்டளை பயிற்சியும் வழங்கப்படவுள்ளவென்று திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள், மீள்குடியேறியுள்ளனர். இவர்களில் சிலர், சட்ட விரோத மான மதுபான உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை இனங்கண்டு, சமுதாயத்தில் நற்பிரசையாக்குவது எமது நோக்கமென்று கிறிஸ்டோப் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த ஆண்டு வடமாகாணத்தில் 300 பேர், இவ்வாறான சட்டவிரோத மான செயல்களிலிருந்து மீட்கப் பட்டுள்ளனர் என் றும் கூறியுள் ளார்.

இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு யாழ். மாவட்ட மதுவரி அத்தியட்சகர் க.சோதிநாதன், வட மாகாண பிரதி மதுவரிஆணையாளர் ரீ. மல்லவா உட்படப் பலர் கலந்து கொள்கின்றனர். (ந)

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
18-08-1952

ஆண்டவனின் அடியில்
08-03-2011

திதி: சதுர்த்தி (25-02-2012)

அமரர்
லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா

எங்கள் வழிகாட்டியே!
இனிய குடும்பத் தலைவரே!
உங்கள் பிரிவால் ஒட்டி இல்லா
ஓடம்போல் தத்தளித்து நிலை குலைந்து
நாங்கள் நின்ற போது, புன்னகைத்து
சொர்க்கத்தின் வாசலில் கம்பீரமாக நின்று
அன்புடன் கையசைத்து
நீங்கள் கனிவோடு ஆசி தரும்
கலங்கரை விளக்கைப் பார்த்ததும்
நாங்கள் புத்தெண்பு பெற்று
எண்ணிய எண்ணமெல்லாம்
இனிதே நிறைவேறும் என்ற
திண்ணிய மனத்துடன்
தொடர்கின்றோம் வாழ்க்கைப்
பயணத்தை ........................
நீங்கள் வடிவமைத்த நெடுஞ்சாலை வழியே............

(14937) (6,7,10)

லவ் லேன், உடுவில்,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களுக்கோ, குடும்ப உறுப்பினர்களுக்கோ உடல் நலக்குறைவுகள் ஏற்படலாம். நண்பர்களுடன் சில பிரச்சினைகளுக்காக வாக்குவாதம் செய்யலாம். கடுமையாகப் பேசுவதன் மூலம் சிலரின் மனஸ்தாபத்திற்கு ஆளாகலாம். குறுக்கு வழிச் சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது. வெளி யூர்களில் இருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம்.

**இடபம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். திட்டமிட்ட சில விடயங்கள் நடைபெறாமல் போனாலும், திட்டமிடாத காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வீடு மாற்றம் பற்றிய சிந்தனைகள் அதிகரிக்கும். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**மிதுனம்:** கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். உறவினர்களுக்கு மற்றவர்களை நம்பி வாக்குறுதிகளை கொடுக்க வேண்டாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அரசியல் தொடர்புடையவர்கள் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வரலாம். கனிவான பேச்சால் காரியம் சாதிப்பீர்கள்.

**கடகம்:** செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். இரண்டு நாள்களாகச் சந்திக்க முடியாத ஒருவரை இன்று சந்திப்பீர்கள். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் அல்லது பரிதாபப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பெரிய மனிதர்களின் ஆசிகளை பெறுவீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.

**சிங்கம்:** வீண் பேச்சுக்களை, விவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். எங்காவது வெளியில் புறப்படும் நேரத்தில் சில பொருள்கள் கிடைக்காமல் எரிச்சல் அடையலாம். வாடகை வீட்டில் குடியிருப்போர் பிரச்னைகளுக்கு ஆள்படலாம். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்த விடயம் ஒன்றில் சிறிய அளவில் பலன் கிடைக்கும். மறதியால் அவதியுண்டு.

**கன்னி:** கடின உழைப்புக்கு பலன் கிட்டும் நாள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்ற தாராளமாகச் செலவு செய்வீர்கள். குடும்பப் பெரியவர்கள் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். நீண்ட நாள்களாகப் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேரலாம். எதிலும் முன்னெச்சரிக்கை, புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள்.

### நாளை

மாசி 14 ஞாயிற்றுக்கிழமை 26.02.2012
திதி: சதுர்த்தி மு.ப.09.52 வரை
நட்சத்திரம்: ரேவதி அமிர்தம் கா.7.59 வரை
சுபநேரம்: 09.29- 10.59 வரை,
ராகு காலம்: 04.59- 06.29 வரை

**துலாம்:** எடுத்த காரியங்களில் எதிர்பாராத வெற்றி கிட்டும். தந்தை தொடர்பான வழியில் அனுகூலமான உதவி கிடைக்கும். தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மலை போல் நம்பிய நண்பர் ஒருவர் உங்களை கடைசி நேரத்தில் கைவிடலாம். தேக பராமரிப்பில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வேண்டாத நண்பர்களால் சிரமங்களைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலர் உங்களை மரியாதை குறைவாக நடத்தலாம். போட்டி, எதிர்ப்புகளால் நினைத்ததை சாதிக்க முடியாமல் போகலாம். பெண்கள் தெய்வ வழிபாடுகளில் அக்கறை காட்டுவர். சிலருடன் கூட்டாகச் சேர்ந்து மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிட்டும். வயிறு, வாயு உபாதையுண்டு.

**தனுசு:** மாற்று மத நண்பர்கள் வழியில் மனதுக்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். சக ஊழியர் ஒருவரைப் பாராட்டுவது போல மறைமுகமாக விமர்சனம் செய்வீர்கள். சில காரியங்களுக்கு எதிர்பார்த்ததை விட அதிகமாக செலவாகலாம். நினைத்த வேகத்துக்கு சில வேலைகள் நடக்காமல் போவதால் மனம் வருத்தம் அடையலாம்.

**மகரம்:** பல மணி நேரமாகலாம் என்று நினைத்த வேலை ஒன்று சில நிமிடங்களில் முடிந்து விடலாம். தொழில் புரிவோர் எதிர்பாராத வருமானம் பெறலாம். நீங்கள் கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கைக்குக் கிடைக்கலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும்.

**கும்பம்:** பல நாள்களாக பிற்போட்ட பயணம் ஒன்றை மேற்கொள்ளலாம். எந்த வேலையைச் செய்தாலும் அதை ஒன்றுக்கு இரண்டு முறை சரி பார்த்துக் கொள்வது நன்மை தரும். பெண்கள் வழியில் பொருள் வரவுகளைப் பெறலாம். அன்றாடப் பணிகளில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். சிலரிடம் கேலி பேசி வெறுப்பேற்றலாம்.

**மீனம்:** சகிப்புத் தன்மை,பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். மாமன், மைத்துனர்களை நம்பி பொறுப்பான பணிகளை ஒப்படைக்க வேண்டாம். வருமான்த்தைப் பெருக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 1 | | 6 | 7 | 3 | | |
| | 4 | | | 5 | 9 | 8 | | 2 |
| | | 8 | | | | | | |
| | | 6 | 3 | 9 | 4 | 2 | 5 | |
| | | 5 | | | | 4 | | |
| | 7 | 9 | 5 | 2 | 8 | 6 | | |
| | | | | | | 9 | | |
| 8 | | 4 | 9 | 1 | | | 2 | |
| | | 2 | 7 | 4 | | 1 | | 3 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 5 | 1 | 6 | 4 | 8 | 7 | 3 |
| 7 | 6 | 4 | 8 | 5 | 3 | 1 | 9 | 2 |
| 1 | 3 | 8 | 9 | 7 | 2 | 5 | 6 | 4 |
| 3 | 5 | 6 | 4 | 2 | 8 | 7 | 1 | 9 |
| 4 | 1 | 2 | 7 | 9 | 6 | 3 | 5 | 8 |
| 8 | 7 | 9 | 5 | 3 | 1 | 2 | 4 | 6 |
| 2 | 4 | 3 | 6 | 1 | 7 | 9 | 8 | 5 |
| 6 | 9 | 1 | 3 | 8 | 5 | 4 | 2 | 7 |
| 5 | 8 | 7 | 2 | 4 | 9 | 6 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1−9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1−9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1−9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் தம்பு நடேசு (கனடா)



திதி:- சதுர்த்தி (25.02.2012)

ஐயா! நீங்கள் மறைந்து ஓராண்டு மறைந்தது ஐயா!
ஐயா! எங்கள் உள்ளம் உருகுது ஐயா!
ஐயா! எங்கள் கண்கள் சொரியுது ஐயா!
தினம் தினம் கடவுளை வணங்கும்
எங்கள் அன்புத் தெய்வத்தைக் காணவில்லை
தினம் தினம் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
நலம் விசாரிக்கும் எங்கள் அன்பு ஐயாவைக் காணவில்லை!
தினம் தினம் எவருடனும் கடும் சொல் பேசாமல் அன்பு காட்டும்
எங்கள் ஐயாவைக் காணவில்லை
எதிர்பாராமல் அதிகாலை வேளையில்
திடீர் எனக் காலன் அழைத்திட்டார்
ஜனனம் மரணம் இரண்டும் மனிதன் வாழ்வில் உண்டு
ஐயா எங்களுடன் வாழ்ந்த இனிமையான நினைவுகளுடன
எங்கள் மனதைத் தேற்றிக் கொள்கிறோம்
ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவகளுடன் கனடாவில் வாழ்ந்து வரும்
**அன்பான மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

மண்ணில் 19.02.1926 — விண்ணில் 08.03.2011

21. செம்மணி வீதி, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அன்பான பெறாமகள்
திருமதி. பற்குணநாதன் தெய்வகுமாரி (குமாரி)

(14830)(2-)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் மாநாட்டில் ஒருமித்து குரல் கொடுப்போம்

## பிரிட்டன் தமிழர் ஒன்றியம் அறிக்கை

இந்த மாதம் 27ஆம் திகதி ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையில் ஆரம்பமாகவுள்ள மனித உரிமை கூட்டத்தொடரின் போது இலங்கை அரசு மீதான போர்க்குற்ற விசாரணைக்கு ஐக்கிய நாடுகள் சபையில் பிரேரணையை நிறைவேற்ற வைப்பது தமிழர்களின் கடமை.

எனவே உரிமைகளை மீட்டெடுக்க ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் என பிரிட்டன் தமிழர் ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆண்டாண்டு காலமாய் ஆண்டுவந்த பரம்பரை இன்று அடிமைகளாகவும் அகதிகளாகவும் அகிலமெல்லாம் பரந்துகிடக்கின்றது.

மனிதநேயத்தோடு எமது முன்னோர் செய்த விட்டுக் கொடுப்பே இன்று எமக்கென்றொரு நாடு இன்றி தவிக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே பல நாடுகளிலும் உள்ள தமிழர்கள் இணைந்து. இலங்கை அரசு மீதான போர்க்குற்ற விசாரணைக்கு ஐக்கிய நாடுகள் சபையில் பிரேரணையை நிறைவேற்றப்பட வைப்பது தமிழர்களின் கடமையாக உள்ளது. என்று இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# இன்சூரன்ஸ் களவுகளில் 'வீரத்தமிழர்கள்' கனடாவில் ஒரே இரவில் 37 பேர் கைது

கனடாவின் ரொண்டோ நகரில் இன்சூரன்ஸ் களவு காரணமாக 37 தமிழர்கள் ஒரே இரவில் கைதாகியுள்ளனர்.

கனடாவில் ஒரு சிறிய குழுவினர் பல மில்லியன் டொலர் பணத்தை இன்சூரன்ஸ் களவு மூலம் சம்பாதித்துள்ளனர். வாகன விபத்துக்களைப் பயன்படுத்தி அதில் பயணித்தவர்கள் காயமடைந்தனர் என்று பொய்யுரைத்து, மற்றும் பொய்யான தகவல்களை வழங்கி இவர்கள் பெருந்தொகைப் பணத்தை சூறையாடியுள்ளனர். காலப்போக்கில் இவர்கள், சும்மா இருக்கும் வாகனங்களைக் கூட அடிபட்டதாகக் கூறி இன்சூரன்ஸ் இழப்பீடு கோரியுள்ளனர்.

உண்மையாக அந்த வாகனம் அடிபட்டிருக்காது. ஆனால் அதனை ஒரு சுவரில் மோதி விட்டு 2 வாகனங்கள் அடிபட்டதாக கூறுவர். மற்றைய வாகனத்தைச் செலுத்தும்நபர், தன்னில் தான் பிழை என ஒப்புக் கொள்வார். இதனால் மற்றையவருக்கு முழு இன்சூரன்ஸ் காசும் கிடைக்கும். அந்தக் காரில் நால்வர் இருந்தாகப் பதியப்படுவதோடு இந்த நால்வருக்கும் சேர்த்தே இழப்பீடு பதியப்படும். இவ்வாறு பதியப்படும் இழப்பீட்டை பின்னர் இவர்கள் அனைவரும் பகிர்ந்துகொள்வர்.

இந்தக் கும்பலில் உள்ள ஒருவர், ஒரு முறை புதிதாக வரும் வாடிக்கையாளர் ஒருவரின் காரை இடித்து தன்னில் தான் பிழை என்று ஒத்துக் கொண்டால், அடுத்தமுறை மற்றுமொரு நபர் இன்னொருவரின் காரை இடிப்பார்.

கனடாவில் உள்ள தமிழர்களுக்கு ஆசைகாட்டி இவ்வளவு பணம் பெறமுடியும் என்று சொல்லி, காரை இடிக்கச் செய்கிறார்கள். 2009ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றை அடுத்து கனேடியப் பொலிஸார் இவர்களை அன்று முதல் பின் தொடர்ந்து வந்துள்ளனர். இதனையடுத்து இந்தத் திருட்டுடன் தொடர்புடைய 37 தமிழர்களை கைது செய்துள்ளனர். (ந)

# மரண அறிவித்தல்



## ஸ்ரீதரன் சத்தியநேசன்

(நேசன்)

(கிருஷ்ணா அப்பளக்கொம்பனி, உரிமையாளர்)

பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீதரன் சத்தியநேசன் (23.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் அஸ்லின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வடிவேல் மற்றும் சாரதாம்பாள் தம்பதியரின் மருமகனும், வதனியின் அன்புக் கணவரும், கிஷோக்குமார், யமுனா (பிரான்ஸ்), தர்மிளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குடும்பத்தினர்.


117, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

# எமது வாழ்க்கையின் தெரிவு

"இதோ வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் இன்று நான் உங்கள் முன்பு வைத்துள்ளேன்"

எமது வாழ்க்கை, தெரிவுகளால் நிறைந்து வழிகின்றது. மேசையில் பலவகை உணவுகள் இருக்கின்றன. எதை உண்பது என்பதைத் தெரிவு செய்ய வேண்டும்! கடைக்குச் செல்கிறோம்; பலவகையான பொருள்கள், வண்ண வண்ண ஆடைகள் எதை வாங்குவது எனத் தெரிவு செய்ய வேண்டும். பல மனிதர்களைச் சந்திக்கின்றோம்; யாரோடு நெருங்கிப் பழகுவது எனத் தெரிவு செய்ய வேண்டும்! நண்பன் மது அருந்த அல்லது புகைக்க அழைக்கின்றான்; எனக்கு விருப்பமில்லை, அவன் கட்டாயப்படுத்துகிறான். எதனைத் தெரிவது?

இவ்வாறு தினமும் தெரிவுகள் எம்முன் கடைவிரித்துக் காத்திருக்கின்றன. நாங்கள் மேற்கொள்ளும் சின்னச் சின்னத் தெரிவுகள் படிப்படியாக எமது வாழ்வு சம்பந்தமான பெரிய தெரிவுகளை நோக்கி நம்மை வழி நடத்துகின்றன. அந்தப் பெரிய தெரிவுகளைத் தீர்மானிக்கின்றன. பலர் நாளாந்தம் தாம் மேற்கொள்ளும் சிறிய சிறிய தெரிவுகளின் பின் விளைவுகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல் சூழலின் அழுத்தத்துக்கும் புலனுணர்வுகளின் தூண்டலுக்கும் ஆள்பட்டு தெரிவுகளை மேற்கொள்கின்றனர். தமது தெரிவுகளை வழிநடத்தும் அடிப்படைத் தெரிவுகளை வாழ்கைக்கான வழித்தடத்தை, கொள்கையை வகுத்துக் கொள்ளாதவர்கள் நாளாந்த தெரிவுகளின் இழுபறியினுள் அகப்பட்டு, தமது வாழ்வைச் சிதைத்து விடுகின்றனர்.




இதனால்தான் எமது வாழ்வின் அடிப்படைத் தெரிவு என்ன என்பது முக்கியமானது. நான் அடிப்படையில் வாழ்வையும், நன்மையையும் தெரிவு செய்திருக்கிறேனா? இல்லையா என்ற வினா முக்கியமானது. வாழ்வையும் நன்மையையும் தமது அடிப்படைத் தெரிவாகக் கொள்ளாத எவரும் சாவையும் தீமையையும் தான் நடைமுறையில் தெரிவு செய்வார்கள்.

வாழ்வையும், நன்மையையும் அடிப்படைத் தெரிவாகக் கொண்ட ஒருவர் அதிகாலையில் எழுந்து ஆண்டவரைத் தொழுவது, படிப்பது, நல்ல நூல்களை வாசிப்பது போன்ற நல்ல விடயங்களில் ஈடுபடுவார். அல்லாதவர் நீண்டநேரம் தூங்கி எழுந்து ஏனோதானோ என வாழ்வை ஆரம்பிப்பர். நல்ல தெரிவுள்ளவர்கள் ஒத்த வயதுக் குழுக்களும், நண்பன் குழாமும் சில தவறான செயற்பாடுகளுக்கு அழைக்கும் போது அல்லது அவை பயனற்றன எனத் தெளிவாகக் கூறிவிடுவர். ஆனால் அடிப்படை நோக்கில் தொளிவில்லாதவர்களோ அனைவரதும் அழுத்தத்திற்கும் ஆள்பட்டு வாழ்வை அழிக்கும் பல தெரிவுகளை நாள் தோறும் தேர்ந்தெடுப்பர்.

நன்மையைத் தெரிபவர்கள் ஒருவருக்கொருவர் நன்மை செய்ய, உதவி செய்யக்கிட்டும் ஒரு சந்தர்ப்பத்தில், மகிழ்ச்சியோடு அதனைச் செய்வர். ஆனால் அடிப்படைத் தெரிவு அடிப்படைத் தெரிவு இல்லாதவரோ நன்மைக்காக உதவி செய்யப் பின்நிற்பார் அல்லது வேண்டா வெறுப்போடு செய்வார்.

இவ்வாறு தமக்கென ஓர் அடிப்படைத் தெரிவை மேற்கொள்ளாதவர் படிப்படியாக அழிவுப் பாதையில் நடைபோடுவர். எனவே சிந்தித்துப் பார்ப்போம்; எனது வாழ்வின் அடிப்படைத் தெரிவு என்ன? அத்தகையதொரு தெரிவை நான் மேற்கொண்டுள்ளேனா? தீமையைத் தெரிவு செய்வது மட்டுமல்ல நன்மையைத் தெரிவு செய்யாமல் விடுவதும் கூட என்னை இறுதியான அழிவுக்கே அழைத்துச் செல்லும் என்று சிந்திப்பதுண்டா அடிப்படைத் தெரிவு தெளிவாக இருக்கும் பட்சத்தில் அவ்வப்பொழுது தவறான தெரிவுகளை நான் மேற்கொண்டாலும் கூட வாழ்வை மாற்றித் திரும்பவும் சரியான தெரிவுகளை மேற்க்கொள்ள முடியும் என்பதை உணர்ந்திருக்கிறேனா?

எமது அடிப்படைத் தெரிவு பற்றிய தெளிவு அதிகரிக்க அன்றாடத் தெரிவுகள் சிறப்புறும். வாழ்வையும், நன்மையையும் தெரிவு செய்வோமா?

அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்


## Personal and group classes Mathematics

London A/L, O/L, Local (இணைந்தகணிதம்) 2012, 2013 English Medium வகுப்புக்கள் கண்டி, கொழும்பு ஆசிரிய குழுவினால் ஆரம்பம்.
துரித மீட்டல் இடம் பெறும் 2012 Batch மாணவர்களுக்கு பாடப்பரப்புகள் பரீட்சைக்கு முன்னர் Cover பண்ணுவதாக உத்தேசித்துள்ளோம்.

தொடர்புகளுக்கு : M.T. Sathya B.Sc (Jaffna), M.Sc (pera),
077 7469502 (14997)(6-7-8)

## காணி விற்பனைக்கு

ஈச்சமோட்டை, சுண்டிக்குளியில் நிலப்பரப்பு 9 குளி 3 கொண்ட காணி விற்பனைக்குண்டு. காணி பிரித்தும் கொடுக்கப்படும்.
(14995)(6-7-8) தொடர்பு : 077 6146434

## வாகனம் விற்பனைக்கு

TATA BOLERO Pickup Power ஸ்ரெயறிங் பொடி அடித்த படி 3 மாத காலமே பாவனைக்கு உட்படுத்தப் பட்டது. தொடர்புகளுக்கு:
0774675689
(14992)

## + LH Foot Care Centre

இரத்தத்தில் அதிக சக்கரை , கட்டுபாடற்ற உயர் குருதி அழுத்தம் .இரத்தத்தில் அதிக கொழுப்பு போன்ற பிரச்சினை உள்ளவர்களும் அதிகமாக புகை பிடிப்பவர்களும் கட்டாயம் மேற்கொள்ள வேண்டிய நரம்பியல் சோதனை. உறுப்புக்ளை இழக்கக்கூடிய அபாயத்திலிருந்து முன்கூட்டியே காக்கும்.



உங்கள் கால்களில்/விரல்களில் விறைப்புத்தன்மையை உணர்கிறீர்களா?
தோல் உலர்ந்து காணப்படுகிறதா ?
நீங்கள் ஆறாத புண்களை உடையவரா ?
கால்களில் ஊசி குத்துவதுபோல் உணர்கிறீர்களா?
நீங்கள் ஒரு நீரிழிவு நோயாளியா?

அப்படியாயின் உடனடியாக எமது ஆய்புகூடத்தில் வைத்தியர்களால் மட்டும் செய்யப்படும் கணினி மயப்படுத்தப்பட்ட இந்த துல்லியமான சோதனையை செய்யுங்கள். வைத்திய ஆலோசனை முற்றிலும் இலவசம்.

For the First Time in Jaffna

Only in Lava Hospitals

LH Lava Hospitals

No 75, temple road. Tel :021-2224333

A member of Lava Holdings Pvt Ltd
Listed Company at Jaffnaonline.info
www.Lavahospitals.com

YELLOW PAGES


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முறையாக...
iCity
நவீன தொழில்நுட்பத்தில் இயங்கும்
iPhone • iPad • iPod • iMac
இவைகளுக்குரிய சகல விதமான Accessories வகைகளும் மற்றும் Unlocking, Hardware, Software Programing ஆகிய வேலைகளையும் உடனுக்குடனும் தரமாகவும் செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
இல: 48; ஜிம்மா பள்ளிவாசல் வீதி (செம்மாதெரு) யாழ்ப்பாணம்.
icity.sl@gmail.com ☎ 021 222 4169

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை முத்தையா



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகவும், மன்னார், உப்புக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முத்தையா 23.02.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா - இராமச்சந்திரன், செல்லத்துரை மற்றும் தம்பியையா, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பொன்னம்பலம், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், மங்களம் மற்றும் கற்பகம், சிவக்கொழுந்து (புள்ளமணி), பொன்னம்மா, பரமேஸ்வரி, சாரதாதேவி ஆகியோரின் மைத்துனரும், றஞ்சிதமலர், காலஞ்சென்ற தவமலர் (சுவிஸ்), ஞானமலர் (ஆசிரிய நிலைய முகாமையாளர், மன்னார்), தவயோகநாதன் (டென்மார்க்), கிருபாமலர் (சுவிஸ்), ஜெயமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நாகேஸ்வரன், தருமராஜா (சுவிஸ்), கிறிஸ்ரிராஜா (பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப்பணிமனை, மன்னார்), வசந்தவேணி (டென்மார்க்), நாதன் (சுவிஸ்), ரவிராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், ஜனனி, அனோஜா, வேணுகா, சுஜீவினி, சுஜிந்தன், கோபிநாத், ஜெனத், தியோசன் சலோமி, கீர்த்தனா, கஜாழினி, கெவின், பவித்திரா, மீரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27-02-2012) திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/8305) (2-7-6)

487,புதுதெரு, உப்புக்குளம், மன்னார். தகவல்: குடும்பத்தினர்.

## கந்தரட்ணம் வன்னியசிங்கம்

(இளைப்பாறிய ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை ஊழியர் -RVDB)



பங்களா லேன், பேத உடையார் வளவு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு யோகவாசாவை நிரந்தர வசிப்பிட மாகவும், பம்பலப்பிட்டி, றிட்ஜ்வே பிளேஸைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தரட்ணம் வன்னியசிங்கம் (22.02.2012) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தரட்ணம் - சின்னத்தங்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், இணுவில் மேற்கு காலஞ்சென்ற கந்தையா சோமநாதன் - யோகம்மா தம்பதியரின் மருமகனும், தவமலரின் அன்புக் கணவரும், சுதாகரன் (லண்டன்), சதீஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சகலகலாதேவி (லண்டன்), நாமகள்(நமோ - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காராளசிங்கம், காந்திமதி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சோதிமதி, நடராசா, நாராயணபிள்ளை, விஜயராமன் ஆகியோரின் சகோதரரும், விஜயமலர் - பாலசுப்பிரமணியம் (தவயோகநாதன்), கிருஷ்ணபிள்ளை- தவலங்காமலர் (வவா), தவலங்கைநாதன் (சிவா), ராஜேந்திரம் - தவநேருமலர் (கிச்சி) ஆகியோரின் சகோதரரும் மைத்துனரும், சுகந்திரா, பிரியங்கா, அக்ஷயா, அக்ஷலா, ஆரூஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25-02-2012) சனிக்கிழமை மு.ப.10.00 மணிமுதல் 1.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப.1.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்கிசை கனத்தை இந்து (பொது) மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்த அறிவித்தலை அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.30,5/4, Ridgeway Place,
Colombo - 04 (சி/8403) (2-7-6) தகவல்: குடும்பத்தினர்.

# அரச அலுவலர்களுக்கான சிங்கள மொழிப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.25

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தால் யாழ். மாவட்ட அரச ஊழியர்களுக்காக நடத்தப்படவுள்ள மும்மொழிப் பயிற்சி வகுப்புக்களில் அரச ஊழியர்களுக்கான சிங்களம் மட்டம் III மற்றும் சிங்களம் மட்டம் II வகுப்புக்கள் இன்றும் நாளையும் நடைபெற உள்ளதாக மேற்படி நிறுவனம் யாழ். மாவட்டத்தில் உள்ள திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளது.

இப்பயிற்சி நெறி வகுப்புக்களில் முன்னர் விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பிக்காத அரச ஊழியர்களும் கலந்து கொள்ள முடியும் எனவும், சிங்களம் III பாடநெறியில் புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கும் முன்னர் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளாதவர்களுக்கும் சிங்களம் II இல் சிங்களம் மட்டம் III இல் சித்தியடைந்தவர்களுக்கும் சிங்களம் மட்டம் III பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச ஊழியர்களுக்கான சிங்களம் மட்டம் III இற்கான பயிற்சி நெறி வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, வண்-நாவலர் ம.வி., கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரி, சாவகச்சேரி நகரசபை, நெல்லியடி ம.வித்தியாலயத்திலும் முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை நகரசபையிலும் ஆரம்பமாக உள்ளது.

சிங்கள மட்டம் II பயிற்சி நெறியில் கலந்து கொள்வோருக்கான வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, வண். நாவலர் ம.வி, கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி, சாவகச்சேரி நகரசபை, நெல்லியடி ம.வியிலும் முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை நகரசபையிலும் நடைபெற உள்ளது. (வ-300)

### விற்பனைக்கு
Laptops விற்பனைக்குண்டு (1GB, 80 GB, Core 2 Duo, DVD Rom) விலை:- 29, 500/= மட்டுமே. தொடர்பு: 0779852409

### வாகன சாரதி உடன் தேவை
வைற் ஹவுஸ் அந்திய கால சேவையில் வாகனத்தில் கடமைபுரிய சாரதி உடனடியாகத் தேவைப்படுகிறார். யாழ். மாநகர சபை எல்லைக்குள் (5K.m)உள்ளவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.
வைற் ஹவுஸ்
180, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### கார் விற்பனைக்கு
9 ஸ்ரீ தொடரிலக்க மொறிஸ் மைனர் கார் (சாம்பல் நிறம்) நல்ல நிலையில் உள்ளது. விற்பனைக்கு உண்டு.
முகவரி : வரணி வாழைத்தோட்டம்,
T.P : 077 4661139
(15008)(6-7-8)

### வீடு உடனடி வாடகைக்கு
யாழ். நகரின் மத்தியில் 1/13, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதியில் வீடு வாடகைக்கு உடனடியாகக் கொடுக்கப்படும்.
தொடர்பு : 077 2467873
(15009)(6-7-8)

### தேவை
புடைவை நிலையம் ஒன்றுக்கு பெண்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (நேரில் வரவும்)
தொடர்பு: CHEEP AND GOOD
No.38, முனீஸ்வரன் றோட், யாழ்ப்பாணம்.
T.P: 0779895050

### மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம் :- நீர்வேலி சவாரித்திடல்
காலம் :- 26.02.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பி.ப. 1:00 மணி
நிர்வாகம், சரஸ்வதி ச.ச.நி.

# இலங்கைப்பெண் ஆஸியில் கொலை

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் மனைவியைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைச் சேர்ந்த 50 வயதான நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பேர்த் நகரின் சுற்றுப்புறத்தில் உள்ள Willetton பகுதியில் உள்ள old Nursery Lane இல் இவர்கள் வசித்த வீட்டில் இருந்து 46 வயதான பெண்ணின் சடலம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் மீட்கப்பட்டது.

கணவன், மனைவிக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை அடுத்தே இந்தக்கொலை இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இலங்கையில் இருந்து இவர்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் குடும்பத்துடன் ஆஸ்திரேலியாவில் குடியேறினர்.

கொல்லப்பட்ட பெண்ணின் ஒரு மகள் மருத்துவக்கல்வி கற்கின்ற அதேவேளை மற்றொரு மகள் 12 வயதே நிரம்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 3ஆவது பிறந்தநாள் வாழ்த்து



24-02-2012

கரன் கவினா

நேற்று (24.02.2012) தனது 3ஆவது பிறந்த நாளை இல. 101, குடிமத்தி உருத்திரபுரம் என்னும் தனது இல்லத்தில் கொண்டாடினார்.

"வாழ்வில் நல்லவை செய்யவும் நலமுடன் வாழவும்"

வாழ்த்துவோர்:
அம்மம்மா, அம்மப்பா, அப்பா, அம்மா, அக்கா-கிரிதா, தம்பி-அக்ஷயன், மாமாமார், சித்திமார், பெரியப்பா, பெரியம்மா.

(11040)(6,7,10)

உ
சிவமயம்

## ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
### உசன் - மிருசுவில்

மஹா உன்னத பாஞ்ஜசன்ய சகித 108 வலம்புரி சங்காபிஷேக ஸ்கந்த ஹோமப் பெருவிழா
26.02.2012 ஞாயிற்றுக்கிழமை

உசன் கந்தசுவாமி கோயில் பிரதம குருக்கள்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயில்
"அருள்வாக்குச் சித்தர்"
குகஸ்ரீ ஐரத்தின கேதீஸ்வர சுவாமிகள்
தலைமையில் பல சிவாச்சாரியார்கள்
கலந்து சிறப்பிப்பார்கள்.

★ www.ussanjaffna.com என்னும் இணையத்தளத்தில் கோயில் நிகழ்ச்சிகளைப் பார்வையிடலாம்.
★ யாழ் பிரதான பஸ் நிலையத்திலிருந்து உசன் கந்தசுவாமி கோயில் வரை தட இல, 769 இ.போ.ச, தனியார் சிற்றூர்திப் போக்குவரத்துச் சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு-2 தொ.பே:021 222 7835
உள்நாட்டு, வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவை. DHL
(C/8305) (6,7,10)

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையில் ஆசிரியராகச் சேவையாற்றி ஓய்வு பெற்ற **கந்தையா நடராசா** அவர்களின் அமரத்துவ செய்தி கேட்டு மிகுந்த ஆழ்ந்த கவலையடைகிறோம். அவர்களின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி.

(15005)(6-7-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 95 ஆவது பொன் அணிகள் போர்

## முதல் நாளில் தூள் கிளப்பியது பற்றிக்ஸ் தடுமாறுகிறது யாழ்ப்பாணக் கல்லூரி



ஐ.ஜே.கிளிங்ரன்

வி.சோவிநாத் சுவ ன்

"முதல் நாள் துடுப்பாட்டச் சமரில் பந்து வீச்சில் லிவிங்ஸரனும், துடுப்பாட்டத்தில் நோபேட்டும் கலக்கி ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்றனர். நேற்றைய ஆட்டத்தில் குறைந்தளவு பார்வையாளர்களே வந்திருந்தனர்."

யாழ்ப்பாணம், பெப்.25

95ஆவது பொன் அணிகள் போரின் முதல் நாள் ஆட்டத்தில் துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டிலும் பற்றிக்ஸ் அணியின் கையே மேலோங்கியிருந்தது. யாழ்ப்பாணக் கல்லூரி அணி தற்காப்பு ஆட்டத்திலேயே ஈடுபட்டு வருகிறது.

வருடந்தோறும் நடைபெறும் யாழ். பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் துடுப்பாட்டத்தில் மோதிக் கொள்ளும் பொன் அணிகள் போரின் 95 ஆவது சமர் நேற்று ஆரம்பமானது.

யாழ். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான பொன் அணிகள் போரில் நாணயச் சுழற்சியில் பற்றிக்ஸ் கல்லூரி வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

பற்றிக்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஜக்ஷனும் ரியூடரும் களமிறங்கினர். ஜக்ஷன் நிதானமாக ஆட, ரியூடர் வானவேடிக்கை காட்டத் தொடங்கினார். அதிரடியாக ஆடிய அவர் 50 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 36 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார்.

பற்றிக்ஸ் கல்லூரி முதலாவது இலக்குக்காக 73 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தது.

தொடர்ந்து இறங்கிய மொறிஸ் மிரோஷனை 6 ஓட்டங்களுடன் களத்தை விட்டு அகற்றினார் நிலக்ஷன். எனினும் அதன் பின் வந்த குகபாலா ஒத்துழைக்க ஜக்ஷனும் அடித்தாட, பற்றிக்ஸ் கல்லூரி அணி 100 ஓட்டங்களைக் கடந்தது. 109 ஓட்டங்களை அந்த அணி பெற்றிருந்த போது லிங்கராஜின் பந்து வீச்சில் பவிலியன் திரும்பினார் ஜக்ஷன். தொடர்ந்து 5 பவுண்டரிகள் விளாசி 32 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார் குகபாலா. அதன் பின் அலஷ்ரின் 12 ஓட்டங்களுடனும் கிளிங்ரன் 9 ஓட்டங்களுடனும் லிவிங்ரன் ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். அடுத்தடுத்து இலக்குகள் வீழ்ந்ததால் பற்றிக்ஸ் அணியின் ஓட்டக் குவிப்பு வேகம் திடீரென மந்தமானது. எனினும் அதன் பின்னர் களமிறங்கிய நோபேட் அணியைத் தூக்கி நிறுத்த முனைந்தார். யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களின் பந்துகள் நோபேட்டின் துடுப்பில் பட்டு எல்லைக்கோட்டுக்கு பறந்து சென்றன. மறுமுனையில் அவருக்கு அஜித் டார்வின் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தார். எனினும் லிங்கராஜ் வீசிய பந்து நோபேட்டின் இலக்கைத் தகர்த்தெறிய, அவர் 43 ஓட்டங்களுடன் வெளியேறினார். 95 ஆவது பொன் அணிகள் போரில் பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் முதல் இனிங்ஸில் பெறப்பட்ட அதிகூடிய தனிநபர் ஓட்டம் இதுவாகும். அவரைத் தொடர்ந்து டார்வின், நிஷர்சன், சுகிர்தன் ஆகியோரும் நடையைக் கட்ட 68.5 ஓவர்களில் 226 ஓட்டங்களைப் பெற்ற பற்றிக்ஸ் அணியின் முதல் இனிங்ஸிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் நிலக்ஷன், கஜேந்திரன் ஆகியோர் தலா மூன்று இலக்குகளையும் லிங்கராஜ் 2 இலக்குகளையும் சோபிநாத் சுவன், நிமலேந்திரா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

தனதுஇரண்டாவதுஇனிங்ஸை தொடக்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது. ஆட்டத்தின் முதல் பந்திலேயே ஓட்டம் எதனையும் பெறாமல் அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் நிவேத்னா ஆட்டமிழந்தார். இன்னொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான விபிஸும் ஒரு ஓட்டத்தோடு வெளியேற நிலைமை கவலைக்கிடமாக மாறியது. எனினும் நிமலேந்திராவும் மதுஷனும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தப் போராடினர். ஆயினும் நிமலேந்திரா 21 ஓட்டங்களுடனும், மதுஷன் 28 ஓட்டங்களுடனும் வெளியேறினார் அதன் பின்னர் பென் டில்ஹரன், பால்ராஜ் ஆகியோரும் வந்த வேகத்திலேயே வீழ்த்தப்பட்டனர். பின்னர் இணைந்த கஜேந்திரன் மாதவரூபனும் தொடர்ந்தும் இலக்குகள் வீழாமல் தற்காப்பு ஆட்டத்தில் குதித்தனர். எனினும் கஜேந்திரன் துணிச்சலாக அடித்து ஆடி ஒரு சிக்ஸரும் 4 பவுண்டரிகளும் விளாசினார். நேற்றைய ஆட்ட நேர முடிவில் இவர்கள் இருவரும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்து வீச்சில் லிவிங்ரன் மிரட்டினார் 4 இலக்குகளை லிவிங்ரனும், அஜித் டார்வின், நிஷர்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். பற்றிக்ஸ் அணிக்கு பதிலடி கொடுத்து தோல்விப் பாதையில் இருந்து யாழ்ப்பாணக் கல்லூரி மீளுமா அல்லது வீழுமா என்பது இன்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் தெரியவரும். (ங-23)



### பற்றிக்ஸ் எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி

பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்

பற்றிக்ஸ் 226 (68.5) யாழ்ப்பாணக் கல்லூரி 94/6 (27)

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடங்கும்

**பற்றிக்ஸ் கல்லூரி**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஜக்ஷன் | c மதுஷன் b லிங்கராஜ் | 36 | 129 | 4 | 0 |
| நிஷாந்த் ரியூடர் | c சோபிநாத் சுவன் b கஜேந்திரன் | 36 | 50 | 4 | 0 |
| மொறிஸ் மிரோசன் | c லிங்கராஜ் b நிலக்ஷன் | 6 | 19 | 0 | 0 |
| குகபாலா | c பால்ராஜ் b கஜேந்திரன் | 32 | 49 | 5 | 0 |
| அலஸ்ரீன் | c விபீஷ் b நிலக்ஷன் | 12 | 27 | 0 | 1 |
| கிளிங்ரன் | lbw லிங்கராஜ் | 9 | 25 | 1 | 0 |
| லிவிங்ரன் | c மதுஷன் b நிலக்ஷன் | 0 | 6 | 0 | 0 |
| நோபேட் | b லிங்கராஜ் | 43 | 67 | 3 | 1 |
| அஜித் டார்வின் | lbw நிமலேந்திரா | 18 | 39 | 2 | 0 |
| நிஷர்சன் | (ஆட்டமிழக்காமல்) | 5 | 6 | 1 | 0 |
| சுகிர்தன் | c பால்ராஜ் b சோபிநாத்சுவன் | 5 | 6 | 1 | 0 |
| உதிரிகள் | | 24 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 226 | | | |

இலக்கு இழப்பு: 1-73, 2-87, 3-109, 4-128, 5-142, 6-144, 7-148, 8-215, 9-217, 10-226

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சோபிநாத் சுவன் | 13.5 | 2 | 58 | 1 |
| நிமலேந்திரா | 6 | 1 | 12 | 1 |
| நிலக்ஷன் | 13 | 1 | 55 | 3 |
| பென் டில்ஹரன் | 5 | 2 | 17 | 0 |
| கஜேந்திரன் | 25 | 4 | 55 | 3 |
| லிங்கராஜ் | 5 | 0 | 18 | 2 |
| பால்ராஜ் | 1 | 0 | 2 | 0 |

**யாழ்ப்பாணக் கல்லூரி**


| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| நிவேத்னா | b அஜித் டார்வின் | 0 | 1 | 0 | 0 |
| விபீஸ் | b நிஷர்சன் | 1 | 18 | 0 | 0 |
| நிமலேந்திரா | b லிவிங்ரன் | 21 | 44 | 3 | 0 |
| மதுஷன் | lbw லிவிங்ரன் | 28 | 36 | 4 | 1 |
| பால்ராஜ் | b லிவிங்ரன் | 7 | 24 | 1 | 0 |
| பென் டில்ஹரன் | b லிவிங்ரன் | 1 | 10 | 0 | 0 |
| கஜேந்திரன் | (ஆட்டமிழக்காமல்) | 27 | 21 | 4 | 1 |
| மாதவரூபன் | (ஆட்டமிழக்காமல்) | 1 | 11 | 0 | 0 |
| உதிரிகள் | | 8 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 94 | | | |

இலக்கு இழப்பு: 1-01, 2-13, 3-52, 4-55, 5-61, 6-70


| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அஜித் டார்வின் | 5 | 0 | 17 | 1 |
| நிஷர்சன் | 6 | 3 | 24 | 1 |
| நோபேட் | 6 | 0 | 14 | 0 |
| கிளிங்ரன் | 2 | 0 | 6 | 0 |
| குகபாலா | 2 | 0 | 17 | 0 |
| லிவிங்ரன் | 6 | 4 | 12 | 4 |








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இலங்கை அணி, ஆஸ்திரேலிய மண்ணில் இரண்டாவது தடவையாக மிகப்பெரிய இலக்கை விரட்டியடித்து வென்றிருக்கின்றது. 250 ஓட்டங்களைத் தாண்டிய இலக்கு 23 தடவைகள் இலங்கை அணிக்கு எதிராக ஆஸி. மண்ணில் நிர்ணயிக்கப்பட்ட போதும் இரண்டாவது தடவையாக நேற்றே வெற்றி பெற்றிருக்கின்றது.

இலங்கை அணி, ஆஸி. அணிக்கு எதிராக அதன் சொந்த மண்ணில் கடந்த ஏழு ஆட்டங்களில் 5 ஆட்டங்களில் வெற்றி பெற்றிருக்கின்றது.

# முதலிடம் இலங்கையிடம்

ஆஸ்திரேலிய அணியுடனான பரபரப்பான நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி 3 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் கொமன்வெல்த் முக்கோண கிரிக்கெட் சுற்றுத் தொடர் நடைபெற்று வருகின்றது. தொடரின் 9 ஆவது ஆட்டத்தில் இலங்கை, ஆஸ்திரேலிய அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணித்தலைவர் கிளார்க் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை ஓட்டங்களுடன் வெளியேறி ஆரம் பத்தை ஏமாற்றினர்.

ஆஸி. அணியில் 3 ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரராகப் பொண்டிங்கே இது வரை காலமும் களமிறங்கி வந்த போதும், பொண்டிங் ஓய்வு பெற்ற பின்னர் ஆஸி. அணி இரண்டு இலக்குகளை இழந்து தடுமாறிக் கொண்டிருந்த போது நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் விளையாடும் போறஸ்ர் களமிறங்கினார். இவரும் அணித்தலைவர் கிளார்க்கும் இணைந்து இலங்கையின் இலக்கு வேட்டையை தடுத்து நிறுத்தினர்.

நிதானமாக ஆடிய போறஸ்ர் தனது நான்காவது ஆட்டத்தில் 136 பந்துக ளில் முதலாவது சதத்தை அடித்து அசத்தினார். இது வரை விளையாடிய நான்கு ஆட்டங்களில் 2 அரைச்சதம் மற் றும் ஒரு சதம் அடங்கலாக 238 ஓட் டங்களைப் போறஸ்ர் பெற்றுள்ளார்.

ஆஸியின் நம்பிக்கை தூணாக நின்று துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் கிளார்க்கும் அரைச்சதம் கடந்து அசத்த மூன்றாவது இலக்குக்கான இணைப்பாட்டம் 154 ஓட்டங்களை எட்டியது. அணியை வலுவான நிலைக்கு கொண்டு சென்ற நிலையில் கிளார்க் ஆட்டமிழந்தார். தொடர்ந்து போறஸ்ரரும் வெளியேறினார்.

அதன் பின்னர் இணைந்து சகோதரர்கள் இருவரும் இலங்கையின் பந்து வீச்சை ஒரு கை பார்த்து விட்டனர். டேவிட் ஹஸி, மைக் ஹஸி இருவரதும் அதிரடியில் இலங்கை திணறினாலும் விரைவாக சுதாகரித்துக் கொண்டு மலிங்கவை பந்து வீச அழைக்க பறந்தது மைக் ஹஸியின் இலக்கு. தொடர்ந்து வந்த கிறிஸ்ரெய்னும் வந்த வேகத்தில் வெளியேற ஆஸி. 250 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்திருந்தது. இருப்பினும் களத்திலிருந்த லீ மற்றும் டேவிட் ஹஸி இருவரும் தமது ஆத்திரம் தீரும் வரையில் இலங்கையின் பந்து வீச்சைப் போட்டுத் தாக்கிக் கொண்டிருந்தனர். இறுதியில் 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் ஆஸி 280 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கையால் எட்ட முடியாத இலக்கு என்று இலகுவாக எண்ணிக் களம் புகுந்தது ஆஸ்திரேலியா. இலங்கை அணித்தலைவர் ஜெயவர்த்தன ருத்திர தாண்டவம் ஆடத் தொடங்கியதும் ஆட் டத்தின் விபரீதம் ஆஸி வீரர்களுக்குப் புரிந்திருக்கும். டில்ஷானுக்கு சந்தர்பங்களை வழங்காமல் முதலாவது 'பவர் பிளே'யை உரிய வகையில் பயன்படுத்தி தனது தாக்குதல்களை மஹேல தொடர்ந்தார். இருப்பினும் இணைப்பாட்டம் 50 ஓட்டங்களை தாண்டிய நிலையில் மஹேல 39 பந்துகளில் 44 ஓட்டங்கள் குவித்திருந்த போது டில்ஷான் 3 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். 45 பந்துகளில் மஹேல தனது 64 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். டில்ஷானை தொடர்ந்து நுழைந்த சங்கா வேகமாக ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

சங்காவின் இழப்பையும் பொருட்படுத்தாத ஜெயவர்த்தனா தொடர்ந்தும் தனது வேட்டையை நடத்திக் கொண்டிருந்தார். மறுமுனையில் சந்திமால் தனது அடித்தளத்தை அமைத்துக் கொண்டிருந்தார். அணி 150 ஓட்டங்களைத் தாண்டிய நிலையில் அதிரடிக்காக முன்னேறி வந்த மஹேல 'ஸ்ரொம்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

இலங்கையின் இளம் சிங்கங்களான சந்திமால், திரிமன்னே இருவரும் மூத்த வர்கள் விட்டுச் சென்ற பணியை பொறுப்பாகச் செய்தனர். 72 பந்துகளில் தனது ஆறாவது அரைச்சதத்தை சந்திமால் பூர்த்தி செய்தார். மறுமுனையில் ஆடிய திரிமன்னே 49 ஓட் டங்களை சந்திமாலுடன் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் வெளியேறினார்.

தொடர்ந்து ஆடிய சந்திமால் இலங்கை 35 பந்துகளில் 38 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சந்திமால் மட்டுமே இந்தத் தொடரில் 300 ஓட்டங்களைத் தாண்டியுள்ளார். அடுத்து களமிறங்கிய மஹ்ரூப்பும் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற ஆட்டம் பரபரப்பை நோக்கி சென்று கொண்டிருந்தது. 9 பந்துகளில் 14 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலை யில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த மத்தியூஸ் ஆட்டமிழக்க வெற்றி ஆஸி. யின் பக்கம் சாயத் தொடங்கியது.

மத்தியூஸ் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து இறங்கிய பெரேராவுக்கு அடுத்த பந்தை கிறிஸ்ரெய்ன் மெதுவாக வீசினார். எதிர்கொண்ட பெரேரா 'மிட் விக்கெட்' திசையில் 4 ஓட்டங்கள் விளாச 8 பந்துகளில் வெற்றிக்கு 10 ஓட்டங்கள் என்ற நிலைக்கு இலங்கை வந்தது. அரங்கத்தில் ரசிகர்களின் இதயம் உச்சத்தில் அடித்துக் கொண்டிருக்கையில் 49 ஆவது பந்து பரிமாற்றத்தின் 5 ஆவது பந்தை கிறிஸ்ரெய்ன் வீச பெரேரா முன்னோக்கி வந்து 'டீப் மிட்விக்கெட்' திசையில் ஓங்கி அடிக்க அது 6 ஓட்டங்களானது. தொடர்ந்து இலங்கையின் வெற்றியிலக்கு இலகுவான நிலையில் இறுதிப் பந்து பரிமாற்றத்தில் 3 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் லீ பந்தினை வீச பெரேரா முதலாவது பந்தில் ஓர் ஓட்டத்தினைப் பெற்றார். அடுத்த பந்தை எதிர் கொண்ட குலசேகரா 'கவர்' திசையில் அடிக்க அது 4 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது.

இதன் மூலம் இலங்கை அணி 3 இலக்குகளால் வெற்றி பெற்று 15 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தது. பெரேரா பந்து வீச்சில் 4 பந்து பரிமாற்றங்களில் 35 ஓட்டங்கள் கொடுத்து துடுப்பாட்டத்தில் 11 பந்துகளில் 21 ஓட்டங்கள் விளாசி அணியின் வெற்றிக்கு உதவினார். சிறப்பான ஆட்டத்தை அளித்த ஜெய வர்த்தனா ஆட்டநாயகனாக தெரிவானார். (5)






## இலங்கை எதிர் ஆஸ்திரேலியா

ஓவல் மைதானம்

ஆஸ்திரேலியா 280/6 (50) இலங்கை 283/7 (49.2)

இலங்கை 3 இலக்குகளால் வெற்றி பெற்றது

ஆட்டநாயகன்: மஹேல ஜெயவர்த்தன

### ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வேட் | c மஹேல b குலசேகர | 5 | 7 | 1 | 0 |
| வோர்னர் | c சங்ககாரா b மஹ்ரூப் | 7 | 13 | 0 | 0 |
| பொரஸ்ட் | c மஹ்ரூப் b மத்தியூஸ் | 104 | 138 | 10 | 2 |
| கிளார்க் | c பெரேரா b மத்தியூஸ் | 72 | 79 | 5 | 2 |
| மைக்ஹஸி | b மலிங்க | 21 | 14 | 0 | 2 |
| டேவிட் ஹஸி | (ஆட்டமிழக்காமல்) | 40 | 28 | 2 | 1 |
| கிறிஸ்ரைன் | St சங்ககாரா b ஹேரத் | 6 | 6 | 0 | 0 |
| லீ | (ஆட்டமிழக்காமல்) | 20 | 15 | 1 | [illegible] |
| உதிரிகள் | | 05 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 280 | | | |

இலக்கு இழப்பு: 1-05, 2-27, 3-181, 4-201, 5-243, 6-250

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மலிங்க | 10 | 0 | 56 | 1 |
| குலசேகர | 10 | 0 | 59 | 1 |
| மஹ்ரூப் | 10 | 0 | 40 | 1 |
| ஹேரத் | 9 | 0 | 45 | 1 |
| மத்தியூஸ் | 7 | 0 | 43 | 2 |
| பெரேரா | 4 | 0 | 35 | 0 |

### இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மஹேல | c வேட் b டோஹேர்ட்டி | 85 | 81 | 6 | 1 |
| டில்ஷான் | c பொரஸ்ட் b ஹில்பின் ஹஸ் | 3 | 9 | 0 | 0 |
| சங்ககார | c வோர்னர் b கிறிஸ்ரைன் | 22 | 22 | 2 | 0 |
| சந்திமால் | lbw ஹரிஸ் | 80 | 100 | 7 | 0 |
| திரிமன்னே | c ஹில்பின் ஹஸ் b கிறிஸ்ரைன் | 24 | 34 | 1 | 0 |
| மத்தியூஸ் | c வோர்னர் b கிறிஸ்ரைன் | 24 | 31 | 1 | 0 |
| மஹ்ரூப் | c ஹரிஸ் b ஹில்பின் ஹஸ் | 5 | 7 | 0 | [illegible] |
| பெரேரா | (ஆட்டமிழக்காமல்) | 21 | 11 | 2 | 1 |
| குலசேகர | (ஆட்டமிழக்காமல்) | 4 | 1 | 1 | 0 |
| உதிரிகள் | | 15 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 283 | | | |

இலக்கு இழப்பு: 1-55, 2-90, 3-153, 4-202, 5-243, 6-250, 7-267

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பிரட் லீ | 9.2 | 0 | 63 | 0 |
| ஹில்பின் ஹஸ் | 10 | 0 | 51 | 2 |
| ஹரிஸ் | 6 | 0 | 43 | 1 |
| கிறிஸ்ரைன் | 8 | 0 | 53 | 3 |
| டோஹேர்ட்டி | 10 | 1 | 35 | 1 |
| கிளார்க் | 5 | 0 | 27 | 0 |
| டேவிட் ஹஸி | 1 | 0 | 4 | 0 |

கொமன்வெல்த் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடர்

## புள்ளித் தரவரிசை - 25.02.12

| | புள்ளிகள் | நி.ஓ.சராசரி |
|---|---|---|
| இலங்கை | 15 | 0.433 |
| ஆஸ்திரேலியா | 14 | 0.481 |
| இந்தியா | 10 | -0.733 |

*நிகர ஓட்ட சராசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் வழிகாட்டலுக்கான கருத்தரங்கு நல்லூர் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், பெப்.25

தொழிற்சந்தையும் சுயதொழில் வழிகாட்டலும் எனும் விடயம் தொடர்பான கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சின் மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் தொழில் வழிகாட்டல் பிரிவு யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வில் உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சர் லக்ஸ்மன் செனிவிரத்ன. அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சி.பி.டபிள்யூ குணதிலக, தொழில் உருவாக்கல் மேம்படுத்தல், தொழில் வழிகாட்டல் பிரிவு மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்கள பணிப்பாளர் எச்.ஏ.ஹேமா பெரேரா ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

நிகழ்வில் யாழ். பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் க.சிவச்சந்திரன் உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் லலித் கண்ணங்கர யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உட்பட பிரதம விருந்தினர்கள் உரையாற்றுவார்கள்.

இந்தக் கலந்துரையாடலின் போது;

உள்நாட்டுத் தொழில்களுக்கு ஆள்சேர்த்தல், வெளிநாட்டுத் தொழில்களுக்கு ஆள்சேர்த்தல் சுயதொழில் ஆரம்பிப்பதற்கான வழிகாட்டல் தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் பற்றிய தகவல்கள் அரசநிறுவனங்கள் மூலம் வழங்கும் சேவைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் குறித்து உரையாடப்படவுள்ளது. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-7)

## மரண அறிவித்தல்



### திருமதி நீலாம்பிகை கணபதிப்பிள்ளை

கேணியடி வீதி, மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நீலாம்பிகை கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் 23.02.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமணி - தங்கம்மா தம் பதியரின் அன்பு மருமகளும் கணபதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) அன்பு மனைவியும், மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சண்முகசிங்கம் (கனடா), காலஞ்சென்ற கருணாகரன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் முரளியின் (ஆசிரியர், யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்), பாசமிகு தாயும், மித்திலாவின் (Indian VFS Global - Jaffna) அன்பு மாமியும், வருண்ஜியின் அன்புப் பேர்த்தியும் இந்துமதி (கனடா), சுமேறா ஜினிதேவி, கனகம்மா, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சோமசுந்தரம் மற்றும் நடராசா, கணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சுஜன் (கனடா) வினோபாபு (லண்டன்), சத்ய பாபு (லண்டன்), பிரியா (லண்டன்) ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்ற, மு.ப. 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு.

தகவல்:-
குடும்பத்தினர்.

# மாட்டிறைச்சிக் கடைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

யாழ்ப்பாணம், பெப்.25

இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் புதிது புதிதாக மாட்டிறைச்சிக் கடைகள் அமைக்கப்படுவதும் கொல்களங்கள் அமைக்கப்படுவதும் உடன் நிறுத்தப்படல் வேண்டும்.

புனிதமான ஈழவள நாட்டில் தெய்வீகப் பசுக்கள், இடபங்களைப் பாதுகாத்தல் எனும் தொனிப் பொருளில் வெளியிட்ட பிரேரணையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தெய்வீகப் பசுக்களையும், இடபங்களையும் பாதுகாப்பதற்கான அனைத்து சமய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் குழு யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர், செயலாளர்களுக்குப் பிரேரணை ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அண்மைக்காலத்தில் புதிது புதிதாக அமைக்கப்பட்ட அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளும் உடன் மூடபடுதல் வேண்டும்.

இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அமைந்துள்ள ஏனைய சகல மாட்டிறைச்சிக் கடைகளும், கொல்களங்களும் கூடிய விரைவில் மூடப்படல் வேண்டும்.

பசுக்களைப் பாதுகாப்பதற்கும் மாட்டிறைச்சிக் கடைகளைத் தடை செய்வதற்கும் பெருமளவான பௌத்தர்களும் உடன்பாடாகியுள்ளனர்.

மேலும் வயோதிபப் பசுக்கள், இடபங்களை வயோதிப காலத்தில் பராமரிக்க இந்தியாவில் உள்ள சரணாலயங்கள் போல் இங்கும் அமைக்கப்படவுள்ளது. எனவே குல தெய்வமான பசுக் கொலையை உடன் நிறுத்துங்கள். பண்டைய அரசர்கள் தெய்வீகப் பசுக்களதும், இடபங்களதும் துயர் துடைத்து வளமும் சிறப்பும் மிக்க நல்லாட்சியும் புரிந்தனர். நேபாள நாட்டில் பசுவதை தண்டனைக்குரிய குற்றமாகும் என்றுள்ளது. (ந)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய அலுவலகத்தில் கடமையாற்றும் இ.இராஜேஸ்வரன் அவர்களின் அன்புத்தாய்

**திருமதி மனோன்மணி இராஜகோபால்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

**பிராந்திய முகாமையாளரும், சக ஊழியர்களும்,**
**பிராந்தியக் காரியாலயம் (வடக்கு)**
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

## தேவை

யாழ். நகரப்பகுதியை அண்டிய பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்க வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0771807672

## மரண அறிவித்தல்

### பொன்னையா தங்கச்சிப்பிள்ளை



சரவணை மேற்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், ஆத்திசூடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா பொன்னுக்கண்டர் தங்கச்சிப்பிள்ளை கடந்த (22.02.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகமுத்து பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்பு மைத்துனியும் சிவபாக்கியம் (ஆஸ்திரேலியா), செல்வநாயகம் (சுவிஸ்), செல்வராணி (வேலணை), மனோகரன் (வேலணை), மகேந்திரன் (டென்மார்க்), புஸ்பராணி (வேலணை), சாந்தகுமாரி (கொக்குவில்), விஜயகுமாரி (கந்தர்மடம்), தமிழ்ச்செல்வி (ஜேர்மனி), ஜெயசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், குணநாயகம், தனலட்சுமி, செல்வராசா, கிருஷ்ணலீலா, இராஜலட்சுமி, இராசரத்தினம், தங்கராஜா, சாந்திநாதன், பிறேமராஜா, சிவதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும் சிவகுமார், Dr.சிவதர்மகுமார் (கொழும்பு), சிவசந்திரகுமார், கிருஷாந்தி, பிரதீபன், பிரதீசன், சர்மிளா, பிரசாத், மனோஜா, ஷாம், ஜோசியா, திபோறா, ஜெயக்குமார், சசிகுமார், கென்ஷிகா, அபிஷா, கருனியா, டனுஷன், சங்குஜன், கீரவன், அனிசன், சியோனா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கபின், நேகன், தானியா, ப்ரித்திகா, மாதுஷா, அஜித், காலஞ்சென்ற அஜய் மற்றும் அலெக்ஸ், ப்ரித்திகா, வினித், அருண், தனுஷ், இசைவிழி, சஞ்சய், சுஜானுஜா, சுஜாந் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

54/12, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். தகவல்: பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் பூமணி



சுதுமலை தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும், திருவையாறு, படித்த மகளிர் திட்டம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் பூமணி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தபாலதிபர் நவரத்தினத்தின் அன்பு மனைவியும், சரஸ்வதி (சுதுமலை), திலகவதி, குமாரசாமி (கனடா), குணரத்தினம் (சுதுமலை), அன்னலட்சுமி (லண்டன்), சறோஜினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராமலிங்கம், காலஞ்சென்ற பொன்னப்பா, துரைச்சாமி (லண்டன்), மகாதேவன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், ஜெயரூபகாந்தி (ஆசிரியை, கிளி/ ஸ்கந்தபுரம் மகாவித்தியாலயம்), ஜெயரூபலீலா (லண்டன்), விக்னேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (வன்னி ஒலிபரப்புச் சேவை) ஆகியோரின் அன்புத் தாயும், சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம் (லண்டன்), சந்திரா (ஆசிரியை, கிளி/ மகாவித்தியாலயம்), கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும், கபிலன், கீர்த்தனா, நீலாம்பரன், கானன், கம்சன், விதுசாயினி, கம்சாயினி, தாட்சாயினி, விஸ்னுகா, விஸ்ணுகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2012) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருவையாறு,
கிளிநொச்சி.

தகவல்:
வே.சுப்பிரமணியம்
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சைவிட்டு நீங்காத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15 . 10 . 2005



உதிர்வு 18 . 02 . 2010

### செல்வன் சுதாகரன் திலகஜன்

கனவில் தோன்றி - எங்கள்
நினைவில் வாழும்
எம் அருமை திலக்குட்டி
நிஜத்தில் வருவது
கனவென்ற பின்னும்
காத்திருக்கின்றோம் - நாம்
வருவாயா நீ

"கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

குடும்பத்தினர்
அப்பா, அம்மா,
அனுசன் அண்ணா, கஜல்விழி அக்கா

## மரண அறிவித்தல்கள்



### சாமித்தம்பி சுந்தரம்

கொட்டைக்காடு கோண்டாவில்கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமித்தம்பி சுந்தரம் (உரிமையாளர் கண்ணன் உணவகம் டிப்போவுக்கு முன்பாக) நேற்று (24.02.2012) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமித்தம்பி - மலர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம்- மலர்மாணிக்கம் தம்பதியரின் மருமகனும் ராணியின் அன்புக்கணவரும் சாந்தகுமார், சிவானந்தராஜா, சந்திரகுமார், யோகராஜ் (டினா), உதயகுமார், ரஜீவன், கஜேந்திரன், சசிகலா, சாலினி, ஆகியோரின் பாசமிகு தந்தையும் கவிதா, சுமரஞ்சினி, மைதிலி, கண்ணா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொட்டைக்காடு,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

### சூசைப்பிள்ளை மேரிமாணிக்கம்

(அப்பம்மா)



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப் பிள்ளை மேரிமாணிக்கம் நேற்று (24.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், அன்ரன் மரியதாஸ் (பிரான்ஸ்), றஞ்சித் ஞானப்பிரகாசம் (ஓய்வு பெற்ற பணியாளர் தொலைத் தொடர்பு பரிவர்த்தன நிலையம்), கொன்சன்டைன் தேவதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தையல்நாயகி (பிரான்ஸ்), ஜீற்றாவரோனிகா (சறோ), பத்மாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, பொன்னம்மா மற்றும் தங்கரத்தினம் (வவுனியா), செந்தூரன் (பிரான்ஸ்), டுசி (ஹொலண்ட்), ஸ்ரீயித்குமார் (டுசாந்தன்- யாழ். போதனா வைத்தியசாலை), சுரேஸ் (கனடா), டிலான்(பிரான்ஸ்), அலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், இஸ்சாம், டீன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.02.2012) சனிக்கிழமை 3 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து ராசா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/1 புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
பிள்ளைகள், மருமக்கள்

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் பரிசாரகராகக் கடமையாற்றும் திரு. T.J.E.பொனிபஸ் அவர்களின் அன்புத் தந்தை

### கிறிஸ்ரி பொனிபஸ்

(ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி )

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவர் யேசுவைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,
கைதடி

பணியாளர்
நலன்புரி சங்கம்.

## நாட்டுக் கூத்து அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக் கொணரும்முகமாக அந்தக் கல்லூரியில் மாதந்தோறும் நடத்தப் பட்டு வருகின்ற கலைநிலா அரங்க நிகழ்வுகள் இன்று மாலை 5.30 மணிக்கு பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கல்லூரி மாண வர்களின் நடனங்கள், பாட்டு, ஓர்கன் இசை போன்றவற்றுடன், சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றத்தின் நாட்டுக் கூத்துப் பிரிவின் தயாரிப்பில் 'அனைத்தும் அவரே' என்ற தென்மோடி நாட்டுக்கூத்து ஆகியன மேடையேற்றப்பட வுள்ளது.

வேதாகமத்திலுள்ள நீதித் தலைவராகிய 'யோபு' வின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கூத்தை அண்ணாவியார் அ.பாலதாஸ் எழுதியுள்ளார். நெறியாள்கையை அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராசா மேற்கொண்டுள்ளார்.


### காணி விற்பனைக்கு

தும்பளையில் அரைவாசி கட்டப்பட்ட வீடும் காணியும் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: 0773618036

### மெக்கானிக் தேவை

(மோட்டார் சைக்கிள் திருத்துபவர்/ பழகுபவர்)
சிவா மோட்டார் சைக்கிள் கராச்
இல. 186, ராமநாதன் வீதி, யாழ். பல்கலைக்கழகம் முன்பாக
நேரம் : 9 மணி தொடக்கம் 4 மணிவரை (நேரில் தொடர்பு கொள்ளவும்)

### காணி விற்பனைக்கு

தொண்டமானாறு பிரதான வீதி (Main Road) மதவடியில் கிணறு, சுற்றுமதில், திருத்தம் செய்யப்பட வேண்டிய வீட்டுடன் கூடிய 3 பரப்பு (1 குளி குறைய) காணி உடன் விற்பனைக்கு உண்டு. கூடிய விலை கோருவோருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.
தொடர்பு - 011 - 2715550

### குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பாவித்த (2x4) அடி நீள அகலமான இரட்டைக் கதவுகளை உடைய குளிர்சாதனப் பெட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0773535561

### பிரத்தியேக வகுப்புகள்

24, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
Gr. 6 - 11 கணிதம்
Gr. 6 - 08 விஞ்ஞானம்
தமிழ், ஆங்கில மொழிமூலம் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 021 4901637

### Car விற்பனைக்கு

Zen Estilo, 2011 Model, Full Option, Alloy Wheel, Silver Colour, KP - xxxx, 6000 Km. Tp - 0773649296

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழையுங்கள். 0779086737
GUNAA BEST PC.
No. 6, Cathedral Road, Jaffna.

### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும் ரொட்வியல் ஆண் நாயும், 6 மாதம் நிரம்பிய பொமேரியன் ஆண், பெண் நாயும், 3 மாதம் பூர்த்தியான அல்சேசன் குட்டிகளும், மணிதாரா ஒரு வருட நல்ல இளம் பசுக்கன்று, வான் கோழி, வாம்ஸ் விற்பனைக்குண்டு.
தொடர்பு : வி.மயூரன், இல. 209, பலாலி றோட், கோண்டாவில். ராஜா பீனாசா முன்பாக

### புகைப்பட, வீடியோ சேவை

உங்கள் நிறுவன நிகழ்ச்சிகள், திருமணம், பிறந்தநாள், விஷேட வைபவங்கள் அனைத்து நிகழ்ச்சிகளையும் குறைந்த செலவில் சிறப்பாக டிஜிட்டல் முறையில் புகைப்படம், வீடியோ எடுப்பதற்கு நாடுங்கள்.

பரணி விஷன்
T.P:-0773157411
E.mail:-baranivision@gmail.com

TOSHIBA



மிகக் குறைந்த விலைகளில்
1-3வருட சர்வதேச உத்தரவாதத்துடன்
LAPTOP கணணிகள்

TOSHIBA SATELLITE 600C-48,000.00
TOSHIBA SATELLITE 660C-53,000.00
DELL INSPIRON 4010 -62,000.00
DELL INSPIRON 5010 -72,000.00
DELL INSPIRON 5010 -82,000.00

DELL

STP Your Partner in IT Solutions
149, Kasthuriar Road. Jaffna.T.P:0212222674.

**கையிருப்பு உள்ளவரை மட்டுமே


## அறிவித்தல்

### காரைநகர் பிரதேச சபை வடக்கு உப அலுவலகம், ஆதன உரிமை உறுதிப்படுத்தல்

ஆதன இல.: 11678/22.06.2010

காரைதீவு கோயிற்பற்று, காரைதீவு வடக்கு இறை "மடத்துக்கரை"

காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட காரைநகர் வடக்கு உப அலுவலக வட்டார இல. 07 வலந்தலை சந்தி கிழக்கு, மேற்கு வீதியில் அமைந்துள்ள ஆதனமானது, காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுடையது என்றும், முன்னர் கந்தையா கனகசபை என்பவருக்குச் சொந்தமானதாக இருந்ததென்றும், அவரிடமிருந்து எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கு 1980ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட அப்போதைய பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமைப்பகுதியில் முறையாக, எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் அதனோடிணைந்த அமைப்புக்களையும் ஏற்படுத்தி, பொது மக்களுக்கு சீரான தேவைகளை செய்யத்தொடங்கி மிகுந்த வருமானத்தையும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்படுத்தினார்கள் என்றும் தொடர்ந்து சேவையிலீடுபட்ட முந்தைய நிர்வாகத்தினர் நாட்டு நிலைமைகள் காரணமாக தொடர முடியவில்லை என்றும், அக்கால ஓட்டத்தால் எரிபொருள் நிரப்பு நிலையம் சீர்குலைந்து சிதைவுற்றதென்றும், அக்கால ஆவணங்களும் அழிந்துவிட்டன என்றும், ஆயினும் நிலைமைகள் சீரான பின் எரிபொருள் நிரப்பு நிலைய அத்தியாவசிய சேவைகள் எண்ணெய் தாங்கிகள் நிரப்பி வைத்து வழங்குதல் மூலம் செயற்பட்டு வருகின்றதென்றும் தற்போதைய நிர்வாகத்தினர் ஆகிய நாங்கள் முறையாக எரிபொருள் நிலையத்தை தற்கால தேவைகளுக்கேற்ப புனர்நிர்மாணம் செய்து பொதுமக்களுக்கு சேவை செய்ய முற்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டதற்கமைய தொழிற்பட்ட வேளை, ஆதனத்தை ஆவணப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதென்றும் வெளிப்படுத்தி 22.06.2010ஆம் திகதிய பிரகடன உறுதி இல. 11678 ஐ சபையில் சமர்ப்பித்துள்ளார்கள்.

அத்துடன் அவ்வாதனத்தினுள் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கு கட்டட விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். எனவே, மேற்படி ஆதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின், உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து, குறித்த ஆதனமானது காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமானதென கருதி, எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மு.ஆ.வே. ஆனைமுகன்,
தவிசாளர், பிரதேச சபை, காரைநகர்,
24.02.2012

## மரண அறிவித்தல்



### அருணாசலம் பூபதி

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பூபதி 22.02.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், அருணாசலத்தின் அன்பு மனைவியும் மனோராணி (கனடா), ஜெயராணி, சாந்தினி, செல்வச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், தனபாலசிங்கம், ராஜலிங்கம், தங்கராஜா, மணிமாலா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும். லஜீதா (கனடா), சுஜீதா, வரூபன் (கனடா), நிரூபன் (கனடா), குணரூபன் (கனடா), சுரேகா, அனித்தா, காலஞ்சென்ற கபிலா மற்றும் தஜீசன் (பிரான்ஸ்), தர்சன், டக்ஷிகா, டிலக்ஷன், யானுஜா, வினோத்தன் (கனடா), லஜித்தன் (கனடா), நவீனா (கனடா) ஆகியோ ரின் பாசமிகு பேர்த்தியும், கவிஷ் (கனடா), சுஜான் (கனடா), அக்ஷெயன், ஆகிஷன் ஆகியோரின் அன்புமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தமிழ் கந்தையா வாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். (15013) (6,7,10)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் மானியம் வழங்கக் கோரி மன்னார் விவசாயிகள் மௌன ஊர்வலம்

மன்னார், பெப்.25

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள்களின் விலையேற்றத்தினைக் கண்டித்தும்,தமக்கு எரிபொருள் மானியம் வழங்கக் கோரியும் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் ஒன்றிணைந்து மன்னாரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

மன்னார் மாவட்ட பிரதிச் செயலாளர் அ.பிரேமதாஸிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவையும் கையளித்தனர். மன்னார் மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்த மௌன ஊர்வலம் நடைபெற்றது.

முற்பகல் 10 மணியளவில் மன்னார் பிரதான பாலத்திற்கு முன்பு ஆரம்பமான இந்தப் பேரணி பஸார் வீதியூடாகச் சென்று மன்னார் மாவட்டச் செயலகத்தை அடைந்தது.

அங்கு விவசாயிகள் தமது கோரிக்கை அடங்கிய மனுவை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும் முகமாக மன்னார் மாவட்டபிரதிச் செயலாளர் பிரேமதாஸிடம் கையளித்தனர்.

குறித்த பேரணியின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோ நோகராதலிங்கம், மன்னார் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள்,உறுப்பினர்கள், விவசாயிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர். (10-12)



## இறுதி உயிரிழப்புகள் 10,000
### அரசின் கணிப்பீடுகளில் தகவல்

1 கணக்கெடுப்பு உறுதிப்படுத்துகிறது என்று பி.பி.ஸி. தெரிவித் துள்ளது.

எனினும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனால் நியமிக்கப்பட்ட வல்லுனர்கள் குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதற்கும் அரசின் இந்த அறிக்கைக்கும் இடையில் பெரும் இடைவெளி காணப்படுகின்றது. (உ-1)

## இலங்கை அரசை கைவிட்டது டில்லி

1 தனக்கான ஆதரவைத் திரட்டிக் கொள்வதில் கொழும்பு தீவிரக உள்ளது.

இலங்கையிலிருந்து டில்லிக்கு விரைந்த உயர்மட்டக் குழு, ஜெனிவாவில் தமக்கு எதிரான பிரேரணையை தோற்கடிக்க உதவுமாறும், இது விடயம் தொடர்பில் ஏனைய அங்கத்துவ நாடுகளுடன் பேசி, சாதகமான பதிலொன்றைத் தருமாறும் கோரியுள்ளது. இதற்கு புதுடில்லி தரப்பிலிருந்து உறுதியான - சாதகமான பதிலொன்று கொழும்புக் குழுவினருக்கு கிடைக்கப்பெறவில்லை. இலங்கை மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ஜெனிவாவில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்று தாம் தீவிரமாகப் பரீசிலித்து வருகின்றனர் என்றும் இலங்கை விவகாரம் தொடர்பில் ஏனைய நாடுகளுடன் சமரசம் பேசமுடியாது என்றும் புதுடில்லி ஆணித்தரமாக இடித்துரைத்துள்ளது.

இராஜதந்திர வழிமுறைகள் தோல்வியை நோக்கிப் பயணிக்கும் தற்போதைய சூழ்நிலையில், தாம் விடுத்த வேண்டுகோளை புதுடில்லியும் நிராகரித்துள்ளமையால் கொழும்பு அதிர்ச்சியில் உறைந்துபோயுள்ளது என அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

இலங்கைக்கு எதிரான பிரேரணையைத் தாம் ஆதரிக்கப்போவதாக வாஷிங்டன் பகிரங்கமாக அறிவித்துள்ளமையால் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளும் தத்தமது நிலைப்பாடுகளை ஆழமாக - மதிநுட்பத்துடன் பரிசீலித்து வருகின்றன.

அதுமட்டுமின்றி,எதிர்வரும் 27 ஆம் திகதி ஜெனிவா மாநாடு ஆரம்பமானாலும் இலங்கை விவகாரம் தொடர்பில் மார்ச் முதலாம் அல்லது இரண்டாம் வாரத்திலேயே வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறும் எனவும் அறியக்கூடியதாகவுள்ளது. (உ-சி)

## ஐரோப்பிய ஒன்றியமும் எச்சரிக்கை

1 இதுதொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைத் திறம்பட நடைமுறைப்படுத்தினால், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையில் முக்கியமான பங்களிப்பைச் செய்ய முடியும்.

இலங்கையில் இனமுரண்பாட்டுக்கு மூலகாரணமான தமிழ் மக்களின் உண்மையான குறைகளைக் தீர்ப்பதில் கடந்தகால அரசுகள் தவறியுள்ளன என்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் கருத்தை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொள்கிறது.

எல்லாக் குழுக்கள் மற்றும் சமூகங்களுக்கிடையேயும் உண்மையான நல்லிணக்கம் அவசியம். அதை அடைவதற்குக் கடந்தகால சம்பவங்கள் குறித்த நீதி விசாரணையும், பொறுப்புக் கூறுவதும் முக்கியம்.

ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையில் எழுப்பப்பட்ட பல கேள்விகளை நல்லிணக்க ஆணைக்குழு பெருமளவில் புறக்கணித்திருப்பது வருத்தத்துக்குரியது.

ஆனாலும், நல்லிணக்க ஆணைக்குழு இலங்கைப் படையினராலும் விடுதலைப் புலிகளாலும் இழைத்திருக்கக்கூடிய குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த அழைப்பு விடுத்துள்ளது.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை ஆகியன தொடர்பாக ஐ.நா பொதுச்செயலர் மற்றும் பொருத்தமான ஐ.நா. அமைப்புகளுடன் இணங்கிச் செயற்பட ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் இலங்கையை ஊக்குவிக்கும்.

சர்வதேச சமூகத்தில் இலங்கை ஒரு செயல்நிலையான நாடு, உண்மையான நல்லிணக்கத்தை நோக்கி - உறுதியான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதன் திட்டத்தை உலகிற்குக் காட்டுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. - இப்படி அந்த அறிக்கையில் ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

(உ-சி)

## ஜெனிவா சென்ற இலங்கை குழுவுக்குள் பிளவு

1 வரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச ரீதியில் நமது நாட்டுக்கு எதிராக வெளிக்கிளம்பியுள்ள அழுத்தங்களுக்குப் பதிலடி கொடுக்கக்கூடியவர் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாதான். அவரை அரசியல் கைதியாக சிறைவைத்துவிட்டு, சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு தக்க பதிலடி கொடுப்போம் என அமைச்சர் குழுவினர் உல்லாசப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது பெரும் வேடிக்கையாகவுள்ளது.

நாட்டில் போர் இடம்பெற்ற காலத்தில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்கள் என்ன என்பதை நன்கு அறிந்தவர் சரத் பொன்சேகா மட்டுமே. போர்க் காலத்தில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை சமர்ப்பித்தது.

ஐ.நா. நிபுணர் குழுவிடம் கலந்துரையாடுவதற்கு சரத் பொன்சேகாவிற்கு வாய்ப்பளிக்குமாறு நாம் அரசிடம் வேண்டுகோள் விடுத்தோம். அதுபோலவே நல்லிணக்க ஆணைக்குழுவினருடனும் கலந்துரையாடுவதற்கு அவருக்கு ஒரு வாய்ப்பளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தோம்.

நாட்டையும் நாட்டு மக்களையும் காக்கும் கடப்பாடுடைய நாம், அரசிடம் விடுத்த வேண்டுகோளை அரசு நிராகரித்துவிட்டு சரத் பொன்சேகாவை சாதாரண கைதியாக அல்லாமல் அரசியல் கைதியாக சிறைவைத்தது. அன்றே நாம் கூறியபடி சரத் பொன்சேகாவிற்கு ஒரு வாய்ப்பளித்திருந்தால் இன்று நாடு இத்தகைய பாரதூரமான விளைவுகளைச் சந்தித்திருக்காது. இப்பிரச்சினைகளுக்கு போர் நிறைவுற்ற காலத்திலேயே நல்லதொரு தீர்வும் கிடைத்திருக்கும்.

சரத் பொன்சேகாவை நாட்டில் சுதந்திரமாக நடமாடவிட்டால் அரசின் கபட நாடகங்கள் நாட்டில் அப்பட்டமாக வெளியாகியிருக்கும். இதனை உள்ளூர அறிந்து வைத்திருந்ததால்தான் அரசு அவரைச் சிறை வைத்தது. அவரை சிறைவைக்காது இருந்திருந்தால் நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

சர்வதேசத்தின் அழுத்தங்களை முறியடிப்போம் என வீறாப்புடன் ஜெனிவா விரைந்த அமைச்சர்கள் குழுவினர் தற்போது தமக்குள்ளே ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக இரு குழுக்களாகப் பிளவுபட்டு முட்டி மோதிக்கொண்டிருக்கின்றனர். இவர்களது இந்தச் செயற்பாடானது சர்வதேச ரீதியில் நாட்டிற்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை ஒன்றை முன்வைத்தது. நாட்டில் இறுதிக்கட்ட போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்குற்றம் தொடர்பாக அதில் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வெள்ளைவான் கடத்தல்கள், பொதுமக்கள் மீதான தாக்குதல், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல், பொது இடங்களுக்குத் தீ வைத்தல், 17 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை இல்லாது செய்தல், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்குதல், நீதியற்ற தேர்தல்களை நடத்துதல் மற்றும் அரச அடக்குமுறைகள் என்பன இலங்கையில் இடம்பெறுகின்றன. இவற்றை இலங்கை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் கருத்தையே நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையும் தெரிவிக்கின்றது.

இந்த இரண்டு அறிக்கைகளிலும் என்ன உள்ளது என அரசு நாட்டு மக்களுக்குக் கூறவில்லை. அதைக் கூறவேண்டிய கடப்பாடுடைய நாம் மக்களுக்கு எடுத்துரைத்தோம். இதனால் அரசு எம்மைத் திட்டுகிறது. எதிர்க்கட்சியினர் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் விரோதமாகச் செயற்படுகின்றனர் எனக் கூறுகின்றது.''- என்றார்.

(உ-சி)

## போரை வென்றுள்ள இலங்கை அமைதியை வெல்லவேண்டும்

1 ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங் கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயா தீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என மேற்குலக நாடுகள் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழு வில் கொண்டு வரப்போகும் தீர்மானத்துக்கு நோர்வேயும் ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இப்போரின் போது காணாமல் போன பெருந்தொகையானவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்பதில் அவர்களுடைய அன்புக்குரியவர்கள் அக்கறையாகவுள்ளார்கள் எனவும் எரிக் சொல்ஹெய்ம் கூறினார்.

(த)

## அமெரிக்காவுக்கு ஆதரவு அலை

1 ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் நகல் வெளியாகியுள்ள நிலையில், ஆதரவு வழங்கவுள்ளதாக நோர்வேயும் அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடத்தக் கோரும் நாடுகளுடன் நோர்வேயும் இணைந்து கொண்டுள்ளது என அந்த நாட்டின் அமைச்சரும், இலங்கை சமாதான முயற்சிகளில் நடுநிலையாளராகப் பங்கேற்றவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு பொறுப்புக் கூறுவதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை நோர்வே ஆதரிக்கப் போகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கனடாவும் இந்த விடயத்தில் தனது முழுமையான ஆதரவை வழங்கவுள்ளது. (உ-சி) 7

## சவேந்திராவின் நீக்கம் சரியானது

1 பிரதிநிதி சவேந்திர சில்வா நீக்கப்பட்டமை மிகச் சரியான தீர்மானம் என்று ஐக்கிய நாடுகளின் பாலியல் வன்முறை தொடர்பான நிபுணர் மார்கட் லோஸ்ரோம் தெரிவித்துள்ளார். எனினும், ஐக்கிய நாடுகள் செயலாளரின் பேச்சாளர் ஹார்வே லட்சோர்ஸ் இது தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

ஆலோசனைக்குழுவின் தீர்மானம் மற்றும் சவேந்திர சில்வாவின் நிலைப்பாடு ஆகியவை தொடர்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, இன்னர் சிற்றி பிரஸ் செய்தியாளர் ஐக்கிய நாடுகளின் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பினார். எனினும், அவர் அதற்குப் பதில் எதனையும் வழங்கவில்லை. சவேந்திர சில்வா ஆலோசனைக் குழுவில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ மூன் கவனம் செலுத்தியுள்ளதாகப் பேச்சாளர் குறிப்பிட்டார். சவேந்திர சில்வாவின் விடயம் இன்னும் உறுப்பு நாடுகளின் கைகளிலேயே தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்புக்காக வந்திருந்த ஐக்கிய நாடுகளின் பாலியல் வன்முறை தொடர்பான நிபுணர் மார்கட் லோஸ்ரோமிடம், சவேந்திர சில்வாவின் நீக்கம் பற்றி இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியது.

இதன்போது பதிலளித்த லோஸ்ரோம், சவேந்திர சில்வா குறித்த ஆலோசனைக்குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டார். இது மிகச் சரியான தீர்மானமாகவே இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலையில் சிக்கிய 200 குதிரைவலு அதிவேக வெளியிணைப்பு இயந்திரங்கள்

## விடுதலைப்புலிகள் பயன்படுத்தியவை எனச் சந்தேகம்

**வெளிநாட்டு தயாரிப்பான இந்த இயந்திரங்களை மீனவர்கள் பயன்படுத்த வாய்ப்பில்லை இலங்கையில் இடம்பெற்ற போரின்போது விடுதலைப் புலிகளால் இவை பயன் படுத்தப்பட்டிருக்கலாம்**

நாகபட்டின மீனவர் வலையில் சிக்கிய வெளிநாட்டுத் தயாரிப்பான, அதிவேக வெளியிணைப்பு இயந்திரங்கள், விடுதலைப்புலிகள் பயன்படுத்தியவை என்பது குறித்து, கரையோர சுங்க அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

நாகை மீன்பிடித் துறை முகத்தில் நேற்று முன்தினம் காலை அதிவேக படகு இயந்திரங்கள் 3 உள்ளன என்று, சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக விரைந்த சுங்க அதிகாரிகள் அவற்றைக் கைப்பற்றி நாகபட்டின சுங்கத்துறை அலுவலகத்துக்கு எடுத்துச்சென்றனர்.

இதுகுறித்து சுங்க அலுவலர்கள் தெரிவித்ததாவது:

நாகபட்டினம், அக்கரைப் பேட்டையைச் சேர்ந்த முத்துத்துரை என்பவருக்கு சொந்தமான விசைப் படகில் மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது, வலையில் மூன்று இயந்திரங்கள் சிக்கியுள்ளன. அவற்றை மீனவர்கள் கரைக்கு எடுத்து வந்து போட்டுள்ளனர்.

இதுகுறித்து தகவல் கிடைத்தவுடன் படகு இயந்திரங்களை கைப்பற்றியுள்ளோம். இந்த மூன்று இயந்திரங்களும்,6 சிலிண்டர்கள் கொண்டவை. 200 குதிரை வலுக் கொண்ட இந்த இயந்திரங்கள் சிறிய படகில் அதிவேகமாகச் செல்வதற்கு பயன்படுத்தப்படும்.

வெளிநாட்டு தயாரிப்பான இந்த இயந்திரங்களை எமது நாட்டு மீனவர்கள் பயன்படுத்த வாய்ப்பில்லை. இலங்கையில் இடம்பெற்ற பேரின்போது விடுதலைப் புலிகளால் இவை பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

நீண்ட நாள்களாகத் தண்ணீரில் இயந்திரங்கள் இருந்துள்ளதால், அவைகளில் கடல் சிப்பிகள் படிந்துள்ளன. உடனடியாக எந்த நாட்டுத் தயாரிப்பு என்பது தெரியவில்லை. இதுகுறித்து விசாரித்து வருகிறோம் - என்றார் அவர். (ஒ)

# இலங்கை – அமெரிகா இராஜதந்திர மோதல்

கொழும்பு, பெப்.22

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஒரு இராஜதந்திர முறுகல் நிலை ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையைத் தோற்கடிக்க இலங்கைக்கு உதவவேண்டும் என்று இலங்கை, உறுப்பு நாடுகளிடம் கோரியுள்ளமையை அடுத்தே இந்த முறுகல் தோன்றியுள்ளது.

ஜெனிவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர பிரதிநிதி தாமரா குணநாயகம், அமெரிக்காவின் பிரேரணைக்கு எதிராகச் செயற்படுமாறு 47 உறுப்பு நாடுகளுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அரசுடன் நெருங்கிய தொடர்பை அமெரிக்கா கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அமெரிக்கா, புதிய பிரச்சினையை உருவாக்க முயற்சிக்கிறது என்று தாமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அவதூறு ஏற்படும் வகையில், மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை காரணமாக தேவையற்ற பிரச்சினைகள் எழக்கூடும்.

இந்நிலையில், இலங்கை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளைத் தகர்க்கும் வகையிலேயே ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்படுவதாக தாமரா குணநாயகம் குற்றம் சுமத்தியுள்ளார்.

# இப்படியும் நடக்கிறது

கிளிநொச்சி, பெப்.25

கிளிநொச்சி பரந்தன் சந்திக்கு அண்மையாக உள்ள மதுபான சாலைக்கு அருகில் மதுபோதையில் நின்று இரண்டு இளைஞர்கள் ஏ-9 வீதியில் செல்வோரிடம் 'ஒரு பியர் ரீன்னுக்காவது காசு தந்துவிட்டுச் செல்லுங்கள்' என கெஞ்சியும் மிரட்டியும் மக்களை தொந்தரவு செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு 8.30 மணியளவில் நிறைமதுபோதையில் 24 வயது மதிக்கத்தக்க இந்த இரண்டு இளைஞர்களும் பிச்சை கேட்பதைப் போல் வீதியால் போவோர் வருவோரை மறித்து கெஞ்சியுள்ளனர்.

காசு கொடுக்க மறுத்தவர்களை 'நாங்கள் யார் என்று தெரியுமா? காசு தராவிட்டால் உங்களை சும்மா விடமாட்டோம்' என மிரட்டியதாகவும் சம்பவத்தில் அகப்பட்டவர்கள் தெரிவித்தனர். (10-426)

# யாழ். முதல்வரும் சென்றார் ஜெனிவா கூட்டத்துக்கு

ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள மனிதவுரிமைக் கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக யாழ். மாநகர சபை முதல்வர் நேற்றையதினம் புறப்பட்டுச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத் தொடர் நாளைமறுதினம் 27 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதில் பங்குபற்றுவதற்காக அரச தரப்பிலிருந்து சுமார் 56 பேர் வரையில் பங்குபற்றவுள்ளனர்.

கடந்த முறை இடம்பெற்ற கூட்டத் தொடரில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டாசுகுமார் பங்குபற்றியிருந்தார். இந்த முறை இடம்பெறும் கூட்டத் தொடரில் பங்குபற்றுவது தொடர்பில் அவரிடம் கேட்ட போது, ''இந்த முறை இடம்பெறும் கூட்டத் தொடரில் நான் பங்குபற்றவில்லை. அரசு என்னிடம் அது தொடர்பில் எதுவும் கேட்கவில்லை. கடந்தமுறை இடம்பெற்றகூட்டத்தொடரில் நான் யாழ். மாவட்டத்தின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்திச் செயற் பாடுகள் குறித்தும் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தேன். எனவே இந்த முறை நான் பங்குபற்ற வேண்டிய தேவை இல்லை'' என்று தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இந்த முறை இடம்பெறும் ஜெனிவா கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காகச் சென்றுள்ளார். அரசு தரப்பு பிரதிநிதியாகவே அவர் சென்றுள்ளார். இதன் காரணமாவே இந்த மாதம் இடம்பெற இருந்த மாநகரசபையின் கூட்டத் தொடரை திடீரென்று ஒத்தி வைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-5)

# உருப்படியான செயல்திட்டம் இலங்கையிடம் இல்லை

»1 கொண்டு வருவதற்கு நாம் எமது பங்காளர்களுடன் இணைந்து பணி யாற்றி வருகிறோம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் மார்க் ரோனர் தெரிவித்தார்.

வாஷிங்ரனில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அரசு உள்நாட்டில் அமைத்துக் கொண்ட இந்த ஆணைக்குழு விசாரணையை நடத்துவதை ஏற்றுக்கொண்டிருந்த அமெரிக்கா, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டபோது அதில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என நம்பியிருந்தது என்றும் பிரதிப் பேச்சாளர் மேலும் கூறினார்.

இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கஆணைக்குழுவை நியமித்தார். இதன் அறிக்கை கடந்த டிசெம்பரில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இருந்தபோதிலும், இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் தொடர்ச்சியான பேச்சுக்களை அமெரிக்கா முன்னெடுத்தாகத் தெரிவித்த பேச்சாளர், ஆணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் சிலவற்றையாவது நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை அமெரிக்கா கேட்டுக்கொண்டிருந்தது எனவும் குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வரவேற்ற அவர், அந்த அறிக்கை பலவலிமையயான பரிந்துரைகளை உள்ளடக்கியிருந்ததாகவும், அதனை நடைமுறைப் படுத்துவது உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் ஜனநாயக நிறுவனங்களைப் பலப்படுத்துவதற்கும் உதவியாக அமைந்திருக்கும் என்றும் கூறினார்.

''இருந்தபோதிலும், இந்தப் பரிந்துரைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் இலங்கை அரசினால் விரி[illegible] செயன்முறைத் திட்டம் ஒன்று இன்றுவ[illegible] வெளியிடப்படவில்லை என்பது வெளிப்படையானது'' எனவும் தெரிவித்த அவர், ''இதனை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு இலங்கை அரசை நாம்இப்போதும் ஊக்கப்படுத்துகின்றோம்'' எனத் தெரிவித்தார். (த)

**ஆங்கிலம்**
**ஒரு மணிநேர இலவச கற்கைநெறி**
**25.02.2012 சனிக்கிழமை**
1 : மாலை 2.00 – 3.00 2 : மாலை 3.00 – 4.00
3 : மாலை 4.00 – 5.00 4 : மாலை 5.00 – 6.00
அனுமதி இலவசம், பயிற்சி புத்தகம் இலவசம்
பயிற்சிக்கான சான்றிதழ் இலவசம்
(பாடசாலை மாணவர்கள் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்)
இந்த விளம்பரத்துடன் வகுப்புக்கு வரும் அனைவருக்கும்
ஆங்கில கற்கைநெறிக்கான CD முற்றிலும் இலவசம்
**MyWay English**
182 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
077 33 63 456

**கணினி மலிவு விற்பனை**
HP 3.0GHz, 16" LCD Monitor
மற்றும் அதனுடன் கூடிய
பொருள்களும் 24,750/= விலையில்
விற்பனைக்குண்டு. ஒரு வருட
உத்தரவாதம்
**ST. ANTONY'S.COM (SKY)**
187, K.K.S. Road, Jaffna.
TP : 021 2224865, 0750698608.
(மின்சார நிலைய வீதி எதிரில்)
FREE - WEBCAM / 4GB PEN DRIVE / HEADPHONE
Power S/Y - 1,250/-, I3 Dell Laptop 62,500.
DDR III 2GB 2300, DDR I 512 1500 (Whole Sale)
14ஆவது ஆண்டு சேவையில்
கையடக்கத் தொலைபேசி (Phone) திருத்துதல் தேவை.

**தாவடி - கொக்குவிலில்**
பாடசாலை விலகியோருக்கும் அரசஅலுவலர்களுக்குமான
**சிங்கள வகுப்பு**
(சனி, ஞாயிறு) கிழமைகளில் நடைபெறுகின்றன.
கற்கைநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
சீபி CB සීබී
Computer Academy
No.325, K.K.S Rd, Thavady Junction, Kokuvil. T.P: 0213217903

**செங்கல் விற்பனைக்கு உண்டு**
வீட்டுக்கு குளிர்ச்சி தரும் உறுதியான செங்கற்கள்
உங்கள் இருப்பிடம் தேடி விநியோகிக்கப்படும்.

பல வடிவங்களில் பல்வேறு அளவுகளில்
நிலப்பதிப்புக் கற்கள் மற்றும் பூகற்கள் (Grill)
விற்பனைக்கு உண்டு,
வன்னி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற
பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்
**பிரணவன் என்ரபிறைசஸ்**
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 3818799
(சங்கிலியன் சிலைக்கு முன்)

**காணி விற்பனைக்கு**
கைதடி நுணாவில், சாவகச்சேரி
A-9 பாதைக்கு அண்மையில் 20
பரப்பு மேட்டு நிலம் நல்ல
தண்ணீர்க் கிணற்றுடன்
விற்பனைக்கு உண்டு. காணி
விரும்பிய மாதிரி பிரித்தும்
கொடுக்கப்படும்.
தொடர்பு : 077 1989040
077 9951744
077 6150651
(14662)(6-7-8)

**Sale - Books**
இந்திய வெளியீட்டின் சகல துறை சார்ந்த கிடைத்தற்கரிய புத்தகங்கள் Sale போடப்படுகின்றன.
அச்சுவிலையில் இருமடங்கு கள் தற்போதைய விலையில் 50% விலைக்கழிவு.
இதுவரை யாழ். நகரில் எங்குமே இந்த விலையில்
விற்பனை செய்யப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
February - 25 முதல் March - 15 வரை
காலை 8.30 - 6.00 மணிவரை பார்வையிடலாம்.
உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள் (எமது முதலாவது Sale)
**அன்னை புத்தகசாலை**
இல. 7, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 2229881

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகாரத்தை
விட அனுதாபமே
அதிக உதவி
செய்வதாகும்.
- ஆவ்பரி

# வார வசந்தம்

01

உதயன் | 25 பெப்ரவரி 2012 | சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு

# ஜெனிவாவில் 27

## தமிழர் தலைவிதி மாறுமா.....?

■ துன்னாலைச்செல்வம்

விடுதலைப்புலிகளுடனான இறுதிப் போரில் சிங்களப் படைகளால் தமிழ் மக்கள் கொடுமையானமுறையில் கொலை செய்யப்பட்டார்கள். கொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமாயின், கொலைகாரர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும். அப்பொழுதுதான் தமிழர்களும் இந்த நாட்டில் வாழக்கூடிய சூழல் ஏற்படும்.

ஜெனிவாவில் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்படும் போது, அந்தத் தீர்மானம் தமிழ் மக்களுக்கு விடுதலையை வாங்கித் தருவதாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் தமிழ் மக்கள் உலக நாடுகளின் நியாயத் தன்மையில் நம்பிக்கை கொள்வார்கள்.


ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா உட்பட நாடுகள் கொண்டு வரவுள்ள தீர்மானத்தை ஆதரிக்குமாறு, மனித உரிமைகள் மற்றும் அமைதியை நிலை நாட்டுவதற்கான உலகப் புகழ்பெற்ற நிறுவனமாக ''த எல்டர்ஸ்' (THE ELDERS) அமைப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் அங்கத்துவ நாடுகளிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. இதற்கமைய, இந்த அமைப்பு ஜெனிவாக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் நாடுகளின் தூதுவர்களுக்கு முக்கிய கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் கழித்தே இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் ஒன்றை ஜெனிவாவில் கொண்டு வரும் முயற்சிகள் தீவிரம் பெற்றுள்ளன. இந்தத் தீர்மானம் இலங்கையை சர்வதேச விசாரணைப் பொறிக்குள் தள்ளிவிடும் என்றோ, அரச மற்றும் இராணுவத் தலைவர்கள் போர்க் குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் நிலை உருவாகும் என்று எதிர்பார்த்து, அது நடைபெறாமல் போயினும், இப்படி ஒரு தீர்மானம் அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்டதே பெரிய விடயம்.

இந்தத் தீர்மானம் இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க் குற்றத்தை ஒப்பிப்பதாகத் தெரிகிறது. எது எப்படியோ இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு விவாதம் நடைபெறுகின்றபோது, இலங்கைக்கு எதிரான கருத்துகளும், பல போர்க் குற்ற ஆதாரங்களும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படும் நிலை உள்ளது. இலங்கை அரசுக்கு இது நெருக்கடியைக் கொடுக்கும்.

நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்ட போதும் அது நம்பகமான விசாரணைகள் நடத்தவேண்டும், சர்வதேச தரம் வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்று அமெரிக்கா கூறியது. ஆனால் அது போதியளவில் மீறல்கள், குற்றச்சாட்டுக்கள் குறித்து கவனிக்கத் தவறியுள்ளதாகவும், அதன் அறிக்கைகளை அரசு நடைமுறைப் படுத்தவில்லை என்றும் அமெரிக்கா இப்பொழுது சொல்கிறது.

இந்தக் கட்டத்தில்தான் இதையே சாக்காக வைத்துக் கொண்டு அமெரிக்கா ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவரவுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவை வைத்து அரசு எப்படி இதுவரை தன்னைப் பாதுகாத்ததோ அதையே அரசின் மீது திருப்பி விடப் போகிறது. ஜெனிவாவில் இலங்கை. அரசு ஒழுங்கு செய்திருந்த விசேட ஒன்றுகூடல் நிகழ்வை முக்கியமான பல நாடுகள் புறக்கணிக்க முடிவு செய்துள்ளன என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் இலங்கை அரசின் இறுதி முயற்சியும் பிசுபிசுத்தது.



இதற்கிடையில் இலங்கை விவகாரம் சர்வதேச அரங்கில் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ள தற்போதைய பரபரப்பான சூழ்நிலையில், ஜெனிவா மாநாடு ஆரம்பமாகும் தினத்தன்று இலங்கைக்கு எதிராகவும், ஆதரவாகவும் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடத்தப்படவுள்ளன. இலங்கைக்கு எதிராக புலம்பெயர் தமிழர்களும் ஆதரவாக சிங்களவர்களும் அலை போல் திரண்டு வந்து ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அலுவலகத்துக்கு முன்பாக, ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர். இதன் மூலம் தமிழர்களும், சிங்களவர்களும் சேர்ந்து வாழ முடியாது என்று உலகுக்கு காட்டவுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுமாறு தமிழ் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ள நிலையில், அங்கு வாழும் சிங்கள மக்களுக்கும் சிங்கள ஏற்பாட்டாளர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர். உலகின் முக்கிய உறுப்பினர்கள் ஜெனிவா மாநாட்டில் கலந்துகொள்வதற்கு வரும் தறுவாயில் இலங்கை விவகாரம் தொடர்பில் ஏட்டிக்குப் போட்டியாக ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளமை இலங்கைக்கு ஏதோவொரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இராஜதந்திரிகள் கூறுகின்றனர். இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், சுயாதீன சர்வதேச விசாரணை ஒன்றை நடத்தி தமிழர்களுக்கு நீதியை வழங்குமாறு சர்வதேச சமூகம் இலங்கையை வலியுறுத்த வேண்டும் எனக் கோரியே புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, இலங்கை விவகாரத்தில் சர்வதேசம் மூக்கை நுழைக்கக் கூடாது என்றும், இலங்கைக்கு உலக நாடுகள் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனக்கோரியுமே புலம்பெயர் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர்.

போர்க் குற்றச்சாட்டுப் படங்கள், இலங்கைக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை, புலம்பெயர் தமிழர்கள் தயாரித்து வருகின்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழர்களுக்கு ஆதரவாக, சில மாற்றினத்தவர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை தமிழருக்கு நேர்ந்த அநீதிகளை எழுத்துவடிவில் வடிவமைத்து, துண்டுப் பிரசுர விநியோகமும் இடம்பெறவுள்ளது. புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் செய்யும் இந்தப் போராட்டம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஈழத்தமிழர்கள் போரால் பாதிக்கப்பட்டு சக்தி இல்லாமல் இருக்கிறார்கள். இவர்களால் இப்படிப்பட்ட போராட்டங்களை ஈழத்தில் இனிமேல் மேற்கொள்ள முடியாத சூழலில் உள்ளனர்.

புலம்பெயர் தமிழர்கள்தான் இனிமேல் இப்படிப்பட்ட போராட்டங்களை மேற்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் தமிழர்களுக்கான விடுதலைக்கு சர்வதேசம் உந்து சக்தியாக இருக்கும். இலங்கை அரசு ஜெனிவாவில் தமிழர்களுக்குச் சார்பாகக் கொண்டு வரவுள்ள தீர்மானத்துக்கு எதிராகப் பல நாடுகளுடன் பேசியும் வருகிறது. அரசு இராஜதந்திர மட்டத்திலான காய் நகர்த்தல்களை என்றுமில்லாதவாறு முன்னெடுத்து வருகின்றது. ஜெனிவா மாநாட்டில் இலங்கை விவகாரம் குறித்து எவ்வாறானதொரு வகிபாகத்தை வகிப்பது தொடர்பில் இந்தியா ஆழமாகப் பரிசீலித்து வரும் தற்போதைய பரபரப்பான சூழ்நிலையில், கொழும்பு அரசு தனது உயர்மட்ட இராஜதந்திரிகள் அடங்கிய குழுவொன்றை டில்லிக்கு அனுப்பி வைத்துள்ளது.

லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு அமைச்சர்கள் மட்டக் குழுக்களை இலங்கை அரசு அனுப்பியிருந்தது. எனினும் இந்த முயற்சியில் அவ்வளவாக வெற்றி பெறமுடியவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழர்களுக்குச் சார்பாக ஜெனிவா மாநாட்டில் பிற நாடுகளால் கொண்டுவரப்படும் தீர்மானத்துக்கு எதிராக, இலங்கை அரசு பல நாடுகளுடன் பேசியும் அது கை கூடாத நிலையில் ஜெனிவா மாநாட்டில் தோல்வியைச் சந்திப்பதற்கு அமெரிக்கா விரும்பவில்லை.

அதேபோன்றுதான் சிங்கக் கொடியைக் கையிலெடுத்த நாமும் மண்டியிடத் தயாரில்லை. வெற்றிக்கான எமது போராட்டம் தொடரும் என்று சூளுரைத்துள்ளார் அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா.

இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படும் சீனா, இந்தியா, ரஷ்யா, கியூபா, அல்ஜீரியா ஆகிய நாடுகளுக்கும் அமெரிக்கா தற்போது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றது என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

படுகொலைக் கலாசாரத்தை இலங்கைக்கு கற்பித்த அமெரிக்காவே படுகொலைகள் குறித்து விசாரணை நடத்துமாறு கோருவதை, இலங்கை அரசு இலகுவில் தட்டிக்கழித்து விடமுடியாது என்று நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில், ''தமிழ் மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்தது அரசு. புலிகளை அழிக்கின்றோம் எனக்கூறி 150,000 மக்களைப் படுகொலை செய்தது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு நாம் அரசை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றோம்'' என்றார்.

ஜெனிவா மாநாடு எந்த விதத்தில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருக்கப் போகிறது என்பதை நாளை மறுதினம்தான் பார்க்கமுடியும். எதிர்பார்போம் இந்த மாநாடும் சறுக்குதா என்று. தமிழ் மக்கள் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் புலிகளை ஒதுக்கிய சர்வதேசம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படமாட்டாது என்று நம்பகமாகச் சொல்லமுடியாது.

''தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்காவிடின், அடுத்த சந்ததிக்குப் போராட்டத்தை இழுத்துச்செல்லமாட்டேன்'' என்று பிரபாகரன் கூறியபோதும் அடுத்த சந்ததி போராட்டத்தை மேற்கொள்வதும் தவிர்க்க முடியாததாகிப் போய்விடும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் 8 (சனி)

## (நீதிமான்)

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (30)

8ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 8, 17, 26 திகதிகளில் பிறந்தவர்களாவர். எந்தவொரு மாதமாக இருந்தாலும் மேற்கண்ட திகதிகளில் பிறந்தவர்கள் 8 எனும் சனிக்கிரக ஆதிக்கத்தில் பிறந்தவராவார்கள். நீதி மான்கள். மனித நல்லிணக் கத்திற்கு, தீய செயல்களுக்கு காரணமாகயிருப்பது சனி ஆதிக்கம் தான். எந்தவொரு காரியமானலும் அங்கு தலைமை ஏற்றுக் கொள்ளும் பண் புடைய நபர்கள். பலருக்கு உதவுவதாலும் , துணிச்சல் இருப்பதால் எதையும் முன்னின்று எதிர்ப்பதாலும், பிறரை எதிர்த்துப் போராடுவதாலும் புகழடை வார்கள். மிக நல்ல, கெட்ட காரியங்களைத் துணிந்து செய்து விடுவார்கள். நம்பியவர்களுக்கு நல்லவர் களாகவே இருப்பார்கள். இவர்களை ஏமாற்ற நினைப்பவர்களுக்கு ஏமாற்றுக்காரனாக மாறி விடுவார்கள். எட்டு என்று சொன்னால் பல பேர் பயம் கொள்கின்றனர். உலகம் முழுவதும் பரவி மக்களின் தொடர்புகளுக்கு எளிதான முறையில் ஆக்கிரமித்துள்ள ஆங்கில எழுத்துக் களின் கூட்டுத் தொகை இந்த எட் டாம் வரிசையில் (26) இடம் பெறுகிறது. பல்வேறு சிறப்புத் தன்மைகளைப் பெற்ற போதும் திடீரென்று நிகழும் பேரழிவுச் சம்பவங்க ளுக்குக் காரணமாகின்றது. இது பிருதிவி அம்சமாகும்.

நன்மை, தீமைகளை அலசிப் பார்த்து சமத்து வமான தீர்ப்பு வழங்கும் தன்மை இந்தச் சனிக் கிரகத்திற்கு உண்டு. பாரபட்சமின்றி தண்டிக்கக் கூடிய கிரகமாகும். மற்றக் கிரகம் எவ்வளவு பலமாக இருந்தாலும் அனைத்தையும் அனுசரித்து வாழ்க்கை யில் தீர்ப்புகளை வழங்கிக் கொண்டிருக்கும். விருப்பு வெறுப்பின்றி சமநோக்கில் விசயங்களை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் தன்மையுடையது. சனி ஆதிக் கத்தில் பிறந்த நபர்கள் அதிகமாக விதிவசப்பட்டுத் திணறுவார்கள். சனி ஆதிக்கம் நிரம்பிய சிலர் மேன்மையான கருணை, அன்பு, பாசம், நேசம், நேர்மை, நீதி வேத சாஸ்திர வழி வாழ்தல், கலை ஞானம், கடவுளின் தீர்க்கதரிசிகள் போன்ற உயர்ந்த பண்புடன் வாழ்கின்றார்கள். சனியின் ஆதிக்கம் குறைந்தவர்கள் தடுமாறிய தாழ்மையான குணங் களுடன் சதா போக பாக்கியத்துடன் வாழ்கின்றனர். சனியின் ஆதிக்கமுடைய வயதுகளில் ஊழ்வினைப் பயனை அதிகம் அடைகின்றனர்.



கர்ம நோய்கள் பல உருவாகின்றன. எந்த விதத்தில் பார்த்தாலும் அஞ்சி ஒதுங்க வேண்டிய எண்ணாகவே இருக்கின்றது. மிக்க அதிர்ஷ்டமான நேரங்களில் மிகப் பெரிய பதவிகளைக் கொடுத்து அளவுக் கதிகமான பொறுப்புகளையும் கொடுத்து விடும். சிறிய தவறுக்கும் பெரிய ஆபத்துக்கள் வந்துவிடும்.

மிக்க அதிர்ஷ்டசாலிகளாக வலம் வருபவர்கள் கூட உண்மையில் அதிர்ஷ்டசாலிகள் அல்ல. ஏதாவது ஒரு குறை மனதில் இருந்து கொண்டேயிருக்கும். தமது நிலை மைக்கும், யோக்கியதைக்கும், விருப்பத்திற் கும் ஒத்துப் போகும் சகஜமான வாழ்க்கை அமைவது கடினம். குற்றம் புரிந்த எட்டாம் எண்காரர்கள் தப்பு வதே இல்லை. வாழ்க்கைப் பாதையில் சரியான தண் டனைகளை அடை கின்றனர். இவர்கள் அளவுக்கு மிஞ்சின மனோசக்தியும், தெளிந்த அறிவும், மிகவும் கூர்மையான புத்திசாலித்தனமும் உடையவர்கள். சதா யோசனையில் மிதப்பார்கள். மிகப் பெரிய பிரச்சனை களுக்கு மனம் வருந்துவார்கள். மனதில் உற்சாகமி ருக்காது. எப்போதும் எதையோ பறிகொடுத்தவர்கள் போலவே இருப்பார்கள். பிடிவாத குணத்தால் பெரும் நஷ்டமடைவார்கள். சுயகௌரவம் அதிகம் பார்ப் பார்கள். நீடித்த நன்மைகள் தரும் சம்பவங்கள் வாழ்க் கையில் அதிகம் நடக்காது. பயந்தாங்கொள்ளிகள். இரண்டாம் எண்ணில்தரம் குறைந்தவர்களுக்கு அடுத்தப்படியாக சந்தேத்திலும், பயத்திலும் வாழ்ப் வர்கள் இவர்கள்தான்.

### சனி ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் தொழில்கள்

அளவுக்கதிகமான தன்னம்பிக்கை கொண்ட இவர்கள் கலைத் தொழிலால் பெரும்பணம் ஈட்டு வார்கள். இவர்கள் மற்றவர்களுடன் கூட்டுச் சேரு வதை விட தனித்து நின்று செயலாற்றி வெற்றி பெறு வார்கள். உழைப்பே இவர்களின் உயர்வுக்கு வழிவகுக்கும்.

### சனி ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் அதிர்ஷ்ட நாள்கள்

1,10,19,28 ஆகிய தேதிகள் அதிர்ஷ்ட நாட்களா கும். 28 ஆம் தேதி மட்டும் பரிபூரண அதிர்ஷ்டம் தரு வதில்லை. சந்திரனும், சனியும் ஆக 2 மற்றும் 8 சேர்ந் திருப்பதால் முழுமையான வெற்றிகள் கிடைப்ப தில்லை. எந்தவொரு மாதத்திலும் வரும் 1,10,19, 5,14,23,9,27 தேதிகள் அதிர்ஷ்ட தினங்களாகும். தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் கூட்டு எண் 1 வரும் நாள்களும் அதிர்ஷ்ட தினங்க ளாகும். மேற்கண்ட நாள்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும். நீடித்து நிலைக்கக் கூடிய காரியங் களைக் கூட்டு எண் 1 வரும் நாள்களில் செய்து வர வேண்டும். அதே நேரத்தில் தேதி எண்ணும் சாதகமாக அமைய வேண்டும்.

### அதிர்ஷ்டமான நிறங்கள்

மஞ்சள், பொன்னிறம், நீலம், வெளிர் நீலம் போன்ற வர்ணங்கள் சூரிய ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும்.

### அதிர்ஷ்ட ரத்தினங்கள்

நீலக்கல் இவர்களின் அதிர்ஷ்ட ரத்தினமாகும். இந்திர நீலம் சிறந்தது. வலது கை மோதிர விரலில், தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

(தொடரும்)

---

# தமிழ் மருத்துவம் வளர என்ன செய்யலாம்?

கந்தர் விசுவலிங்கம் கந்தவேள்
நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் துணைத் தலைவர்

தன்னுடனான மனித நாகரிகம், பண் பாடு என்பவற்றுடன் தனிமனிதனையும் அவன் அங்கம் வகிக்கும் சமூகத்தையும் ஆரத் தழுவுகின்ற பாரம்பரிய மருத்துவம், நோயால் நொடிந்து நோயுற்றவேளை தணித்தும் அல்லது நீக்கியும் நாம் வாழ வழி வகுக்கின் றது.

பாரம்பரிய மருத்துவம் என்பது கணிதம், வானவியல், உளவியல், சமூகவியல், வர லாறு, தத்துவம், ஆன்மிகம் என்பவற்றைத் தன்னகத்தே தாங்கி நிற்கின்றது.

சில ''வசூல் ராசாக்கள்'' தம் மூளை சார்ந்த அறிவையும் மனம் சார்ந்த பண்புக ளையும் அடகு வைத்ததனால் நடக்கக் கூடா தவை நடந்தேறிவிட்டன. இந்நிலை நீடிக் காதிருக்க மருத்துவர் எஸ். சிவசண்முகராசா 19.2.2012 உதயனில் எழுதிய 'தமிழ் வைத் திய மேம்பாட்டுக்கு...' என்ற கருத்துக்கள் எம்மவரின் சிந்தனைக்கு விருந்தாகிவிட்டன. அவற்றை ஒட்டிய சில கருத்துக்களை, சித்த மருத்துவம் தழைத் தோங்க ஆக்கபூர்வமாக அமையும் என்பதால் முன்வைக்கிறேன்.

தமது சக்தியையும், வல்லமையையும் நன்கு அறிந்த, திறனாய்வு செய்யவல்ல மருத் துவர்கள், தமக்குத் தெரியாததை தெரியாது என்றே கூறிவருகின்றனர். அவ்வாறு கூறு வதற்கான மனப்பாங்கும் துணிவுமுள்ள வர்களால் நோயாளிக்கு எவ்வகையிலும் தீங்கு விளையாது. விளைவிக்காதவற்றையே நல்கின்றனர்.

பரம்பரை வைத்தியர்களில் பெரும் பாலா னோர் அநுபவ அறிவைக் கொண்டே செய்பவர் களாக உள்ளனர் என எண்ணத் தக்கவாறான கருத்து தவறானது. எனது அறிவுக்கு எட்டிய வரை ஆயுள்வேத மருத்துவ சபையினர், பாரம்பரிய மருத்துவர்களை ( Ayurveda Act, No 31 of 1961 ) பதிவு செய்வதற்கு என நடமுறைகளையும், பாடவிதானத்தையும் வைத்துள்ளனர். சபையினர் பரீட்சார்த்திகள் அவரவர் துறையில் ஆழந்த அறிவும், அநுபவ மும் உள்ளவராக இருத்தல் வேண்டும் என் கின்றனர்.

அகன்று விரிந்த பரப்பளவைக்கொண்ட துறை சார்ந்த அறிவைத் தன்னந் தனியே ( 55 வயதிற்கு மேற்பட்ட ) அண்ணளவாக 10 முதல் 15 நிமிடங்களில் நடந்தேறும் வாய் மூலப் பரீட்சையினுள் மதிப்பிட இயலுமா எனப் பலர் முணுமுணுக்கத் தொடங்கி விட்டனர்.

தன்னந் தனியே வாய்மூலப் பரீட்சைக்குத் தோற்றி பதிவினைப் பெறுவதற்கான வயது விடயத்தில் சட்ட விதி ஒன்றாக அமைய மருத்துவ சபை எழுதாத விதியாக வயது எல்லையை 55 என நிர்ணயத்துள்ளது. மேல திக மாற்றங்கள் தன்னந்தனியனான வாய் மூலப் பரீட்சைக்கு முகம் கொடுப்பவர்களுக்கு அதி அத்தியாவசியம் எனின் மேற்கொள்ளல் விரும் பத்தக்கது.

பாரம்பரிய மருத்துவர்களுக்கான கருத் தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் அவசிய மானவை. அனைவரும் பங்குபற்ற வேண்டிய வர்களே. இந்தவகையானவற்றில் கலந்து கொள்வதில் ஆர்வம் காட்டாதவர்கள் அல்லது கலந்து கொள்[illegible] வேண்டியவர்களே.

அரச அலகினர் கருத்தரங்குகள் பயிற்சிப் பட்டறைகள் போன்றவை அந்தந்த மாவட் டங்களிலேயே இடம்பெற ஆவன புரிய வேண்டும். பாரம்பரிய மருத்துவர்களில் பலர் 55 வயதிற்கு மேற்பட்டவர்கள். அவ்வாறா னவர்களுடன் இணைந்து அவர்களது மருத்துவமனையில் இன்னொரு மருத்துவர் சேவை ஆற்றும் வாய்ப்பு அதிக அளவில் இல்லை. இதனால் தூர இடங்களுக்குச் சென்று அல்லது மாவட்டத்தில் இடம் பெறும் வதிவிட பயிற்சிகளில் கலந்து கொள்வதே சிக்கலானதும், சிரமமானதாகவும் அமையும். நோயாளிகளும் பாதிப்புறுவர்.

பாரம்பரிய விசேட கிளை (Specia lized branch) என்பதே நிபுணத்துவத்தைச் (Specia list) சுட்டி நிற்கவில்லை. இந்த விளக்கத்தை பாரம்பரிய மருத்துவர்களுக்கான கருத்தரங் கில் சுதேச மருத்துவ சபையின் பதிவாளர் வழங்கியுள்ளார்.

மிக விரைவிலே நாடாளுமன்றத்திலே சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட வுள்ள மூன்று சட்ட மூலங்களில் ஒன்றாக அமையவிருப்பது, தேசிய மருத்துவ ஔட தக் கொள்கையை உள்ளடக்கிய சட்டமூல மாகும். நீண்டகாலம் கிடப்பிலிருந்ததைத் தூசி தட்டி வெளிவரக் காரணமாக இருந்த பலருடன் நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்கத்தினரும் இணைகின்றனர். நோ.உ.ம. இ[illegible] கருதி ஒரு வழக்கை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

தேசிய ஔடத மருந்துச் சட்டம் எவ்வாறு அலோபதியிலே உருவாகின்றதோ அவ்வா றான ஒன்றை உருவாக்க, சித்த மருத்துவ வல்லுநர்கள் முனைய வேண்டும். அந்த நாள் எந்தநாளோ ?

சித்த மருத்துவம் மெல்ல மெல்ல சாகின் றது என்போருக்குத் துணைபோகிறவர்களில் அதிக ஆபத்தை விளைவிப்பவர்கள் வினைத் திறன் மிக்க சில சித்த மருத்துவராக மிளிர்ந்து கொண்டு துறைசாரா அலோபதி மருந்துகளை வழங்குபவர்களே.

2.இவ்வாறானவர்களுக்கு சில அரச அலகினர் துணைபோகிறார்கள்.

துறைசார் தவறான நடத்தையில் (Professional Misconduct) ஈடுபடுபவர் கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

உயிர்காக்கும் உன்னதமான பணியிலே ஈடுபடுபவர்கள் தாம் கற்றறிந்தவற்றையும் அறிவியல் பூர்வமானவையா என ஆராயந்து அறிந்து (Duty to act fairly Duty to act Legally) ஆழ்மனதிலே ஆழப்பதித்திட்டால் உன்னதமான பல மருத்துவர்களாகி விடலாம்.

அவ்வாறனவர்கள் நோயாளியுடன் மனந்திறந்து கலந்து பேசி நோயாளிகளது நம்பிக்கையை வென்றெடுத்தமையால் மருத்துவத்துறை சார்ந்த இரகசியத் தகவல் களை எவ்வித பயமோ அச்சமோ இன்றித் தெரிவிக்கின்றனர். மருத்துவர்களும் இயலாது என்று கூறுவதுடன் நின்றுவிடாது மேலதிக சிகிச்சைக்குப் பொருத்தமான மருத்துவர் களையும் சிபாரிசு செய்கின்றனர். அதனால் நோயாளிகள் காலதாமதமின்றி அதிக செலவிற்கு உள்ளாகாது பயனடைகின்றனர்.

தமிழ் மருத்துவத்திலும், தேசிய ஔடத மருந்துகளுக்கான (ஒழுங்கமைப்புக்கான ) சட்டம் ஒன்று உருவாகின இன்று நிலவு கின்ற அலோபதி மருந்துப்பாவனை பற்றிய வீணான சந்தேகங்கள் முற்று முழுதும் நீங்கிவிடும். தமிழ் மருத்துவம் தங்கு தடையின்றி தழைத் தோங்கும்.

முன் நிற்போமா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாஜியின் அறிவாற்றலும் சாதுரிய செயலும்

கிருஷ்ண தேவராஜரின் அமைச்சராக இருந்த அப்பாஜியின் அறிவாற்றலும், சாதுரிய செயல் முறைகளும் விஜயநகரம் முழுவதும் பரவியது.

டில்லி பாதுஷா அப்பாஜியின் புகழைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவரின் திறன்களைச் சோதனை மூலம் தெரிந்து கொள்ளத் தீர்மானித்தார்.

இதற்கமைவாக ஓர் ஓலையை எழுதித் தூதுவரிடம் கொடுத்தனுப்பினார். "கிருஷ்ண தேவராஜன் அவர்களே! உங்களுடைய நட்பின் சின்னமாக, உமது நாட்டிலிருந்து குடப்பூசணிக்காயும், நடைக் கீரையும், குழிக்கிணறும் அனுப்ப வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்" என அந்த ஓலையில் எழுதப்பட்டிருந்தது.

இந்த ஓலையைப் படித்த கிருஷ்ண தேவராஜருக்கு ஒன்றுமே புரியவில்லை.

"குடத்தினுள் எங்காவது பூசணிக்காய் காய்க்குமா? நடைக்கீரை என்றால் என்ன அர்த்தம்? கீரை நடக்குமா? குழிக்குள் கிணறு அமையுமா? ஏன் இவ்வாறு டில்லி பாதுஷா எழுதியிருக்கிறார் என்று அப்பாஜியிடம் கிருஷ்ண தேவராஜர் கேட்டார்.

அந்த ஓலையைப் பல தடவை படித்துப் பார்த்த அப்பாஜி, கொஞ்ச நேரம் யோசித்தான். பிறகு கிருஷ்ண தேவராஜரைப் பார்த்து "மன்னரே! கவலைப்பட வேண்டாம் பாதுஷா கேட்ட பொருள்களை அனுப்பி வைப்போம்" என்று கூறினான்.

அப்பாஜி பணியாளர்களை அழைத்தான். யார் வீட்டிலாவது பூசணிக் கொடி வளர்ந்திருந்தால், அதன் பிஞ்சைக் குடத்தின் உள்ளே விட்டு, அப்படியே அதனை வளரவிடுமாறு செய்யச் சொன்னான். பின்னர் ஒரு மொட்டை வண்டி மீது மண்ணைப் பாத்தி கட்டி, கீரையை விதைத்துப் பயிராக்கும்படி செய்தான். கீரை பயிரிடப்பட்டிருந்த வண்டியில், மாட்டைப் பூட்டச் சொன்னான். ஒரு சிறு பாத்திரத்தில் மண்ணைக் கொட்டிக் குவித்துக் குழியாக்கி அதனுள் கொஞ்சம் நீரை விட்டான்.



பணியாளனை அழைத்து "டில்லி பாதுஷா கேட்ட குடப் பூசணிக்காய் இந்த குடத்தினுள் இருக்கிறது. இந்த வண்டியில் பயிரிடப்பட்டிருக்கும் கீரை வண்டி நகரும் போது சேர்ந்து நகரும் அதுவே நடைக்கீரை. இந்தக் குழியினுள் நீர் இருக்கிறது. இது தான் குழிக்கிணறு. இந்தக் கிணற்றை டில்லியில் உள்ள பெரிய கிணற்றின் உள்ளே வைத்து விட்டால், தொடர்ந்து நீர் ஊற்றெடுக்கத் தொடங்கிவிடும். இந்தத் தகவல்களை டில்லி பாதுஷாவிடம் கூறி ஒப்படையுங்கள் என்று அனுப்பி வைத்தான். இதனைக் கண்ட பாதுஷா மிகவும் மகிழ்ச்சி அடைந்து, அப்பாஜியின் மதி நுட்பத்தை நினைத்துத், தனக்குள்ளே வியந்து கொண்டார்.

## தெரிந்து கொள்ளுங்கள்

இந்து சமுத்திரத்தின் முத்து - இலங்கை

இருண்ட கண்டம் - ஆபிரிக்கா

இந்தியாவின் நறுமணத் தோட்டம் - கேரளம்

அரண்மனை நகரம் - கல்கத்தா

அழியாத நகரம் - உரோமாபுரி

உலகின் கூரை - திபெத்

உலகின் சர்க்கரைக் கிண்ணம் - கியூபா

சூரியன் உதிக்கும் நாடு - யப்பான்

சூரியன் மறையும் நாடு - இங்கிலாந்து

சீனாவின் துயரம் - குவாங்கோ நதி

ஏழு குன்று நகரம் - ரோம்

கே.சுபதாரணி
டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி.

## ஆந்தை

ஆந்தைகள் பெரும்பாலும் சிறிய பாலூட்டிகள், பூச்சிகள், மற்றும் ஏனைய பறவைகளை வேட்டையாடும்.

ஆந்தைகள் முன்நோக்கும் பெரிய கண்களையும், காதுகளையும், சொண்டையும், மற்றும் facial disk என அழைக்கப்படும், தெளிவாகத் தெரியும், கண்களைச் சுற்றி வட்டமாக அமைந்த இறகுகளையும் கொண்டுள்ளன.

ஆந்தைகள் நீண்டதூரப் பார்வைச் சக்தியைக் கொண்டிருப்பினும், அவற்றின் கண்கள், அவற்றுக்குரிய குழிகளில் நிலையாகப் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் பார்வைத் திசையை மாற்றுவதற்குத் தலை முழுவதையும் திருப்பவேண்டியுள்ளது. இது தனது தலையை இரு திசைகளிலும் 270 பாகைகள் வரை திருப்ப வல்லது.

ஆந்தைகள் தூரப்பார்வை கொண்டவை. அவற்றின் கண்களால் அங்குலங்கள் தூரத்திலுள்ளவற்றைத் தெளிவாகப் பார்க்கமுடியும். அவற்றின் பார்வை, விசேடமாக மங்கலான வெளிச்சத்தில் மிகவும் சிறப்பானது.

பல ஆந்தைகள் முழு இருட்டிலும் கூட, ஒலியை அவதானித்து வேட்டையாடக் கூடியவை.

ஆந்தைகளின் வலுவான நகங்களும், கூரிய சொண்டும், உண்பதற்குமுன் அவற்றின் இரைகளைத் துண்டுதுண்டாகக் கிழிப்பதற்கு உதவுகின்றன. சத்தத்தை அமுக்கும் தன்மையுள்ள அவற்றின் சிறகுகளும், மங்கலான இறகுகளும், அவை சத்தமின்றியும், காணப்படாமலும் பறப்பதற்கு உதவுகின்றன

ஆந்தை முட்டைகள் கிட்டத்தட்டக் கோளவடிவம் கொண்டவை. ஆந்தைகள் அவற்றின் வகையைப் பொறுத்து, ஒரு சிலவற்றிலிருந்து பன்னிரண்டு வரையிலான முட்டைகளை இடுகின்றன. இவற்றின் கூடுகள் செம்மையற்றவை, மரங்கள், நிலத்தின் கீழான வளைகள், குகைகள் போன்ற இடங்களில் காணப்படும்.

## மூன்றால் முன்னேற

★ தவிர்க்க வேண்டிய மூன்று -
புகைத்தல், குடித்தல், சூதாடல்

★ அடக்க வேண்டிய மூன்று -
நாக்கு, கோபம், ஆசை

★ கவனிக்க வேண்டிய மூன்று -
பேச்சு, நடைமுறை, செயல்

★ ஒழிக்க வேண்டிய மூன்று -
திருட்டு, பொய், சோம்பல்

★ ஆதரிக்க வேண்டிய மூன்று -
வாக்குறுதி, நட்பு, அன்பு

★ மதிக்க வேண்டிய மூன்று -
முதியோர், மார்க்கம், சட்டம்

★ போற்ற வேண்டிய மூன்று -
தைரியம், மனமகிழ்ச்சி, திருப்தி

## இரண்டின் அழகு

வருவதும் போவதும் இரண்டு - இன்பம், துன்பம்

வந்தால் போகாதவை இரண்டு - புகழ், பழி

போனால் வராதவை இரண்டு - மானம், உயிர்

தானாக வருபவை இரண்டு - இளமை, முதுமை

நம்முடன் வருபவை இரண்டு - புண்ணியம், பாவம்

அடக்க முடியாதவை இரண்டு - ஆசை, துக்கம்

தவிர்க்க முடியாதவை இரண்டு - பசி, தாகம்

அழிவைத் தருபவை இரண்டு - பொறாமை, கோபம்

எல்லோருக்குச் சமமானவை இரண்டு - பிறப்பு, இறப்பு

மிதிலா சிவநாதன்
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.



வவுனியா புளியங்குளம் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது இடைவேளை நிகழ்வில் இசை நடனம் நடத்திய மாணவர்கள்.



கோப்பாய் தெற்கு கந்தவேல் தமிழ்க் கலவன் பாடசாலையில் கால்கோள் விழாவில் புதிதாக இணைந்து கொண்ட மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு என்பது அனைத்திலும் உண்டு!



*வாய்மை*

உண்மையேயுன்தை
அறிவு உறுதுணையாய்
கல்லாதோர்கும் வரவல்லது
எல்லோருக்கும் பயனுள்ளது
பஞ்சபூதங்களும் குறைவில்லாது
பயன்களைத் தருவது இதனால்!

*குறியீடு*

படிமத்தின் வாயிலாகப்
பழக்கப்படுத்திக் கொண்டது
(இசைவாக்கம்) பல்வேறு
அறிவியல் வளர்ச்சியின் உச்சத்திலும்
கருத்தில் பலவாகவும்
ஒன்றாகவும் பொருள் தருவது!

*வடிவமைப்பு*

வளங்கும் மரபுகளில்
வசப்படுத்திக் கொள்வது
(யாப்பு) விளங்கும் புதுமைகளுடன்
புதிது புதிதாய் தருவது கூட
புதிய கருத்துக்களும்!





*கற்பனை*

பொய்யல்ல உவமானம்
மிகையுண்டு ஆனாலும்
திறனின் ஒரு வடிவமும் கூட
தெய்வ அருளும் கூடி வர
கலைஞன் மனக் கண்முன்
தோன்றும் பிம்பம்!

**ஜெயபாலன்,**
**தொட்டிலடி.**



# இமயமலைச் சாரலில் காணப்படுகின்ற செந்தூர மரம்

■ தர்மா


உலகெங்கும் தென்படுகின்ற சில உறுதியான மரங்களுக்குள் ஒக் (OAK) மரமும் ஒன்றாகும். இதனைத் தமிழில் செந்தூர மரம் என்று அழைப்பார்கள்.

இந்த விருட்சமானது கடும்புயல், மழை, பனி என்பவற்றைத் தாங்கி வாழும் இயல்புடையது. இம்மரம் ஐம்பது மீற்றர் உயரத்துக்கும் மேலும் வளரும் தன்மையுடையது. அதே வேளை சில விருட்சங்கள் உயரமாக வளருவதில்லை அவை புதர்போலத் தோற்றமளிக்கும்.

ஒக் மரம் நீண்டகாலம் வளரும் தன்மை கொண்டது. விதையிலிருந்து முளைத்து ஒரு மரமாக வளர சுமார் நூறு ஆண்டுகள் கூடச் செல்லலாம். முற்றாக வளர்ந்த பிறகு இது ஆயிரம் வருடங்களுக்கு மேல் உயிர் வாழக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாக தாவரவியலாளர்(Biologist) கூறுகின்றனர். செந்தூரமரத்தில் செய்யப்பட்ட பொருள்கள் நீண்ட நாள் உழைக்கும். ஐரோப்பிய நாடுகளின் (Europian Country) வரலாற்றை புரட்டிப் பார்த்தோமானால் பழங் காலத்தில் ஒக் மரத்தால் கப்பல் கட்டினார்களாம் என்பது புலனாகின்றது. இன்றைய கால கட்டத்திலும் படகுகள் (Boats) மரத்தளபாடங்கள் (Furnitures) தயாரிப்பதற்கும் இந்த மரம் உதவுகின்றது.

சில வகை மரங்களில் ஆ ண்டு முழுவதும் இலைகள் தழைத்து இருக்கும். குளிர் காலத்தில் பெரும்பாலான செந்தூர மரங்களின் இலைகள் உதிர்ந்து விடும். வேனிற்காலம் வந்ததும் மறுபடியும் இலைகள் துளிர்க்க ஆரம்பிக்கும் இலைகள் தோன்றுவதற்கு முன்பே பூக்கள் அரும்பி மலர்ந்து விடுகின்றன.

பூக்களிலிருந்து ஒற்றை விதையுடைய காய்கள் காய்க்கும் இந்த விதைகளைச் சிலர் அவித்து உண்பார்கள். இவற்றை மாவாகவும் இடித்து ரொட்டி தயாரித்து புசிப்பதுமுண்டு. இந்த விதைகள் பன்றிக்கு (Pork) நல்ல தீனியாகிறது. செந்தூர மரப்பட்டை தோல் பதனிடவும், சில அருமருந்துகள் தயாரிக்கவும் பயன்படுகின்றது . எமது அண்டை நாடான இந்தியாவில் இமயமலைச் சாரலிலும், நீலகிரியிலும் ஒக் மரங்கள் அதிகம் காணப்படுகின்றன.



# அவனருள் இன்றி அவனடி தாழ்தல் அரிது

■ - மணி

பத்திரிநாதரின் தரிசனத்தை நிறைவு செய்த நாம் அங்கிருந்து புறப்பட்டு கண்ணபகவான் அவதரித்த மதுராவை அடைந்தோம். இவ்விடம் வட இந்தியாவில் இருப்பதால் வடமதுரை என்றும் அழைக்கப்படுகின்றது. இது டில்லியில் இருந்து அண்ணளவாக 148 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நாம் இங்கு மதுரா, கோகுலம், பிருந்தாவனம் ஆகிய இடங்களைத் தரிசித்தோம்.

கண்ணபகவான் ஆவணி மாத வளர்பிறை அஷ்டமி தினத்தில் மதுராவில் அவதரித்தார். நள்ளிரவில் வாசுதேவர் தேவகி தம்பதிகளுக்கு முன்தோன்றிய இத்தெய்வக் குழந்தையை வாசுதேவர் கூடையொன்றில் வைத்து தலைமேல் சுமந்துகோகுலத்திற்கு எடுத்துசென்ற காட்சியை கிருஷ்ணஜன்மபூமி என்னும் இடத்திலுள்ள சித்திரங்கள் மூலம் தரிசித்தோம்.

கோகுலத்துக்கு யமுனை நதியைக் கடந்து செல்ல வேண்டும். ஆனால் யமுனை பெருக்கெடுத்து கரைபுரண்டு ஓடியது. இதனால் ஏற்பட்ட பயம் காரணமாக பின்வாங்கிய வாசுதேவருக்கு யமுனையை பிரார்த்தித்துக் கொள்ளும்படி அசரீரி வாக்கு கிடைத்ததாம். அதன் பிரகாரம் அவர் பிரார்த்தனை செய்து ஆற்றைக் கடந்து கோகுலத்தை அடைந்தாராம். ஆற்றினூடாகச் செல்லும் போது யமுனை நதியானது கண்ண பரமாத்மாவின் பாதங்களை தொட்டுச் சென்ற தாம். இதற்காக வாசுதேவர் பயம் அடைந்ததாகவும் பகவானின் திருவடிகளைத் தொட்டு வணங்க வேண்டுமென்ற விருப்பத்தை நிறைவேற்றியதாக யமுனாதேவி கூறியதாகவும் இதன் பின்னர் ஆற்றுப்பெருக்கு குறைந்ததாகவும் கூறினார்கள்.

ஆற்றங் கரையில் வாசுதேவர் கரைசேர்ந்த இடத்தை ஞாபகமூட்டுவதற்காக மண்டபம் ஒன்று காணப்படுகிறது. இங்கு மாலை வேளைகளில் யமுனாதேவிக்கு ஆராத்தி காட்டும் நிகழ்வு நாள் தோறும் நடைபெறுகின்றதாம்.

கோகுலத்தில் கண்ணபகவான் விளையாடிய இடங்கள், ஆடிய தொட்டில் ஆகியவற்றையும் தரிசித்தோம் கண்ணன் தொட்டிலில் ஆடிய இடத்தில் வெண்ணெய் பிரசாதமாகக் கொடுக்கின்றார்கள் . அங்கே யாரும் அட்டாங்க நமஸ்காரமோ, பஞ்சாங்க நமஸ்காரமோ செய்வதற்கு அனுமதிக்கமாட்டார்கள். அத்துடன் எவரும் எழுந்து நின்று தரிசிக்கவும் கூடாது, பணம் போடுவதற்காக காணிக்கை உண்டியல் பெட்டிகள் எதுவும் காணப்படவில்லை.

பிருந்தாவனத்தில் கண்ணபகவானைத் தரிசிப்பதற்கு இரண்டொரு நிமிடங்கள் மட்டுமே அனுமதி வழங்குகின்றார்கள். அதற்கு மேல் அவரைத் தரிசித்தால் திருஷ்டி விழுந்து விடும் என்று கூறுகின்றார்கள். இதற்கான காரணத்தை வினாவிய போது கண்ணபகவான் அவதரித்ததை அறிந்து அவரைப் பார்வையிட்ட சிவபெருமான் தாடியுடன் கூடிய முனிவர் வேடத்தில் வந்ததாகவும் இதனையறிந்த யசோதை பயமாக இருக்கின்றதெனவும் ஒரு நிமிடத்துக்கு மேல் குழந்தையை உற்றுப் பார்க்க வேண்டாம் என்று கூறியதாகவும் அதன் பிரகாரமே சிவபிரான் பார்வையிட்டதாகவும் இதுவே இன்று கடைப் பிடிக்கப்படுவதாகவும் கூறினார்கள்.

நந்தகோபனின் வீட்டில் நந்தகோபன், யசோதை, பலராமன், கிருஷ்ணா, ராதை ஆகியோரின் திருவுருவங்களைத் தரிசித்து வணங்கினோம். மற்றும் கோபிகைகளின் வீட்டில் தயிர், வெண்ணைய் திருடிய காட்சிகள், கண்ணபகவானைக் கொலைசெய்ய கம்சனால் அனுப்பிவைக்கப்பட்ட பூதனையை அழித்த காட்சி, வெண்ணைய் திருடிய குற்றத்துக்காக யசோதை கண்ணபகவானை உரலுடன் கட்டுவதற்காக கயிற்றை எடுத்தபோது அந்தக் கயிறானது இரண்டு அங்குலம் போதாமல் இருந்த நிலை (இரண்டு அங்குலங்கள் பற்றாக்குறையாக இருந்தமைக்கு நான் எனது என்ற இரண்டு மமதைகளே காரணமானது என்று கூறுகின்றார்கள்). கண்ண பகவானின் வயிற்றைச் சுற்றிக் கயிற்றால் கட்டியதால் தாமோதரன் என்ற பெயர் ஏற்பட்ட வரலாறு.( தாம-கயிறு, உதர-வயிறு) கண்ணன் மண்ணை உண்டு தனது வாயினுள் அகில உலகத்தையும் காட்டிய வரலாறு, ஆகிய காட்சிகளைக் கொண்ட ஓவியங்களையும் தரிசித்தோம்.




பிருந்தாவனத்திற்கு கண்ணபகவான் தனது ஐந்தாவது வயதில் வந்துவிட்டார். பிருந்தாவனம் என்றால் பக்தி வனம் எனப் பொருள் தருகின்றது. ஆகவே உங்கள் குழந்தைகளுக்கும் ஐந்து வயது ஆனதும் பக்தியைப் பற்றிச் சொல்லிக் கொடுக்குமாறு அங்குள்ள பெரியவர் ஒருவர் எமக்கு விளக்கம் தந்தார். இங்கு கிருஷ்ணபகவான் சந்நிதி, ராதாராணி சந்நிதி ஆகியவற்றையும் தரிசித்து வணங்கினோம்.

கார்த்திகை மாதத்தில் இந்திரனுக்கு நன்றி செலுத்துவதற்காக இடம்பெறும் இந்திரவிழாவை நிறுத்திய கண்ணபகவானிடம் இந்திரன்



மன்னிப்பு கேட்டு பால்
செய்த இடமான சுர
என்ற இடத்தையும் த
யமுனை நீரைப்பரு
இறப்பதற்கு காரணமா
என்ற கொடிய நச்சுப் பாம்பின் மீது
அப்பாம்பைக் கடலுக்கு அனு
காளிமடு என்ற இடத்தையும்
எமக்குக் காட்டினார்

பகவானைப் பூசித்தாலும்
செய்தாலும், அவனை நினைத்த
பேறு கிடைக்கும் என்பதற்கு கம்ச
உதாரணமாகக் கூறினார்கள்.

கண்ணன் ஜன்மபூமி மண், மற்
களைச் சேகரித்ததுடன் அக்ராவை
பயணத்தை மேற்கொண்டோம்.

அங்கு தாஜ்மஹால், அக்ப
ஆகியவற்றைப் பார்வையிட்டது
நோக்கி பிரயாணத்தை மேற்கொ
இலங்கைத் தூதுவராலய நிர்வ
இயங்கும் பௌத்த யாத்திரிக
தங்கினோம் .

*(யாத்திரை தொ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இன்றும் மறக்கமுடியாத
# நீராவி என்ஜின்

■ அருணா

மிலேனியம் ஆண்டாக மிளிருகின்ற இன்றைய கால கட்டத்தில் பல்வேறு ரகத்திலான வாகனங்கள் ( MODE OF VEHICLES) போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வருகின்றன என்பதை நாம் அறிவோம். இதுல பொதுவாக அனைத்து ரகங்களும் நெடுஞ்சாலையில் பயணிக்கின்றன. ரயில் தண்டவாளத்தால் (RAILWAY TRACK) குறுந்தூர மற்றும் நெடுந்தூர புகையிரதங்கள் வடக்கு ,கிழக்கு ,தெற்கு மற்றும் மத்திய மலைநாடுகளுக்கான சேவைகளை ஆற்றி வருகின்றன.

சுமார் ஆறு தசாப்த காலங்களுக்கு முன்னர் ரயில் பெட்டிகளை இழுத்துச் செல்வதற்கு நீராவியினால் இயங்கவல்ல ரயில் என்ஜின்களே (LOCU MOTIVES) பயன்படுத்தப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக நீராவியை உற்பத்தி செய்யத் தேவைப்படுகின்ற நிலக்கரியின் (COAL) கொள்முதல் விலை உலக சந்தையில் அதிகரித்தமையினால் நீராவி என்ஜின் பாவனை படிப்படியாகக் குறைந்து இறுதியில் முற்றாகவே நிறுத்தப்பட்டது. அதற்கு மாற்றீடாக அதிக தொழில் நுட்பத்துடன் கூடிய ரயில் என்ஜின்கள் இந்தியா, சீனா, கனடா, சுவீடன் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அவையாவற்றிற்கும் பிரதான எரிபொருளாக டீசல் (DIESEL) உபயோகிக்கப்பட்டது.


ஏலவே எமது மூதாதையரின் போக்குவரத்துக்கு உறுதுணைபுரிந்த நீராவி என்ஜின் தோன்றிய வரலாறு அதில் காணப்படும் இயக்க முறைமைகள், எரிபொருள் பாவனை என்பவற்றை விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.

புகை போக்கி வழியாக வெளியேறுகின்றது. இது பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாகக் காட்சியளிக்கும்.

புகையை வெளியிடும் நீராவி என்ஜினின் பாவனை மறைந்துவிட்ட நிலையிலும் ரயில்வே பணியாளர் சேவையாற்றும் பகுதியை தமிழில் புகையிரதத்திணைக்களம் என்றே அழைக்கின்றனர்.

நீராவி எஞ்சின் சேவையிலீடுபட்டிருந்த அக்கால கட்டத்தில் வெண்ணிற ஆடை அணிந்து ரயில் பயணம் மேற்கொள்வோர் எஞ்சினுக்கு அருகிலுள்ள பெட்டியில் பயணிப்பதைத் தவிர்த்துக் கொள்வார்கள். இதனைக் கடைப்பிடிக் காதவர்களின் வெள்ளை நிற ஆடையில் மிகச் சிறிய பருமனுள்ள கரித்துகள்கள் படிந்திருப்பதையும் அவதானிக்கலாம். கொதிகலனைச் சூடாக்குவதற்கு நிலக்கரி பயன்படுத்துவதே இதற்கு பிரதான காரணியாக அமைந்து விடு கின்றது. அதிவெப்பம் ஊட்டப்பட்ட அழுத்தம் மிக்க நீராவியானது எஞ்சின் சக்கரங் களுடன் பொருத்தப்பட்டுள்ள பிஸ்டனை (PISTON) முன்னும் பின்னும் இயங்குவதற்கு (MOVING TO AND FRO) உறுதுணை புரிகின்றது. எஞ்சினைச் செலுத்தவோ பின்புற மாக இயங்க வைப்பதற்கோ நெம்புகோல் உதவுகின்றது.

புகையிரத எஞ்சினைச் செலுத்துபவர் ரயில் தண்டவாளத்தின் தன்மை வழியிலுள்ள பாலங்களின் நிலைமை பாதையிலுள்ள உயர்வு தாழ்வு, பயணிக்க வேண்டிய தூரம், தரித்து நிற்க வேண்டிய புகையிரத நிலையங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு மிகவும் நிதானமாகச் செயலாற்றுவார். ரயில் பெட்டிகளை ஒரு பாதையிலிருந்து இன்னொரு பாதைக்கு மாற்றும் வேளை தண்டவாளத்துக்கு மருங்கில் பரிணமித் துள்ள சமிக்ஞைகள் சரியாக இயங்குகின்றனவா? என்பதிலும் கவனமாகவிருப்பார். அத்துடன் ரயில் எஞ்சின் புகையிரத நிலையத்தை அண்மித்ததும் கை காட்டி (SINGLE POST) பயணத்தைத் தொடர அனுமதிக்கின்றதா? என்பதற்காக சில சமயம் காத்திருக்க வேண்டிய நிலையும் உருவாகலாம். இச் சந்தர்ப்பத்தில் தான் எதிர்திசையில் பயணிக்கும் தொடருந்து ரயில் நிலையத்தில் தரித்து நின்று கொண்டிருக்கலாம் அல்லது பிரயாணிகளை எற்றியிருக்கும் பணியில் ஈடுபட்டிருக்கலாம். அதேவேளை சுமார் 15 நிமிட நேரத்துக்குள் நிலைமை சரியானதும் புகையிரத நிலைய அதிபர் (STATION MASTER) காத்து நிற்கும் ரயிலுக்கு உரிய சமிக்ஞையை வழங்கி அதனையும் நிலையத்துக்குள் பிரவேசிக்க வழி சமைப்பார்.



நீராவி ரயில் என்ஜினை முதல் முதல் கண்டுபிடித்த பெருமை ரிச்சார்ட் டிரெவிக் என்ற ஆங்கிலேயரையே சாரும். ஆயிரத்து எண்ணூற்று நான்காம் ஆண்டு வேல்ஸ் மாகாணத்தில் மக்கள் அதிகம் வாழுகின்ற பகுதியில் இயக்கிக் காட்டினார். இவரைத் தொடர்ந்து ஆயிரத்து எண்ணூற்று இருபத்தொன்பதில் ஜோர்ஜ் ஸ்டீபன்சன் என்ற லண்டன் பிரஜை தொடர்ந்து இயங்கக்கூடிய நீராவி ரயில் என்ஜினை வடிவமைத்து தண்டவாளத்தில் ஓட்டியும் காண்பித்தார். இந்த என்ஜினுக்கு ரொக்கெட் என்று நாமமிட்டு அழைத்தார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்குவோமானால் பலமடங்கு பளுவுள்ளதாகவும் திறமையுள்ளதாகவும், ஆற்றல்மிக்கதாகவும், சிக்கனமானதாகவும் சீர்திருத்திய நிலையிலும் கடந்த நூற்றாண்டில் நீராவி என்ஜின்கள் பொறியியலாளர்களால் உருவாக்கப்பட்டன என்பதையும் அறிய முடிகின்றது.

இனி நீராவி ரயில் என்ஜினின் இயக்கம் பற்றிக் கூறுவதானால் நீராவி என்ஜினில் உள்ள நீர்க்குழாய்களைச் சுற்றி தீக் குழாய்கள் உள்ளன. இக் குழாயிலுள்ள நீர் வெப்பத்தின் காரணமாக நீராவியாகும். கொதிகலனில் உற்பத்தியாகும் நீராவியானாது அதி வெப்ப மூட்டி ஊடாகச் (SUPERHEATER) செலுத்தப்படுகின்றது. அதே வேளை அழுத்தத்தை மிகுதியாக்கி சிக்கனப் படுத்தும் பணியும் நடைபெறுகின்றது. நீராவி சிலிண்டரில் ஏற்படுகின்ற புகையானது

ரயில் என்ஜின் பிரயாணிகள் பயணிக்கும் பெட்டிகளை மட்டுமல்லாமல் எரிபொருளைக் கொண்டு செல்லும் 'பவுசர்' வேகன்களையும் (WAGGONS) இழுத்துச் செல்வதையும் காணலாம். அதேவேளை பிரிட்டானியா என்னும் நீராவி ரயில் என்ஜின் சரக்கு வண்டி களை இலகுவாக இழுத்துச் செல்லும்.

ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பதாம் ஆண்டு முதன் முதலில் எடின்பரோவுக்கும் கிளாஸ்கோவுக்கும் இடையே சேவையில் ஈடுபட்டது. இந்தியாவில் தொலை தூர ரயில்கள் மையமாக்கப்பட்டுள்ளன. நீங்காத நினைவலைகளுடன் கூடிய நீராவி ரயில் என்ஜின் மூதாதையர் மனதில் ஓர் உன்னத இடத்தைப் பிடித்துள்ளது என்பது வெள்ளிடை மலை. ✱



# ஸ்நான முறைமைகள்

■ அருணா தருமலிங்கம், வந்தாறுமூலை.

தலையிலும் உடலின் ஏனைய பாகங்களுக்கும் சுத்தமான நல்லெண்ணெய் தேய்ப்பது உத்தமம். எண்ணெய் தடவிய மனித தோலின் மேல் வெளிச்சம் படுகின்றபோது விற்றமின் டீ (VITAMIN - D) சத்து உடலினுள் சேருகின்றது. இதனால் உடலின் மேற்தோல் மினுமினுப்பாகக் காட்சி தருகின்றது. இதனால் உடம்பின் உஷ்ண நிலையும் சம நிலைக்கு வருகின்றது.

பண்டைக்கால மக்கள் தூய்மையைப் பேணுவதற்காகவும், மத சம்பந்தமான காரியங்களில் ஈடுபடுவதற்குமாகவே குளிக்க வேண்டும் என்று உறுதியாக இருந்தனர்.

ஆதிகாலத்தில் தமிழர்களின் நாகரிகம் ஆற்றங்கரையில் தோன்றியது ஆகும். மொகஞ்சதாரோ, சிந்து சமவெளி நாகரிகம் என்பன ஆற்றங்கரையிலேயே தோன்றியவை ஆகும்.

உடலில் வெப்பம் அதிகரிப்பதைப் கட்டுப்படுத்தவே குளியல் முறைமைகள் தோற்றுவிக்கப்பட்டன என்பது நிதர்சனமாகும்.

ஆறு, நதி, நீர்வீழ்ச்சி என்பவற்றில் ஸ்நானம் செய்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது புத்திஜீவிகளது கருத்தாகும்.

எமது அண்டை நாடாகத் திகழுகின்ற பாரதத்தில் உள்ள தாமிரபரணி ஆற்றில் குளித்தால் உடலுக்கு தாமிர உலோகச் சத்து கிடைக்கின்றது.

பொன்னி நதியில் பொன் சத்து கலந்திருப்பதனால் அதில் குளித்தால் உடலுக்கு பொன்சத்து தன்னிச்சையாகவே கலக்க வாய்ப்பு உண்டாகின்றது.

குற்றாலத்தில் மூலிகைச் செடிகள் அதிகமாக வளர்வதால் மூலிகைகளின் ஊடாகப் பாய்ந்து வரும். 'நீர் வீழ்ச்சியில்' குளித்தால் அந்நீர் உடலுக்கு ஆரோக்கியத்தை அளிப்பதுடன் நீண்ட ஆயுளுக்கும் வழிவகுக்கும் என்பது வெள்ளிடை மலை.

இந்தக் காலகட்டத்தில் குளிக்கும் போது உடலில் உள்ள அழுக்கைப் போக்க சவர்க்காரத்தை (SOAP) பயன்படுத்துகின்றோம். எக்காரணம் கொண்டும், சலவைக்கும் உபயோகிக்கும் சோப்பினை உடம்பிற்குப் பயன்படுத்துதல் ஆகாது. தவறுதலாகப் பாவித்தால் சரீரத்துக்கு கெடுதல் உண்டாக நிறைய வாய்ப்புக்கள் ஏற்படலாம். காரணம் துணிக்கு பயன் படுத்தப்படும் சவர்க்காரத்தில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய சோடாக்காரம் (CAUSTIC) ஓரளவு கலந்திருப்பதைக் குறிப்பிடலாம். காரப்பொருள் நம் உடலின் மெல்லிய தோலை அரித்துவிடும். இதனால் பளபளப்பான தோல் வறண்டு விடும்.

தூக்கமின்மையால் அவதியுறுவோர் தயிர்க் குளியலை மேற்கொண்டு வருகின்றனர். தயிரை நன்றாகத் தலையில் ஊற்றி 'மஸாஜ்' செய்தால் குளித்தபின் தூக்கம் தானாக ஓடிவரும்.

**சீயாக்காய் குளியல்**– சீயாக்காய் சீயம் (SIAM) தாய்லாந்து நாட்டில் முதலில் பயன்படுத்தப்பட்டது. தாய்லாந்திற்கு ஆதியில் சீயம் என்றே அழைத்தனர். சீயத்திலிருந்து இறக்குமதி செய்ததனால் இதற்கு சீயாக்காய் என்ற நாமம் சூட்டப்பட்டது.

இனிப் பால் குளியல் பற்றி சிறிது நோக்குவோம். பிரான்ஸ் நாட்டு இளவரசி, எகிப்து நாட்டு பேரழகி 'கிளியோபாட்ரா' ஆகியோர் கழுதைப் பாலில் ஒரு மணி நேரம் உடம்பை ஊற வைத்த பின்னர்தான் குளித்து வந்தனராம். ஏனெனில் கழுதைப் பாலில் குளித்தால் மேனி பொன்போல மினுமினுக்கும் தன்மை பெற்றுவிடுமாம். இன்றைய விஞ்ஞான யுகத்தில் கழுதைப் பால் பெறுவதென்பது சிரமமான விடயமாகும். பச்சைப் பசும் பாலில் குளித்தால் மேனி பளபளப்புத் தன்மை பெற்றுவிடும். இது உடலுக்கும் மிகுந்த குளிர்ச்சியை உண்டாக்க வல்லது.

**சேற்றுக் குளியல் அல்லது மண்வைத்தியம்** – அமெரிக்காவில் நீச்சல் குளம் ஒன்று உள்ளது. ஆனால் தண்ணீருக்குப் பதில் குளம் நிறைய சேறுதான் நிரம்பியிருக்கும். காலை சுமார் ஒன்பது மணியானதும் ஆண், பெண் இருபாலாரும் ஆடைகளைக் களைந்து விட்டு சேற்றில் கழுத்து அளவிற்கு இறங்கிவிடுகின்றனர். தோள்பட்டை வரை களிமண்ணோடு ஐக்கியமான இவர்கள் முகம், தலை ஆகிய உறுப்புக்களிலும் களிமண்ணை அப்பிக் கொள்வார்கள்.

அமெரிக்க மக்களிடம் சேற்றுக் குளியல் பிரபல்யம் அடைந்ததனால் பல மாகாணங்களில் சேற்றுக் குளியல்களுக்காகவே புதிய புதிய குளங்கள் கட்டப்பட்டு வருவதாகவும் அறிய முடிகின்றது. பல ஆண்டுகாலமாக எந்த மருந்துக்கும் மாறாத தேமல் முற்றாக நீங்கி பழைமை நிலைக்கு வந்த ஒருவர் அதற்கு மூல காரணம் இந்தச் சேற்றுக் குளியலேதான் என்று நம்பிக்கை வெளியிடுகின்றார்.

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல்: அரசியலும் சிவில் சமூகமும்



சிவில் சமூகமானது அரசியலுக்கு அப்பாற்பட்டதாயினும் அவ்வப்போது அரசை விழிப்படைய வைப்பதிலும், நல் வழிப்படுத்துவதிலும் கணிசமான பங்கை ஆற்றவல்லது. சிவில் சமூகத்துக்கும் அரசுக்குமிடையிலான நல்லெண்ணமும், நல்லுறவும் ஆரோக்கியமான ஜனநாயகத்தின் அடிநாதம் எனலாம். இந்த வகையில் ரீ.விக்னேஸ்வரன் எழுதியுள்ள ''அரசியலும் சிவில் சமூகமும்'' என்ற இந்த நூல் காலத்தின் தேவையும் கருத்துக் கருவூலமும் ஆகும். சிவில் சமூகமும் நல்லாட்சியும், இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் ஒரு பார்வை, அரசியல் பங்கு பற்றல், உலக பொருளாதாரம், ஒரு அரசியல் பார்வை, உலக பொருளாதார நெருக்கடிகளும் அரசியல் போக்கும், என்ற ஐந்து தலைப்புகளில் கட்டுரைகளைத் தாங்கி, கனதியாக வெளிவந்துள்ளது. எமது சமூகத்துக்குப் பெரும் பயனாக அமையும். இந்த நூலில் நவீன அரசியல் முறைமையில் பெரிதும் பேசப்படுவதாகவும் விவாதிக்கப்படுவதாகவும் அமைகின்றது.

இன்றைய நவீன அரசால் பெரிதும் வேண்டப்படுவதும் எதிர்பார்க்கப்படுவதுமான ஒரு விடயமாக சிவில் சமூகமுள்ளது. சிவில் சமூகம் என்பது அரச குடும்பம், சந்தைத் தாபனங்கள் இரண்டையும் தவிர்ந்த சமூகத்தில் செயற்படும் சகல சமூகத் தாபனங்களின் கூட்டு மொத்தமே சிவில் சமூகம் எனப்படுகிறது. Lodon School of Economics சிவில் சமூகம் பற்றி முன்வைத்த விளக்கத்தின் படி ''பங்கீடு செய்து கொண்ட நலன்கள் நோக்கங்கள் மற்றும் விழுமியங்கள் என்பவற்றின் மீது அதிகாரத்தை பிரயோகிக்காது ஒத்துழைப்புடன் செயற்படும் சமூகத்தையே சிவில் சமூகம்'' என வரையறுக்கின்றது. என்று சிவில் சமூகமும் நல்லாட்சியும் என்ற தலைப்பில் முதல் கட்டுரை தொடங்குகிறது. மக்களின் நலன்கள், உரிமைகள் ஜனநாயகம் என்பவற்றை முதன்மையப்படுத்தியுள்ள இன்றைய உலக வடிவில் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு வகையான அரச முறைமைகள் நடைமுறையிலுள்ளன.

குறிப்பாக நாடாளுமன்ற அரச முறை ஜனாதிபதி, ஜனாதிபதி அரச முறை, ஒற்றையாட்சி அரச முறை, கூட்டாட்சி அரச முறை எனப் பல வகையான அரச முறைமைகள் நடைமுறையிலுள்ள போதும், இவை அனைத்தும் மக்களை முதன்மைப் படுத்தியதாகவும் மக்கள் நலன் பேணல் என்ற தத்துவத்தின் பிரகாரம் தோற்றுவிக்கப்பட்டவையாகவும் உள்ளன என்று ''இலங்கையின் உள்ளூராட்சி அமைப்புக்களும் அவற்றின் தொழிற்பாடுகளும்'' என்ற தலைப்பில் கட்டுரை தொடங்குகின்றது.

இப்படியாக, தொடர்ந்து 3 கட்டுரைகள் வெளிப்படுகிறது. சிவில் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு நல்லாட்சியை உருவாக்குவதில் அதிகாரப் பரவலாக்கம், நிர்வாகப் பரவலாக்கல், செயற்பாடுகள் முதன்மையானவையாக உள்ளன. நல்லாட்சி ஆரோக்கியமான சிவில் சமூகம் தனித்துவமான உள்ளூராட்சி, அமைப்புக்களது செயற்பாடுகளையும் அவற்றின் பயன்களையும் தீர்மானிப்பவையாக மக்களது அரசியல் பங்குபற்றல் அடையாளப் படுத்தப்படுகிறது. அரசியல் சிவில் சமூகம் என்கிற தளத்தில் பல்வேறு வகையான தொடர்புகளைக் கொண்டுள்ளது. இந்த நூல் இதனை விவரித்து நிற்கிறது.

- செல்வர்.

## நூல்: திருவூஞ்சலும், பஜனைப் பாடல்களும்

**வெளியீடு: அல்லாரை வடக்கு பண்டாரித்தறை விக்னேஸ்வர ஆலய சபையினர்.**





பொருள் பொதிந்த இசை கலந்த திருவூஞ்சற் பாடல்களோடும், கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்களோடும் அல்லாரை வடக்கு பண்டாரித்தறை விக்னேஸ்வரப் பெருமானின் அருளொளியை வேண்டி வெளிப்படுத்தும், வகையில் 'திருவூஞ்சலும் பஜனைப் பாடல்களும்' எனும் சிறிய நூல் வெளிவந்துள்ளது.

கவிமணி அன்னதாசனால் ஆக்கப்பட்ட இந்தப் பக்திப் பாமாலை நூலை பண்டாரித்தறை பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் வெளியிட்டுள்ளனர்.

பாடல்களின் இசை கலந்த மொழி இறைவன் திருவடியைத் தேடித் தொழுவோர்க்கு இதய அமைதியைத் தரும் வகையில் சிறந்துள்ளது.

ஆசிரியராய், அதிபராய் சிறந்த விநாயகர் பக்தராய் ஒளிரும் கவிஞரின் இசைஞானம் எழுத்தில் ஒளிர்கிறது. இதனைக் கவிச் சிறப்பு காட்டி நிற்கிறது.

பாடல்கள் ஊஞ்சல் பாடல்களுக்குரிய மேலான மரபுவழி தழுவியதாக எழுதப்பட்டு, அவராலேயே இசைக்கப்பட்டமையால் இந்தப் பாநூலின் பெருமை உயர்ந்ததாகும்.

பக்தியும் ஞானமும் பரவிவரப் பாவெழுதி இசைத்து வருகின்ற இந்த நூலாசிரியரின் ஆக்கம் நிலைத்துயர்ந் தொலிக்கும் என்பது நிச்சயமாகும்.

- மகேஷ்.



சிவராத்திரி தினத்தன்று அல்வாய் சாமணந்தறை ஆலயப் பிள்ளையார் கோயிலில் சின்னராஜா விமலனின் நெறியாள்கையில் ''சங்கரதாஸ் சுவாமிகள் நாடகசபா'' வழங்கிய ''பவளக்கொடி'' இசை நாடகம் இடம்பெற்றது. (ம)

## கலைஞர் வேல்ஆனந்தனுக்கு நாட்டிய வாரிதி விருது

மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக அரச பணியில் அவர் இருந்தாலும் இன்று வரையான தனது கலை வாழ்வுக் காலம் வரை அரங்காற்றுகையாளர் என்ற தடத்திலிருந்து பிறளாமல் தொள்ளாயிரம் அரங்குகள் வரை அவரது சுவடுகள் தரிசித்தமை பெரும் சாதனையாகும்.

இலங்கை அரசினால் ஏற்கனவே அவருக்கு வழங்கப்பட்ட கலைச்செம்மல் , கலாபூஷணம், கலாரத்தினா என்ற அங்கீகார விருதுகள் பட்டியலில் கடந்த மாதம் 26 ஆம் திகதி மத்திய கலாசார அமைச்சின் சார்பாக கலாசார அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க அவர்கள் கொழும்பு ஜன கலா நிலையத்தில் வைத்து வழங்கிய நாட்டிய வாரிதி உயர் நிலை விருதும் உள்ளடங்குகிறது. இதற்கு முற்பட்ட காலத்தில் கல்கத்தா ஐ.பி.ரி.ஏ நிறுவனம் வழங்கிய கலாநிகேதன் விருது தமிழ் நாடு குன்றக்குடி ஆதினம் வழங்கிய கலைத்தூது விருதுகள் உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

**தக்கார் மாண்பு**

அவரது கீழைத்தேய முறை ஆடற்கதை ஆக்கங்களின் பட்டியல் மிக நீளமானது, காத்திரமானது, பொருள் பொதிந்தது, தவிரவும் மற்றைய ஆடல் வகைகள் போன்று இதுவும் ஒரு தனித்துவமான கற்கை நெறிகுட்பட்டது என்பதுடன் அதற்கான வரை விலக்கணத்தையும் அவர் நிறுவியுள்ளார்.

அந்த வகையில் அழகியல் அந்தஸ்துக் குன்றாத ஆடற்கதை, ஆக்கங்களுக்கூடாக நம்மிடையே உள்ள சீதனப்பிரச்சினை, சாதிப் பிரச்சினை, இனப் பிரச்சினை என்று அவர் தொட்டுக்காட்டி அழுத்திக்கூறாத செய்திகள் எதுவுமில்லை.

அது தான் கலை கலைக்காக அல்ல அது மக்களுக்காக என்ற அவரது கலை வாழ்வின் இலக்கும் சாதனையுமாகும்

– வேதாரண்யன்

## புலமைமிக்க ஆசான் அமரர் கணேசன்



ஆங்கிலத்தில் புலமைமிக்க நல்லாசான் ஒருவரின் நினைவுகளை மீட்டிப் பார்க்கிறேன். வடமராட்சி மண் தந்த எண்ணற்ற அறிஞர் பெருமக்களில் ஒருவரான அமரர் செல்லையா கணேசன் தனது 82 ஆவது அகவையை நிறைவு செய்த பின் கடந்த 2011 ஆண்டில் இறுதியில் ஆங்கிலப் புலமையாளர்களை உருவாக்கிய மன நிறைவில் பூவுலகு துறந்தார் அமைதியான சுபாவம், கோபம் என்றால் என்ன என்று தெரியாத பண்பு, புன்முறுவல் பூத்த முகம். ஆங்கில மொழி மூலமாக அறிவுசார் உலகத்தை மாணவர்கள் தரிசித்து வாசிப்புப் பழக்கத்தின் ஊடாகச் சமூகம் உயரவேண்டும். மாணவர் நற்பண்புள்ள சமூக விழுமியம் வாய்க்கப் பெற்றவர்களாக உயர வேண்டுமென்ற ஆவல்.

இவை தான் அமரர் செ. கணேசன் பற்றிய முகவரியின் வரிகளாகக் கூறக்கூடியவை. முன்னுதாரணம் மிக்க ஆசிரியர் சமூகத்தின் அடையாளமாக வாழ்ந்தவர்களில் இவரும் ஒருவர்.

இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டிற்கு முன்பே ஓய்வு பெற்ற தலைமுறையில் இவரும் ஒருவர். இன்று போல அன்று ஆசிரியர்களுக்கு ஓப்பீட்டளவில் உயர்வான வேதனம் வழங்கப்படவில்லை .

**நீத்தார் நயப்புரை**

ஆயினும் தனது ஆசிரியர் சேவையினை மலையகத்தின் பண்டாரவளையில் ஆரம்பித்து ஓய்வு ஒழிச்சலின்றி கற்பித்தார்.

சில வருடங்களின் பின்பு தனது தாய் மண்ணான வடமராட்சி அல்வாய் மண் வந்தார். தேவரையாளி இந்துக் கல்லூரி, சிறீலங்கா வித்தியாசாலை, வதிரி வடக்கு ஜீ.ரி.எம்.எஸ், திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ரீயூசன் தெரியாத தலைமுறை மாணவர்களை அர்ப்பணிப்புடன் கற்பித்து கல்விப் பணி புரிந்தார்.

தான் வாழ்ந்த கிராமத்தின் அரசடி விநாயகர் ஆலயத்திலும் இளங்கோ சனசமூக நிலையத்திலும் தலைமைப் பதவிகளையும் பொறுப்பு மிக்க உயர் பதவிகளையும் வகித்து சிறந்த சமூக சேவையாற்றினார். அவரது இரங்கல் கூட்டம் உடுப்பிட்டி, அல்வாய், சுவிற்சிலாந்து என பல இடங்களிலும் நடந்தமை சமூகப் பணிகள் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும்

**வே. தபேந்திரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் சொன்னால் என்ன?

பிறரது விமர்சனங்களால் பாதிக்கப்படாதீர்கள்; ஒரு பாதுகாப்பு வளையம் போட்டுக் கொள்ளுங்கள் என்று ஒரு முறை சொன்னேன். அதற்காக யார் எது சொன்னாலும் கேட்க வேண்டாம் என்பது பொருள் அல்ல. 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்....'' என்று வள்ளுவர் எழுதினார். அப்படியானால் யார் யார் சொன்னாலும் கேளுங்கள் என்று தானே பொருள் கொள்ள வேண்டும்.

தரமான யோசனைகளைத் தள்ளக்கூடாது.... கொள்ள வேண்டும். காதுகளை அடைத்துக் கொள்வதோ கூடாது! கூடவே கூடாது.

உங்கள் கண்ணும் காதும் திறந்திருந்தால், கருத்தும் இதயமும் திறந்திருந்தால், எங்கிருந்தோ கேட்கும் யோசனைகள் எவ்வளவு பயன் தரும் என்பது புரியும். பலமுறை தேர்தலில் தோல்வியைத் தழுவிய ஆப்ரஹாம் லிங்கன், ஜனாதிபதியாக முதல் முறை வெற்றி பெற்றார். நன்றி தெரிவிப்புக் கூட்டத்தில் ஒரு சிற்றூரில் பேசும்போது, அந்த ஊரில் உள்ள ஒரு சிறுமியின் பெயரைச் சொல்லி மேடைக்கு அழைத்தார். தான் இந்த முறை பெற்ற வெற்றிக்குக் காரணம் அந்தச் சிறுமி என்று புகழ்ந்தார்.

அப்படி, அந்தச் சிறுமி லிங்கனுக்கு என்ன உதவி செய்தாள், வெற்றி பெற....?

ஆப்ரஹாம் லிங்கன் ஒல்லியான உடல்வாகு உடையவர்: அவர் கன்னங்கள் ஒட்டிப் போய் முகத்தில் பள்ளங்கள் இருந்தன: அம்மைத் தழும்புகள் வேறு அப்போது அவர் தாடி வளர்க்கவும் இல்லை: முகம் விகாரமாக இருந்தது. இதை உற்றுக் கவனித்த சிறுமி, அவருக்கு ஓர் ஆலோசனை எழுதி இருந்தாள். '' தாடி வளர்த்துக் கொண்டால் உங்கள் முகம் அழகாக, கம்பீரமாக இருக்கும். இப்போதுள்ள உங்கள் முகத்தைப் பெண்கள் விரும்புவதில்லை'' என்ற உண்மையை அவள் வெளிப்படுத்தி இருந்தாள். லிங்கனின் தேர்தல் பொறுப்பாளர்கள் அவளது கடிதத்தைக் குப்பைக் கூடையில் போடும் சமயத்தில், அங்கு வந்த லிங்கன், அந்தக் கடிதத்தை எடுத்து படித்தார். அந்தச் சிறுமியின் யோசனையை ஏற்றுத் தாடி வளர்த்தார். '' கம்பீரமாக, களையாகக் காட்சியளித்து ஜெயித்தார். அதற்காக அந்தச் சிறுமியைத் தேடி நன்றி தெரிவித்தார் லிங்கன்.

நமது பெரிய பெரிய சிக்கல்களுக்குப் பெரிய பெரிய நிறுவனங்கள், பெரிய பெரிய மருத்துவமனைகள், பெரிய பெரிய மனிதர்கள் தான் யோசனை சொல்ல வேண்டும் என்பதில்லை. எங்கிருந்தோ வரும் எளிய யோசனைகள் பெரிய வெற்றிகளை விளைவிக்கும்.

ஒரு பற்பசைக் கம்பெனியில் விற்பனையை அதிகரிப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நிர்வாகவியல், பொருளாதார நிபுணத்துவம் வாய்ந்த மார்க் கெட்டிங் மன்னர்கள் பலர் வந்திருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனை சொன்னார்கள். விளம்பரத்தைக் கூட்டுவது.... இலவச இணைப்புத் தருவது.... பரிசுக் கூப்பன் வைப்பது.... போட்டிகள் நடத்துவது என்று அதிக செலவாகும் யோசனைகளை அள்ளி விட்டனர். நிர்வாகம் அவற்றை ஏற்கத் தயாராக இல்லை. அப்போது அங்கு பணி நிமித்தம் நின்ற கடைநிலை ஊழியர் ஒருவர், ஒரு சின்ன யோசனை சொன்னார். பற்பசை வெளிவரும் டியூபின் வாயைச் சிறிது அகலப்படுத்தலாம் என்றார்.

சுற்றி இருந்தவர்கள் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். இதென்ன மடத்தனம்? இதெப்படி விற்பனையைக் கூட்டும்? கேலி பேசினர். ஆனால் அவர் சொன்ன யோசனையை நிர்வாகம் ஏற்றது.... அது அபாரமான பலன் அளித்தது. எப்படி?

வாய் பெரிதான பிறகு வழக்கம் போல், பின் பக்கம் அழுத்தும்போது கூடுதலான பசை வெளியேறியது! முப்பது நாள்கள் ஒரே பற்பசையை பயன்படுத்தி வந்தவர்களுக்கு இருபத்து ஐந்து நாள்களில் பசை தீர்ந்து போனது.... கூடுதலாக வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. விற்பனை கூடிவிட்டது. சின்னச் சின்ன யோசனைகளை அலட்சியப் படுத்தாமல் முடிவெடுத்தால் வெற்றி நிச்சயம்.

இன்னொரு சுவையான நிகழ்ச்சி..... அமெரிக்காவின் பிரபலமான ஹோட்டல் ஒன்றில் எல்லாம் சிறப்பாக இருந்தன. ஆனால் பல மாடி கொண்ட கட்டடத்தில், மேலே போய் வரும் லிஃப்ட் வெகு மெதுவாக இயங்கியது பலருக்குப் பிடிக்கவில்லை. வெளியே லிஃப்டுக்குக் காத்திருப்பவர்கள் கோபம் அடைந்தார்கள். புகார் புத்தகத்தில் அதே குறை திரும்பத் திரும்ப எழுதப்பட்டது. லிஃப்டை மாற்றினால் ஹோட்டலுக்குப் பல லட்சம் செலவாகும். விரைவுபடுத்த வாய்ப்பே இல்லை. பல முறை ஆலோசனைக் கூட்டம் நடத்தியும் பலனே இல்லை. முடிவில் ஒரு சாதாரண ஹோட்டல் ஊழியர் லிஃப்டின் உள்ளேயும் வெளியேயும் முகம் பார்க்கும் பெரிய கண்ணாடிகளைப் பொருத்தச் சொன்னார். உள்ளிருக்கும் நபர்கள் தங்கள் முகத்தை திரும்பித் திரும்பிப் பார்க்கும் சந்தோசத்தில் லிஃப்டின் தாமத்தை மறந்த னர். வெளியே இருப்பவர்கள் காத் திருக் கும் நேரத்தில், தங்கள் தோற்றத் தைச் சரிசெய்து கொள்வதில் செல வழித்தனர். புகார்ப் புத்தகம் தப்பித்தது!



யார் சொன்னால் என்ன? உங்கள் காதும் கருத்தும் கூர்மையாக இருந்தால் வெற்றி நிச்சயம்.

சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## ஏன் இந்தப் பாரபட்சம்?

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக பல கற்கை நெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இது வரவேற்கத்தக்க விடயமாகும். அந்த வகையில் கலைமாணிக் கற்கை நெறியும் குறிப்பிடத்தக்கது. அதாவது கலைமாணிக் கற்கை நெறிக்குரிய காலத்தை விட இரு மடங்கு காலத்துக்கு மேலாக வெளிவாரி மாணவர்கள் இழுத்தடிக்கப்படுகின்றனர் . ஆனால் மற்றைய பல துறைகள் அதாவது வர்த்தகத் துறையினருக்கு இது விதிவிலக்கு ஆகும். வணிகமானி மாணவர்களையும் குறிப்பிட்ட காலத்துக்குள் பட்டதாரியாக வெளியேற்றுகின்றனர். அவர்களுக்கு ஒழுங்காக பரீட்சைகள் நடைபெற்று பரீட்சைப் பெறுபேறுகளும் குறிப்பிட்ட காலத்துக்குள் வெளியிட்டு அவர்களை குறிப்பிட்ட காலத்துக்குள் பட்டச் சான்றிதழ் கொடுத்து வழி அனுப்பும் நிர்வாகம் ஏன் கலைத்துறைக்கு மட்டும் இந்தப் பாரபட்சம், இந்த நடைமுறை வேண்டும் என்று நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

வரலாற்று ரீதியாகவும் இன்றும் பல நாடுகளில் கலைத்துறைக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டு, அவர்களை உயர் பதவிகளில் அமர்த்தி வருவதாக கூறப்படுகின்றது. அப்படியிருக்கையில் எமக்கு ஏன் ? இந்த நிர்க்கதி நிலை.

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பிரிவில் பதிவு மேற்கொண்டு, பதிவிற்குரிய ஒழுங்கில் முறையாகப் பரீட்சை எழுதி, பூரணமாகச் சித்தியடைந்து இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி, ஒரு வருடம் ஆகியும் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் வெளியாகவில்லை. எந்தவொரு பரீட்சையிலும், இறுதிப் பெறுபேறுகளே முக்கியம் பெறுகிறது. ஆனால், கலைமாணி இறு திப் பெறுபேற்றிக்கு இரண்டு வருடங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

அதாவது இறுதிப் பரீட்சைக்கு 2010 ஆம் ஆண்டு சித்திரை மாதம் விண்ணப்பம் கோரியிருந்து. அப் பரீட்சை ஒரு வருடம் கழித்து 2011 ஆம் ஆண்டு வைகாசி மாதம் நடத்தப்பட்டு, 2012 ஆம் ஆண்டு பிறந்து சில மாதங்கள் ஓடிவிட்டன. பரீட்சைப் பெறுபேறுகள் இன் னமும் வெளியாகவில்லை. ஆனால் வர்த்தகத் துறைகளுக்கு குறிப்பிட்ட அதே ஆண்டில் பரீட்சை விண்ணப்பம் கோரி, குறித்த ஆண்டில் பரீட்சை நடைபெற்று பெறுபேறுகள் வெளியாகி அவர்களுக்கு அண்மையில் பட்டச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுவிட்டன.

ஆனால், கலைமாணிப் பரீட்சைகள், பரீட்சைப் பெறுபேறுகளை ஏன் காலப் கிடப்பில் போட்டுவிடுகின்றனர். இந்த நடைமுறையை கலைமாணி கற்கை நெறிக்கும் மேற்கொண்டால் அவர்களும் ஒரு சிறந்த பட்டதாரியாக வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, மேற்படிப்பையே நம்பி உள்ள மாணவர்கள் உயர்கல்விக்கும், சமூக வாழ்க்கைக்கும், தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இந்தப் பெறுபேறுகள் வெளியாகாமை பெரிதும் தடையாக இருப்பது வெளிப்படை உண்மை. கற்கை நெறிகள், பட்டங்களே அதாவது கல்வியே ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே மற்றைய துறைகள் போல் கலைத்துறைக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பரீட்சைப் பெறுபேறுகளைத் தாமதிக்காது மிக விரைவாக வெளியிட்டு உதவுமாறு பரீட்சைகள் நிர்வாகத்திடம் கோரி சம்பந்தப்பட்ட நிர்வாகம் கூடிய சிரத்தையில் கவனம் எடுத்து அவர்களது எதிர் கால வாழ்க்கைக்கு உதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஜீ.எல்.தேவி, யாழ்ப்பாணம்.

## தமிழர்களுக்கு விடிவு கிடைக்குமா?

யுத்தம் முடிவுக்கு வந்த பின் அண்மைக் காலமாக சிங்கள முஸ்லிம் அரசியில்வாதிகள் வடக்குக் கிழக்கில் இருந்து வெளியேறிய சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் வடக்கு கிழக்கில் குடியமர்த்த வேண்டுமெனக் கேட்டு வருகிறார்கள். [illegible] துணையுடன் குடியேற்ற முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

1958 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தமிழ் மக்கள் இந்த அவலத்தை அனுபவித்துக் கொண்டுதான் வருகிறார்கள். இவர்களை எல்லாம் 58 இற்கு முன்பிருந்த இடங்களில் குடியமர்த்த இவர்களால் முடியுமா? 58 இன் வடுவாக பரந்தன் முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள தருமபுரம் கிராமம் உள்ளது. 50 வருடங்கள் கடந்த நிலையிலும் சிலர் அந்த அனர்த்தத்தில் இருந்து மீள முடியாத நிலைமையிலேயே இருக்கின்றார்கள்.

1958 இனக் கலவரம் மதவாச்சி தொடங்கி அம்பாந்தோட்டை வரையிலான நகர, கிராமப் பகுதிகளில் வாழ்ந்த அத்தனை தமிழர்களும் அரசின் துணையுடன் சிங்களக் காடையர்களால் துன்புறுத்தப்பட்டு துரத்தியடிக்கப்பட்டார்கள் பல பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கும் உட்படுத்தப்பட்டனர். வடக்கிலும், கிழக்கிலும் வாகனங்களில் இறக்கிவிடப்பட்டார்கள்.

பௌத்த மதம் கோலோச்சும் ஒரு நாட்டில் இத்தனை அக்கிரமங்களும் அரங்கேற்றப்பட்டன . இவையெல்லாம் ஜனநாயகவாதிகளின் கண்களுக்குத் தெரிவதில்லை. ஒடுக்கப்படும் இனம் ஆயுதம் ஏந்தினால் பயங்கரவாதம். ஆயுதமுனையில் ஒடுக்கப்படுவது ஜனநாயகம். இந்த அநீதியைக் கேட்பார் எவரும் இல்லை.

புலிப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் ஆக்கபூர்வமான ஒரு தீர்வை முன்வைக்க முடியாத வீணர் புலிப்பூச்சாண்டி காட்டிக் காலத்தை வீணடிப்பதற்கு சர்வதேசமும் மனித உரிமை ஜனநாயகம் பேசும் வீணர்களும் துணைபோவது, அமைதியை நிம்மதியைத் தேடும் தமிழ் மக்களின் உணர்வுகளை சாகடிப்பதாகவே உள்ளது. இவர்கள் மீண்டுமொரு புலி வரவுக்கு வித்திடுகிறார்களா. இன்று தமிழர்கள் நாம் இறைவனை மட்டுமே நம்பி வாழ வேண்டிய நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறோம் எமக்கு விடிவு கிட்டுமா?

தமிழ்குரல்

## இலகுபடுத்துவார்களா?

மன்னார் நகரப் பகுதியில் உள்ள இலங்கை வங்கியில் கடந்த பல நாள்களாக ஏ.ரி.எம். சேவை இயங்காததால் பலர் ஏமாற்றம் அடைந்தனர்.

புதியதொரு இயந்திரத்தைப் பூட்டினால் மக்கள் நலமடைவர். அல்லது பழுதான இயந்திரத்தைச் சரியாக இயங்க வைப்பது சாலச்சிறந்து.

கடந்த 11 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் 10 மணி வரை வங்கி யின் உள் பகுதியில் உள்ள கணினிகள் இயங்க மறுத்ததால் பத்து மணிக்குப் பின்னரே தமது அலுவல்களை தொடங்கினர். பணத்தை புத்தகத்தில் வரவு செய்தனர். எனவே அபிமானமான இலங்கை வங்கி தமது வாடிக்கையாளரின் அசௌகரியத்தை காணாதிருப்பது ஏன்?

பேசாலைக் கிராமம் ஒரு பெரிய கிராமமாகும் வருமானம் கொண்ட ஒரு கிராமம் அத்துடன் வங்கித் தொடர் பாடல் கூடிய கிராமமுமாகும். எனவே அங்கு ஒரு ஏ.ரி.எம். சேவையைப் பாது காப்புடன் நிறுவினால் இப்பகுதி மக்க ளுக்குப் பயனுள்ளதாக அமையும். அதே போல மன்னார் நகர்ப் பகுதியில் கச்சேரி யைச் சார்ந்தோ அல்லது வைத்தியசாலைப் பகுதியிலோ ஏ.ரி.எம். சேவை ஒன்றை அமைத்தால், மக்கள் இலகுவாக பணத்தை எடுக்கக் கூடியதாக இருக்கும்.

யாழ். நகரில் வைத்தியசாலை வீதியை அண்மித்த பகுதிகளிலும் ஸ்ரான்லி வீதியிலும் ஏ.ரி.எம். இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுபோல இலங்கை வங்கித் தலைமையகம் பரிசீலனை செய்து மக்களுக்கு இலகு சேவையை வழங்கும் என எதிர்பார்க்கிறோம்.

விடத்தல்தீவு கிறிஸ்ரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணப்பெண் அலங்காரம்

## Bridal make up



மணப்பெண் அலங்காரம், தற்சமயம் மிகவும் Advanced முறையில் செய்யப்படுகிறது. இந்த மேக்கப் பார்ப்ப தற்கு மிகவும் இயற்கையாகவும், அழகாகவும் நீண்ட நேரம் முகத்தில் படிந்து ஒரு மென்மையான தோற்றத்தைக் கொடுக்கும். இந்த மேக்கப்பைச் செய்து கொள்வதற்கு முன்பே, நாம் முகத்தைப் பராமரித்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். ஒவ்வொருவரினதும் சருமம் வெயில், காற்று, தூசு என்பவற்றால் பாதிக்கப்பட்டு, மிகவும் கடினமாகவும் சொரசொரப்பாகவும் இருக்கும். நாம் எவ்வளவு தான் சோப், face wash என்பவற்றால் முகத்தை கழுவினாலும், சருமத்தை முறையாகப் பராமரித்துக் கொள்ளவிட்டால், சருமம் எமக்குத் தெரியாமலே மிகவும் கடினமானதாக மாறிக் கொண்டுவரும். இப்படிக் கடினமான சருமத்தில் நாம் மேக்கப் போட்டுக் கொள்ள முடியாது. அப்படிப் போட்டால் முகத்தில் நன்றாகப் படியாமல் முழு மேக்கப்பையுமே மாற்றி விடும். இதனால் பெண்கள் தங்கள் திருமண நாளுக்கு முன் அவரவர் முகத்தை தயார் படுத்திக் கொள்வது மிக மிக அவசியம். திருமணத்துக்கு முன்பே உங்களை அலங்காரம் செய்யும் அழகுக் கலை நிபுணரின் ஆலோசனையைப் பெறுவதும் மிகமிக முக்கியம். இப்படி உங்களை ஒரு நல்ல அழகான மணப்பெண்ணாக அலங்காரம் செய்து கொள்வது உங்கள் கைகளில் தான் இருக்கிறது.

முதலில் மணப்பெண் மேக்கப்புக்கு மிகவும் முக்கியமானது foundation cream. இந்த foundation மிகத் தரமானதாக இருக்க வேண்டியது மிகவும் அவசியமானது. அதை விட, அது மணப்பெண்ணின் நிறத்துக்கும், சருமத்துக்கும் அமைவாக ஒத்துப் போக வேண்டும். இதுவும் மிக அவசியமானதாகும். அத்துடன் எமது நாட்டுக்கு ஒத்துப் போகும் foundation ஆகவும் இருக்க வேண்டும். வெளிநாடுகளில் உபயோகிக்கும் cream கள் அநேகமாக எமது நாட்டுக்கு ஒத்துப் போவதில்லை. மேக்கப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து வாங்குவதாக இருந்தாலும் அது எமது நாட்டுக்கு ஒத்துப் போகக் கூடியவையாக இருக்க வேண்டும். எமது அயல் நாடான இந்தியாவுக்கும், எமது நாட்டுக்கும் வெப்ப தட்ப நிலைமை ஒரே மாதிரி இருப்பதால் அந்த நாட்டின் எல்லா விதமான cream வகைகளும், எமது சருமத்துக்கு ஒத்துப் போகக் கூடியவையாக இருக்கும். எந்தப் பொருள்களை எங்கு வாங்கினாலும், நாம் தரமானதாக வாங்குவது மிகவும் அவசியம். இதில் மேக்கப் பொருள்கள் வாங்கும் போது மிகவும் அவதானமாக வாங்க வேண்டும். இதற்கு மேக்கப் கலைஞர்கள் இந்தத் துறையில் மிகவும் அறிவும் அனுபவமும் உள்ளவர்களாக இருப்பது அவசியம். மேக்கப்பைத் தொழிலாகக் கொண்டவர்கள், கண்டிப்பாக இந்தத் மேக்கப் துறையில் நல்ல அறிவுள்ளவர்களாக இருப்பது மிக மிக அவசியம். அரை குறை அறிவுடன் மேக்கப் ஐத் தொழிலாகச் செய்வது மிகவும் தவறான செயலாகும். எத்தனையோ கனவுகளுடனும், எதிர்பார்ப்புகளுடனும் தம் திருமண நாளை எதிர்கொள்ளும் பெண்கள், தங்கள் மணப்பெண் அலங்காரமும் மிகவும் அழகாக அமைய வேண்டுமென்று மிகவும் விரும்புவார்கள். அவர்களின் விருப்பத்திற்கு அமைய அவர்களைத் திருப்திப்படுத்து வதே ஓர் அழகுக்கலை நிபுணரின் தலையாய கடமையா கும். இதைக் சரிவர செய்யாவிட்டால், பாதிக்கப்படுவது குறிப்பிட்ட பெண்கள் மட்டுமே. இதனால் மேக்கப் கலைஞர்கள் இதைக் கருத்தில் கொண்டு மிகவும் பொறுப்புடன் தொழில் செய்வது அவசியமாகும்.

திருமண மேக்கப்பில் foundation எவ்வளவு முக்கியம் என்பதைக் குறிப்பிட்டேன் அதே போல் foundation போட்ட பின் அதனை சீல் பண்ணுவதும் மிகவும் முக்கியம். இல்லா விட்டால் வியர்த்தவுடன் foundation முழுவதும் கலையத் தொடங்கிவிடும். இதற்கு நாம் உபயோகிக்கும் face powder மிகவும் தரமானதாக இருக்க வேண்டும். அதனால் இந்த மேக்கப்க்கு பொருத்தமான face powder போடா விட்டால் முகத்தில் powder படியாமல் போய்விடும். உரிய முறையில் face powder போட்ட பின் தான் நாம் மேக்கப் இற்குரிய மீகுதி வேலைகளைச் செய்ய வேண்டும். Rouge உபயோகிக்கும் போது அதனை முகத்தில் அதற்கென கன்னத்தில் குறிப்பிட்ட இடத்தில் apply பண்ண வேண்டும். அவரவர் சரும நிறத்துக்கு ஏற்ற வண்ணங்களில் செய்யப்பட வேண்டும். பின் Eye shadow கண் இமைகளில் பூசப்படும் போது இதுவும் அவரவர் கண்களுக்கு ஏற்ற வகையில் பூசப்பட வேண்டும். அதுவும் கலை நயத்துடன் அழகாகப் பூச வேண்டும். பின் Eye liner இதுவும் கண்டிப்பாக water proof ஆக இருப்பது அவசியம் . இதை அழகாக முறையாக பூசுவதும் அவசியம். கண்களைச் சுற்றி அழகான கோடு போல் கீற வேண்டும். பின் lipstick ஐ அதுவும் மணப்பெண்களுக்கு அழகான சிறிது light ஆக apply பண்ண வேண்டும். முதலில் out line மூலம் உதடுகளை நல்ல shape ஆகக் கீறி, பின் நல்ல அழகாக அவரவர் நிறங்களுக்கு ஏற்ற வகையில் apply பண்ணி விட வேண்டும். எல்லாம் முடிந்த பின் finishing spray அடித்து முடித்து விட வேண்டும். இப்படி முறையாகச் செய்யப்படும் மேக்கப், திருமணப் பெண்ணை அழகு தேவதையாக தோற்றம் அளிக்கச் செய்யும் அத்துடன் நீண்ட நேரம் அழகாக முகத்தில் படிந்து நிற்கும். இப்படி அழகாகச் செய்யப்படும் மேக்கப் மூலம், உங்கள் திருமண அலங்காரத்தில் Natural ஆகவும், அதே நேரம் கவர்ச்சியாகவும் தோற்றமளிக்க முடியும்.

திருமதி யோகினி சண்முகநாதன்
அழகுக் கலை நிபுணர்

## பளிச்சென்று முகம் பொலிவு பெற



நம் உடல் நிறம் எத்தகையதாக இருந்தாலும் பொலிவுடன் திகழவேண்டும் என எண்ணுவது ஆண், பெண் இருபாலருக்கும் பொருந்தும். அதிகம் செலவாகக் கூடாது; முகமும் பளிச்சென இருக்க வேண்டும் என விரும்புகிறீர்களா? இதோ உங்களுக்காக சில முக அழகுக் குறிப்புகள்:

* பீட்ரூட்டை சிறு துண்டுகளாக்கி அரைத்து சாறு எடுத்து முகத்தில் தடவி 5 நிமிடம் மெதுவாக மசாஜ் செய்யவேண்டும். 10 நிமிடங்களுக்குப் பிறகு லேசாகக் கழுவி விட்டு, கடலை மாவால் மென்மையாகத் தேய்த்து பின் கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும்.
* சந்தனம், 4 சொட்டு ரோஸ்வோட்டர், 5 சொட்டு பால் கலந்து முகத்தில் பூசி விட்டு 15 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால் முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் நீங்கி பொலிவாக இருக்கும்.
* காலையில் தினமும் ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு கரண்டி தேன் கலந்து குடித்து வந்தால் முகம் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.
* பயிற்றம் மா, கஸ்தூரி மஞ்சள் சம அளவு எடுத்து தயிர் கலந்து முகத்தில் பூசி 30 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இது ஒரு சிறந்த ஃபேஷியல்.
* வறண்ட சருமம் உள்ளவர்கள் பாலாடையை முகத்தில் பூசி 15 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி வந்தால் வறண்ட தன்மை மாறி முகம் பளபளப்பாகும்.
* துருவி வேக வைத்து மசித்த கேரட்டை முகம், உடலில் மசாஜ் செய்தால் சருமம் மிருதுவாவது மட்டுமல்லாமல் பொலிவுடனும் திகழும்.
* பேரிச்சம்பழத்தை அரைத்து வெண்ணை சேர்த்து கண்ணை சுற்றி பூசினால் கருவளையம் மறையும்.
* பாலுடன் எலுமிச்சைச் சாறு கலந்து, திரிந்து போகும் பாலை முகத்தில் பூசி வந்தால் முகம் பொலிவாகும். இது ஒரு வகையான ப்ளீச்சிங் முறை.

- ஹரிஷ்ரா

# வீட்டில் இருந்தபடியே உங்கள் அழகைப் பேண இதோ சில எளிய வழிமுறைகள்



அழகு என்பது எல்லோருக்கும் மிகவும் பிடித்த விடயம். நாம் அதற்காக எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம் அழகு நிலையங்களைப் பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் எல்லோருக்கும் அழகு நிலையங்களுக்கு அடிக்கடி போக முடியாது. அதனால், தினசரி வீட்டிலிருந்தபடியே சில எளிய வழிமுறைகள் மூலமாக உங்கள் இயற்கையான அழகைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். இரவு உறங்கச் செல்லு முன் குறைந்தது ஒரு பத்து, இருபது நிமிடங்கள் இதற்கு ஒதுக்கினால் போதுமானது.

### பாதம்

நாள்தோறும் வேலை முடிந்து வீட்டுக்குச் சோர்வாக வருவீர்கள் அல்லவா? வந்ததும் ஒரு பெரிய பாத்திரத்தில் நல்ல நறுமணமுள்ள குளியல் உப்பை (bath salts) வெதுவெதுப்பான தண்ணீரில் கலந்து, உங்கள் பாதங்களை அதில் ஒரு பத்து நிமிடம் ஊற வைக்க வேண்டும். சும்மா இருப்பது போரடித்தால், நல்ல ஸ்க்ரப்பர் (scrubber) கொண்டு குதிக் காலைத் தேய்க்கலாம். ஒரேஞ் ஸ்டிக் கொண்டு கால் நகங்களில் படிந்துள்ள அழுக்குகளை அகற்றலாம். பின்னர் கால்களைத் தண்ணீர் அல்லது சோப்பால் நன்கு கழுவி விட்டு, கோல்ட் (cold cream) கிரீம் அல்லது மாய்ச்சரைசர் போட வேண்டும். இதனால் உங்கள் பாதங்கள் மிருதுவாகவும் பளிச்சென்றும் இருக்கும்.

### முகம்

இரவு உறங்கச் செல்லுமுன் நாள் முழுதும் முகத்தில் படிந்துள்ள அழுக்கை அகற்றுவது முக்கியமான வேலையாகும். எண்ணைப் பசையுள்ள சருமத்தை வோல்நட் ஸ்க்ரப் கொண்டும், உலர்ந்த மற்றும் சென்ஸிடிவ் சருமத்தை மிருதுவான பேபி ஒயில் கொண்டும் துடைக்கலாம். அவ்வாறு துடைக்கும் போது உங்கள் கைகளின் அசைவு வட்ட வாக்கில் இருக்க வேண்டும். பின்னர் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிவிட்டு தரமான நைட் கிரீம்களை உபயோகப்படுத்த வேண்டும். எளிதான மாய்ஸ்ச்சரைசரும் உபயோகப் படுத்தலாம். இது உங்கள் சருமத்தை மென்மையாக வைத்திருக்க உதவுகிறது. இந்த மாய்ஸ்ச்சரைசரை முகம், கைகள், கழுத்து மற்றும் கண்களுக்குக் கீழேயும் உபயோகிக்கலாம்.

### தலைமுடி

இரவில் எண்ணைய் தேய்த்துவிட்டுக் காலையில் ஷம்பு தேய்த்துக் குளித்தால் முடிக்குக் கூடுதல் ஊட்டச்சத்து கிடைக்கும். ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் [illegible] வைத்து அந்தப் பாத்திரத்தி[illegible]ளே, ஒரு [illegible] எண்ணையை (ஒலிவ் ஒயில், ஆல்மண்ட் ஒயில் அல்லது சாதாரண தேங்காய் எண்ணைய்) எடுத்துக் கொண்டு சூடுபடுத்த வேண்டும். லேசான சூடு போதுமானது. சூடான எண்ணெயை உங்கள் விரல்கள் கொண்டு தலையில் மசாஜ் செய்ய வேண்டும். கால்களைப் பராமரிக்க அம ரும் அந்த நேரத்தில் இதையும் செய்து முடித்தால் உங் கள் நேரம் மிச்சமாகும்.

### கண்கள்

சிலருக்கு புருவத்தில் தேவையான அளவுக்கு முடி இருக்காது. இதற்கு விளக்கெண்ணெயை கொஞ்ச மாக எடுத்து புருவ முடிகளிலும், கண்முடிகளிலும் தேய்த்து வந்தால், முடி அடர்த்தியாக வளரும். சோர்வான கண்களுக்கு, ரோஸ் வாட்டரில் நனைத்த கொட்டன் பேட் , வட்டமாக வெட்டிய வெள்ளரித் துண்டு (குளிர் சாதனப் பெட்டியிலிருந்து முன்னதாக வெளியில் எடுத்து வைத்திருக்க வேண்டும்.) போன்றவற்றை கண்களின் மேல் வைத்துக் கொள்ளலாம். நன்றாகப் பொடியாக நறுக்கிய வெள்ளரித் துண்டுகளையோ, அல்லது அதனுடன் ரேட் ஜூஸைக் கலந்தோ கண்களுக்கு அடியில் தடவி வந்தால், கருவளையங்கள் மறையும்.

### உதடுகள்

தினமும் சிறிதளவு வஸ்லின் (Vaseline) எடுத்து உங்கள் உதடுகளில் தடவி வந்தால், மென்மையாகவும், வெடிப்புகள் இல்லாமலும் இருக்கும்.

வெளியில் மற்றும் விசேடங்களுக்குச் செல்லும் போதுதான் மேக்கப் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டு, தினசரி இரவிலும் இந்த எளிய வழிமுறைகளை உபயோகித்தால், நீங்களும் ஒரு தேவதைதான்.

ஆர்.ராகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org